பக்கங்கள் 24

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 352 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 28, வியாழன் 13.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

நாட்டின் பெரும்பாலான கடலோரப்பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை காணப்படலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் வடக்கு கிழக்கு கரையோரங்களில் இடியுடன் கூடிய மழைக்கு அதிகளவில் சாத்தியம் காணப்படுவதாகவும், வடமேற்கு கரையோரமாக மணிக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முன்னாள் போராளி நேற்றிரவு வெள்ளாங்குளத்தில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ.13
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணியாற்றிய - முன்னாள் போராளி ஒருவர் நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். வெள்ளாங்குளம், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் (வயது-40) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.
சூட்டுச் சம்பவம் இரவு 8.30 மணிளவில் நடந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டில் நகுலேஸ்வரனின் தலையில் - காதுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.
"இனந்தெரியாத மூவர் சூட்டை நடத்தியுள்ளனர். வீட்டுக்குள் இருந்த நகுலேஸ்வரனை வெளியே அழைத்து துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்"- என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
நகுலேஸ்வரன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணியாற்றியவர் என்றும் புனர்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## மங்களவால் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ. 13
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் இணையப் போவதாகத் தெரிவிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, நேற்றைய தினம் திடீரென எதிர்க் கட்சிகளின் பொது முன்னணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.
எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த, ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிரான மக்கள் பேரணி கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன், நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவும் பங்கெடுத்தார்.
சந்திரிகாவின் ஆதரவாளரான மங்கள சமரவீர முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் - அரசுடன் இணைந்து இருந்தார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர், சிறிது காலம் வெளிவிவகார அமைச்சராக அவருடன் பதவியைத் தொடர்ந்தார். சிறிது காலத்தில் அவருடன் முரண்பட்டு அரசில்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 13
ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குரிய ஆயத்தங்களை ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் திணைக்களங்களும் முன்னெடுத்துள்ளன.
தேர்தலுக்கு முன்னோடியாக, வாக்களிப்பு நிலையங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் திணைக்

❖19 ஆம் பக்கம் பார்க்க

# 25 ஆண்டுகளின் முன்னர் காணாமற்போனவர் மீண்டு வந்த அதிசயம்

### சுன்னாகத்தில் பரபரப்பு; மீட்டுவர உறவினர்கள் தீவிர நடவடிக்கை

வலி. வடக்கு, நவம்பர் 13
இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் காணாமல்போன ஒருவர் தொடர்பில் அம்பாந்தோட்டை நீதிமன்றத்தில் இருந்து உறவினர்களுக்கு வந்த ஒரு கடிதத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அவர் பற்றிய தகவல் ஏதுமற்ற நிலையில் கிட்டத்தட்ட உறவினர்களால் அவர் மறக்கப்பட்டுவிட்ட நிலையில், திடீர் என அவரை அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடிதம் வந்ததால் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்த உண்மை நிலையை அறிவதற்காக அம்பாந்தோட்டைக்குப் புறப்படுவதற்கு அவர்கள் தயாராகி வருகின்றனர்.
சுன்னாகம் மத்தியைச் சேர்ந்தவர் க.வைரவநாதன். அவருடைய தற்போதைய வயது 53. கொழும்

❖22 ஆம் பக்கம் பார்க்க

சுன்னாகம் மத்தியைச் சேர்ந்தவர் க.வைரவநாதன். அவருடைய தற்போதைய வயது 53. கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் தனது 28ஆவது வயதில் அவர் காணாமற்போனார்.



## வேகமாக வன்னியில் வந்தமர்கிறார் புத்தர்

### இரண்டு வாரங்களுக்குள் மூன்று இடங்களில்

யாழ்ப்பாணம், நவ. 13
வன்னியில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பகுதிகளில், கடந்த இரண்டு வாரங்களுக்குள் மூன்று பௌத்த வழிபாட்டுத் தலங்கள் புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவில் நாயாறில் கடந்த ஆண்டு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட விகாரையில், கடந்த ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி பெரியளவில் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த விகாரைக்கு குருகந்த விகாரை என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு சேருவா

❖19 ஆம் பக்கம் பார்க்க

## 3 கேள்விகளுக்கு வழங்கும் பதில் தமிழர் வாக்குகளை தீர்மானிக்கும்

### பொதுவேட்பாளராகக் களமிறங்குவோருக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 13
ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற எவராவது, எம்மால் முன்வைக்கப்படுகின்ற மூன்று கேள்விகளுக்கு முதலில் பதிலைத் தெரிவிக்கவேண்டும்.
அவ்வாறு தெரிவித்தால் தான், தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை முடிவு செய்வார்கள். - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் - நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன்.
இனப் பிரச்சினைக்கான தீர்வு, வடக்கு - கிழக்கிலிருந்து முப்படையின் வெளியேற்றம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் இவை தொடர்பிலான

❖19 ஆம் பக்கம் பார்க்க

## கத்தியால் குத்தியவருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், நவ 13
கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றத்துக்காக 20 வயதுடைய இளைஞனுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்.மேல்நீதிமன்று.
கடந்த 2011 ஆம் ஆண்டு பூநகரியில் பொ.விஜயரத்தினம் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் 17 வயதாக

❖22 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாக நிலத்தடி நீரில் ஒயில்; 12 ஆண்டுகள் வரையில் பிரச்சினை தொடரும்

### உடனடித் தீர்வு ஏதும் காணமுடியாது என கைவிரித்தனர் துறைசார் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், நவ. 13
"சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் பரவிய கழிவு ஒயிலால் அந்தப் பகுதியிலுள்ள 568 கிணறுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கு இன்னமும் 12 ஆண்டுகள் வரையில் செல்லும்"- என்று துறைசார் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.
"12 ஆண்டுகளுக்கு உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமாக குடிதண்ணீர் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்"- என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
சுன்னாகம் பிரதேசத்தில் இயங்கிய இரண்டு மின் உற்பத்தி நிறுவனங்களால் கடந்த காலங்களில் எதுவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாமல் கழிவு ஒயில் நிலத்தில் ஊற்றப்பட்டது. அதனால் 2009 ஆம் ஆண்டு முதல் சுன்னாகம் பிரதேசத்துக் கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கத் தொடங்கியது.
ஆரம்பத்தில் சுன்னாகம் பிரதேசத்திலுள்ள சில கிணறுகளின் நீரில் மாத்திரம் கழிவு ஒயில் கலந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. ஆனாலும் அது தொடர்பில் உடனடி

❖22 ஆம் பக்கம் பார்க்க.

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்கார முடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்".
-கிரேக்கப் பழமொழி

## 'அநுலா'வின் குட்டி மக்கள் பார்வைக்கு



தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள மிக அரியவகை கறுப்பு காண்டாமிருகம் அநுலா ஈன்றுள்ள குட்டியை எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் மக்களை பார்க்கலாம் என்று மிருகக்காட்சிசாலை பணிப்பாளர் அநுர டி சில்வா தெரிவித்தார். தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டு விலங்குப் பரிமாற்றத் திட்டத்தின கீழ் ஜப்பான், ஹிரோஷிமா மிருகக்காட்சிசாலையில் இருந்து அநுலா கொண்டுவரப்பட்டது. அது ஈன்றுள்ள குட்டிக்கு இப்போது வயது ஒரு மாதமாகும். ஹிரோஷிமா மிருகக்காட்சிசாலையில் உள்ள அநுலாவின் சகோதரிகள் ஈன்ற குட்டிகள் உயிரிழந்த நிலையில் அநுலாவின் குட்டி பாதுகாப்பாக இருப்பதையிட்டு ஹிரோஷிமா மிருகக்காட்சிசாலையின் பணிப்பாளர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

காண்டா மிருகக்குட்டிகள் தாயை விடவும் மிகச் சிறியவையாகக் காணப்படும். அதனால் தாயின் கால் பட்டுக்கூட அவை இறந்துபோகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படும். அதானால் அவற்றை மிகச் சிரத்தை எடுத்துப் பாதுகாக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.(ற)

## ஜனாதிபதித் தேர்தல் களத்தில் சம்பிக்கவும்

கொழும்பு, நவ.13



ஜாதிக ஹெல உறுமய தனது கொள்கை ரீதியான நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது தொடர்பான பேச்சை ஆரம்பித்துள்ளதுஎன்றுதெரியவருகின்றது. தாம் முன்வைத்த யோசனை தொடர்பில் திருப்தி தரக் கூடிய பதிலைஜனாதிபதியோஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ வழங்கவில்லை என்பதாலேயே அரசின்கூட்டணிக் கட்சியானஜாதிக ஹெல உறுமய இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொது வேட்பாளராக மாதுளுவாவே சோபித தேரர் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயசூரிய போட்டியிட்டால் அவருக்கு ஆதரவு வழங்குவதுகுறித்துஜாதிகஹெல உறுமய கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்குப் பதிலாக வேறு யாராவது பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டால் மாத்திரமே சம்பிக்க ரணவக்கவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது என்று அந்த கட்சி முடிவு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் சிலவற்றை எடுக்க உள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## தென்கொரிய கப்பல்கள் இலங்கையில்

கொழும்பு, நவ.13

தென் கொரிய கடற்படையினருக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சேய்யாங் மற்றும் சியோன்ஜி ஆகிய இரண்டுகப்பல்களேவந்துள்ளன. கப்பல்களில் வந்த தென் கொரிய கடற்படையினரை இலங்கை கடற்படையினர் கௌரவித்து வரவேற்றுள்ளனர். குறித்த இரண்டு கப்பல்களுக்கான கடற்படை பொறுப்பதிகாரி ரியர் அட்மிரல் சூன் ஜூன் சோ, இலங்கை கடற்படை தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த பெரேராவை நேற்று மாலை கடற்படை தலைமையகத்தில் சந்தித்துபேச்சு நடத்தியுள்ளார். (ற)

## இந்தியாவுக்கு ஆயுதங்கள் விற்பனை விளக்குமாறு கோத்தாவுக்கு உத்தரவு

### சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விடுத்தார்

கொழும்பு, நவ.13

இலங்கையிடம் இருந்து இந்தியா ஆயுதங்களை வாங்குகின்றது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட தகவல் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு, நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தார். அதிலேயே மேற்குறித்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அது இதுகுறித்து விளக்கம் கேட்டு நாடாளுமன்றத்தில், ஐ.தே.க. உறுப்பினர் தலதா அத்துகோரள கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் கூற்று உண்மையா, அவ்வாறாயின், என்னென்ன ஆயுதங்கள் இந்தியாவுக்கு விற்கப்பட்டன?, எந்த இடத்தில், எப்போது அவை விற்கப்பட்டன?, அதற்காக நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன?, அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் 11 மாதங்களுக்கு முன்னர் எழுப்பிய கேள்விக்கு இதுவரை பதில் அளிக்கப்படவில்லை. நேற்றுமுன்தினம் நான்காவது முறையாக இது பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தார் தலதா அத்துகோரள.

இந்தக் கேள்விக்கு இதுவரை அரசதரப்பு பதிலளிக்காமல் இழுத்தடித்து வந்த நிலையில், மேலும் ஒரு மாத காலஅவகாசம் தரும்படி, கேட்டுக்கொண்டார் அரசதரப்பு பிரதம கொரடாவும்அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன.

தலதா அத்துகோரள தான் 4 தடவைகள் கேள்வி எழுப்பியும் பதிலளிக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவகின்றது என்று சபாநாயகரிடம் முறையிட்டார். அதையடுத்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இதுகுறித்த அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்கவேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

(ற)

## தேர்தலுக்குத் தேவை 3 ஆயிரம் கோடி ரூபா

எதிர்வரும் தேர்தலுக்கான தயாரிப் படுத்தலுக்காக 3 ஆயி ரம் கோடி ரூபா நிதி தேவைப்ப டுகின்றது என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் திணைக்களம், அதற்கான நிதியை ஒதுக்கித் தருமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது என் றும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்து நடைபெறவுள்ள தேர் தல் பொதுத் தேர்தலாகவோ அல்லது ஜனாதிபதி தேர்தலா கவோ இருக்க முடியும். எனி னும் தேர்தல் எதுவாக இருப்பி னும் அந்த தேர்தலுக்காக 3 ஆயி ரம் கோடி ரூபா செலவாகும் என தேர்தல்கள் திணைக் களம் தெரிவித்துள்ளது..

அதேவேளை நேற்றுமுன் தினம் முதல் தேர்தலுக்கான முன்னாயத்தங்களை மேற் கொண்டுவருவதாகவும் வாக் களிப்பு நிலையங்கள் தொடர் பில் தீர்மானித்தல், அதிகாரி களை தீர்மானித்தல்உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்றும் தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் கூறுகின்றன. (ற)

## தீவிரவாதத்தை உயிரூட்ட முயற்சி

*- ஜனாதிபதி*

கொழும்பு, நவ.12

வெளிநாடுகளில் இருந்து கொண்டு பயங்கரவாதத்துக்கு இன்னமும் உயிரூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை கலைஞர்களுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே ஜனாதிபதி இந்த கருத்தை முன்வைத்துள்ளார். கலைஞர்களுக்கு தமது படைப்புகளை வெளியிடுவதற்கும், ரசிகர்களுக்கு அவற்றை கண்டுகளிப்பதற்கும் இடையூறுகள் நிலவிய யுகத்தை தமது அரசாங்கம் நிறைவுறுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைவரும், பிரதியமைச்சருமான பிரபா கணேசன் உள்ளிட்ட கட்சியின் பிரமுகர்கள் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது ஆதரவை வழங்குவுள்ளதாக பிரதியமைச்சர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார். (ற)

## தலைமைத்துவப் பயிற்சியில் முதுகெலும்பு முறியவில்லை

### மாணவிக்கு அடி மட்டுமே என்று இராணுவம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

பல்கலைக்கழக மாணவர்களுக் கான தலைமைத்துவப் பயிற்சியின்போது, மாணவிஒருவரின் முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டது என்று வெளியான தகவலை இராணுவம் மறுத்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி தலைமைத்துவ பயிற்சியின் போது ஆறு அடி உயரமான சுவர் ஒன்றில் இருந்து குதித்தபோது, கௌசல்யா விஷிதமால் என்ற மாணவி காயமடைந்தார். குறித்த மாணவிக்கு முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டது என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம்தெரிவித்தது. இருப்பினும் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதற்கு மறுப்புத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய, "மாணவிக்கு முதுகெலும்பில் முறிவோ வெடிப்போ ஏற்படவில்லை. அடிபட்டது மாத்திரமே" எனக் குறிப்பிட்டார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த குறித்த மாணவி நேற்றுமுன்தினமே சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(ற)

## அதிகாரத்தை கைப்பற்ற பல தரப்புக்கள் சூழ்ச்சி

### தேசிய அமைப்புகள் ஒன்றியம் கூறுகின்றது

கொழும்பு, நவ.13

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக நாட்டை காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளில் பல தரப்புகள் ஈடுபட்டு வருகின்றனர் என்று தேசிய அமைப்புகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இந்த சூழ்ச்சிகரமான சக்திகளை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அந்த ஒன்றியம் கூறியுள்ளது.

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நேற்றுப் பிற்பகல் நடை பெற்ற விசேட கருத்தரங் கில் கலந்த கொண்டு பேசியபோதே அந்த ஒன்றியத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் இவ் வாறு கூறியுள்ளார்.

நாட்டை அழிப்பதற்காக பல்வேறு காலங் களில் தனித்தனியாக போராடிய தரப்பினர் இன்று ஒன்றிணைந்து செயற்படுவதை காணமுடிகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## விபத்துக்கள்



### பஸ் தடம்புரண்டதில் பெண் நடத்துநர் சாவு

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் வயலுக்குள் தடம்புரண்டு விழுந்ததில் பெண் நடத்துநர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை பாணந்துறை வாதுவை பிரதேசத்தில் நடந்துள்ளது. மொரொந்துடுவ கல்துடேயிலிருந்து பாணந்துறை வரை பாடசாலை மாணவர்களை ஏற்றிசென்ற பஸ்ஸே மொரொந்துடுவ பாலத்துக்கு அருகில் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. பிரதேசவாசிகளால் பஸ்ஸில் இருந்த மாணவர்கள் மற்றும் நடத்துநர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஆயினும் குறித்த பெண் நடத்துநர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

### மோ.சைக்கிள் விபத்தில் பொலிஸார் இருவர் காயம்

திருகோணமலை மொறவெவ 10 ஆம் கட்டை பகுதியில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகாயமடைந்துள்ளனர். வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் மோட்டார் சைக் கிள் விபத்துக்குள்ளாகியுள்ளது. காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத் தர்களும் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்கள் சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவர்கள் என்பது தெரியவந்துள்ளது. (ற)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 27 வியாழன் (13.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 352


# போர்க்குற்ற ஆதாரங்களை திட்டமிட்டு மறைத்தது ஐ.நா.

## இலங்கை அரசைப் பாதுகாக்கவே இவ்வாறு செயற்பட்டதாக இன்னர்சிற்றி பிரஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, நவம்பர் 13

**இலங்கை அரசை குற்றச்சாட்டுகளிருந்து காப்பாற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் சபை ஆதாரங்களை மறைத்தது என இன்னர் சிட்டி பிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.**

**போர்க் குற்ற ஆவணங்கள் குறித்து ஐ.நாவில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவித்த இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர், மத்யூ லீ இலங்கையில் 2009 இல் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து உடனுக்குடன் கிடைத்த உயிரிழப்புகள் குறித்த புள்ளிவிவரங்களை ஐ.நா. மறைத்தது எனத் தெரிவித்துள்ளார்.**

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அலுவலகத்தின் இரகசிய ஆவணமொன்று தனக்குக் கிடைத்ததாக தெரிவித்த லீ, "நாங்கள் உடல்களை எண்ணவில்லை" என முதலில் தெரிவித்திருந்த ஐ.நா தற்போது ஜனவரி 20 முதல் மார்ச் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவில் 2,683 பேர் கொல்லப்பட்டதாகவும், 7,241 பேர் காயமடைந்துள்ளதாகவும் விருப்பமின்றி உண்மையை ஏற்றுக் கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

2009 பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மைக்கல் மொன்டசின் பேச்சாளரை நாங்கள் உயிரிழப்பு குறித்து கேட்டவேளை, தாங்கள் உடல்களை கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டார்.

ஜோன் ஹோம்ஸ் உட்பட முக்கிய ஐ.நா. அதிகாரிகள் தங்களிடம் கொல்லப்பட்டவர்கள் குறித்து புள்ளிவிவரங்கள் இல்லை என்றே தொடர்ச்சியாக தெரிவித்து வந்தனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்குப் பிரதேச மக்களை நலன்புரி நிலையக் காணிகளில் குடியேற்ற இராணுவம் முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 13

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை, அக்கரைக் கிராமத்தில் குடியேற்றுவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ள நிலையில், நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களிலேயே நிரந்தமாகக் குடியமர்த்துவதற்கான முயற்சிகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாகச் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், கண்ணகி நலன்புரி நிலையம் என்பன அமைந்துள்ள காணிகளை, அதில் தங்கியுள்ள • (22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் விடயத்தில் புரிந்துணர்வு உடன்பாடு தேவை

### கோருகிறார் சந்திரஹாசன்

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று தமிழகத்தில் வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்த நிலையில், இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதானால், இலங்கை - இந்திய அரசுகளிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்படவேண்டும் என்று தந்தை செல்வாவின் புதல்வரும், இலங்கைத் தமிழ் அகதிகள் மறுவாழ்வு அமைப்பின் நிறுவனருமான சந்திரஹாசன் தெரிவித்துள்ளார்.

'இந்திய மத்திய அரசு, தமிழக அரசு, இலங்கை அரசு ஆகியவற்றுக்கு இடையில் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவேண்டும். அதன் பின்னரே தமிழகத்திலுள்ள

(22ஆம் பக்கம் பார்க்க)

## வெடிவிபத்தில் சிப்பாய் காயம்

வவுனியா, நவ.13

வவுனியா, பெரியவேலன் குளம்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் அப்பகுதியில் அமைந்துள்ள 612 ஆவது பிரிகேட் இராணுவத் தளத்தில் கடமையாற்றும் லான்ஸ்கோப்ரல் தரங்க (வயது-25) என்ற சிப்பாய் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரது ரி-56 ரகத் துப்பாக்கி வெடித்தமையினாலேயே காயமடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-421)

## 14 உறுப்பினர்கள் மட்டுமே மலையக மக்களுக்கு நிதி

### மாகாண சபையின் 24 உறுப்பினர்கள் இன்னமும் அதனை வழங்கவில்லை

யாழ்ப்பாணம், நவ. 13

பதுளை மாவட்டத்தில் மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, வடக்கு மாகாண சபையின் 14 உறுப்பினர்கள் மாத்திரமே இதுவரையில் நிதி வழங்கியுள்ளனர். நிதி சேகரிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் 24 உறுப்பினர்கள் இன்னமும் நிதி வழங்கவில்லை.

பதுளை மாவட்டத்தில் கொஸ்லந்தைப் பிரதேசத்தில் மண் சரிவு இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கு மாகாண சபையினால் நிவாரணம் வழங்குவதென்று கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி பேரவைச் செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கமைய வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் எச்.எம். ரயீஸ் ஆகியோர் தலா 50 ஆயிரம் ரூபாவும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அமைச்சர் த.குருகுலராஜா, உறுப்பினர்களான து.ரவிகரன், கே.என்.கனகரட்ணம், அ.பரஞ்சோதி, ப.அரியரத்தினம்,

(22ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க மாநிலங்களில் தமிழ்மொழிக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், நவ..13

அமெரிக்காவில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அங்கீகாரம் பெறுவது என்பதைத் தலையாய கடமையாகக் கொண்டு அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம் கடந்த 3 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்ததன் பயனாகத் தற்பொழுது 3 மாநிலங்களில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினசோட்டா, மிசௌரி மற்றும்ரூடெக்சஸ் (ஹூஸ்டன் நகரப் பள்ளி) ஆகிய பாடசாலைகள் இந்த மாபெரும் அங்கீகார முத்திரையைப் பெற்றுள்ளன. ஹூஸ்டன் பாடசாலை முதலில் கடந்த ஜூன் மாதம் இந்த அங்கீகாரத்தைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து மினசோட்டா, மிசௌரி மாநிலப் பாடசாலைகள் ஒக்ரோபரில் இந்த அங்கீகாரத்தை பெற்றன.

அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம் என்ற இலாப நோக்கமற்ற வரிவிலக்குப் பெற்ற கல்வி அமைப்பு 4 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. முதற்கட்டமாக ஒருங்கிணைந்த பாடத் திட்டத்தை அறிமுகப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாகப்பர் ஆலயக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 13

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது இலங்கை விமானப் படையின் சுப்பசொனிக் விமானம் குண்டுவீச்சு நடத்திய 21ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று புனித யாகப்பர் ஆலயப் பங்கு மக்களால் இறை வழிபாடுகளுடன் நினைவு கூரப்பட்டது.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி காலைத் திருப்பலி வேளையில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த ஒரு குழந்தை மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 10 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். அவர்களில் ஒருவர் யார் என இறுதிவரை அடையாளம் காணப்பட முடியாமல் அடக்கம் செய்யப்பட்டார். அருட்சகோதரர் ஒருவர் உட்பட 25 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் புனித யாகப்பர் ஆலயம் முற்றாகச் சேதமடைந்ததுடன் அருகில் இருந்த பாலர் பாடசாலை, 10 ற்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் என்பனவும் சேதமடைந்தன. சில வருடங்களுக்கு முன்பே இந்த ஆலயத்தைக் குறித்த பங்கு மக்கள் தமது நிதியில் முற்றாக மறுசீரமைத்து ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

(த-ரி-51)

## தாலியை திருடினார் பக்கத்து வீட்டுக்காரர்

யாழ்ப்பாணம், நவ. 13

பக்கத்து வீட்டில் திருடிய தாலிக்கொடியை 2 மாதத்தின் பின்னர் வவுனியாவில் வைத்து விற்க முயன்றபோது பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார் ஊரெழு வாசி.

அவர் தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரெழுவில் 2 மாதங்களுக்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் மின் உற்பத்திக்கு தடை விதிக்குமாறு 11 பேர் வழக்கு

யாழ்ப்பாணம், நவ. 13

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் 'எண்ணெய் எரிவு' ஊடாகச் செயற்படும் மின் பிறப்பாக்கிகளை இயக்குவதை (லக்ஷபான மின் நிலையம் தவிர்ந்த) உடனடியாகத் தடை செய்யுமாறு மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்த வழக்குத் தொடர்பில் எதிர்வரும் திங்கள் கிழமை நீதிமன்று கட்டளை பிறப்பிக்கவுள்ளது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்துள்ள 11 பேர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் செயற்பட்டு வந்த, 'எண்ணெய் எரிவு' ஊடாகச் செயற்படும் மின் பிறப்பாக்கிகளின் கழிவு எண்ணெய்கள் நிலத்தில் விடப்பட்டுவந்ததாலும், தொடர்ந்து விடப்படுவதாலும் சுன்னாகம், ஏழாலை, மல்லாகம், மல்லாகம் நீதிமன்றப் பகுதி, மற்றும் பல இடங்களின் கிணறுகளும் கழிவு எண்ணெய் கலந்துள்ளது. இதனால் கிணற்று நீரை மனித, மிருக, பறவைத் தேவைகளுக்கும், பயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகிப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுவரும் காரணத்தால், சுன்னாகம் மின் நிலையத்தில் இயங்கிவரும் எண்ணெய் எரிவு ஊடாகச் செயற்படும் மின் பிறப்பாக்கிகள் தொடர்ந்தும் இயக்குவதை உடனடியாகத் தடைசெய்ய நீதிமன்றத்தை

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா சுந்தரம்



உடுப்பிட்டி, இலகடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சுந்தரம் 10.11.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலன்-தையலி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-அம்மினி தம்பதியரின் அன்பு மருமகளும், உதயசீலன் (சுவிஸ்), தர்மசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, முருகேசு மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சின்னம்மாவின் மைத்துனியும், குணேஸ்வரி (கனடா), இராஜரூபி (கனடா), ரதீஸ்வரி (இமையாணன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஷாந்தன் (கனடா), சுதாஜினி (கனடா), விஜிதரன் (கனடா), அனுஷாந்தினி (கனடா), நிரோஷன் (கனடா), சாமினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்சனா (கனடா), விசான் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள் : உதயசீலன், தர்மசீலன் குடும்பத்தினர்.
இலகடி, உடுப்பிட்டி. (52001) (7.6.3) 077 632 6240

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் மகாலிங்கம் (மகான்)

[அகில இலங்கை சமாதான நீதிவான்]



சந்திரபுரம்,மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகாலிங்கம் 10.11.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னரர் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பாக்கியம் தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும்,ஜெயந்தி, ஜெயந்தன், ஜெயமோகன், ஜெயபாலன், ஜெயபாரதி, ஜெயரதி ஆகியோரின் பாசமிகு, தந்தையும், கிருபாகரமூர்த்தி, தாரகை, உதயமாலினி, தர்சனா, சூரியகுமார், காலஞ்சென்ற கேமளன் ஆகியோரின் மாமனாரும், ஜெயஷாந், கிருஸ்ணவி; மதுனயா, காவியன், ரம்மியன், கம்சிகன்,நாகவி, சிந்துஷன், மதுர்ஷனன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா(சோமு), செல்லப்பா(சின்னவேலு) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வண்ணாத்திப்பாலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
தகவல்: குடும்பத்தினர். 021 790 1071
(54030)(5.3)

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 03 . 12 . 1932
உதிர்வு 26 . 10 . 2013

## அமரர் அருணாசலம் இராஜரட்ணம்

(முன்னாள் ஆய்வு கூட உதவியாளர் - புலோலி)

திதி: 13.11.2014 வியாழக்கிழமை

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எங்கள் மனம்
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது ஆறாது நினைவுகள்
நினைவுகள் தான் எம்மிடம் நிஜத்தில் ஆண்டவன்
சந்நிதானத்தில் ஆறாத்துயிலில் கலந்திருந்தும்
உங்கள் பாதங்களில் கண்ணீர்த் துளிகளாலே ஆராதனைகள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புற்றளை, புலோலி. (C17601)(12.3)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நீரிழிவு தின நிகழ்வுகளில் கலந்துகொள்ளலாம்

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நாளை சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடத்தப்படவுள்ள நீரிழிவு தின நிகழ்வில் கலந்துகொள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், வலய உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரிஆசிரியர்கள்ஆகியோரை மதியம் 12 மணிக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று நடைபெறா

வேலணை,நவ.13

வேலணை பிரதேச செயலக சிறுவர், முதி யோர் தின விழாக்கள் தவிர்க்க முடியாத கார ணத்தால் இன்றுநடைபெற மாட்டாது என் றும் எதிர் வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் அந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்என்று வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன்தெரிவித்தார். (வ-7)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.13

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வாழ்வெழுச்சி சமுதாய அடிப்படை வங் கிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி 2014 இற்கான பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடை பெறும். (வ-7)

# நூலகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.13

தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கில்நாளை வெள்ளிக்கிழமை நூலகக் கண்காட் சியை நடத்தவுள்ளது. (வ-7)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம், நவ.13

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு வாழ்வெழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டி 2014 இற்கான பரிசளிப்பு விழா இன்றுவியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில்நடைபெறும். (வ-7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## Dr. துரைசாமி சூரியபாலன்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், Ontario, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.துரைசாமி சூரியபாலன் 08.11.2014 கனடாவில் இறைபதம் எய்தினார்.


அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.சின்னத்தம்பி துரைசாமி-திருமதி Florie அன்னரத்தினம் துரைசாமி தம்பதியரின் ஏக புத்திரனும், விமோவின் (விமலராணி) அன்புக் கணவரும், Dr.தனுஷன்(USA), துஷியந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.ஆயீசா சூரியபாலனின் மாமனாரும், சுறையாவின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி Clough பாலசிங்கத்தின் மருமகனும், திருமதி கௌரி தம்பாப்பிள்ளை (Australia),திருமதி காஞ்சனா சிறீதரன் (Australia) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும்,திரு.Dodo தம்பாப்பிள்ளை (Australia), திரு.S.சிறீதரன் (Australia) திருமதி இந்திராணி முத்துராஜா (Australia),திரு.Clough ஜெயசிங்கம் (Australia), திருமதி சந்திராணி நாகநாதன்(Australia), திரு.Clough இராஜசிங்கம் (UK) ஆகியோரின் மைத்துனரும், S.குகபாஸ்கரன், (Uduvil), திரு.S.ஜெயபாஸ்கரன் (Colombo) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

(சி/17468)(8.9)
தகவல்: திருமதி காஞ்சனா சிறீதரன் (Australia)

# நன்றி நவிலலும் அறிவித்தலும்

## அமரர் Dr.V.சிறீஸ்காந்தன்



கடந்த 08.11.2014 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திக்கிரியைகளில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்றிலிருந்து எமது றஞ்சிதா வைத்தியசாலை (சுதுமலை மத்தி, மானிப்பாய்) சேவைகள் வழமைக்குத் திரும்புகின்றன என்பதையும் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

றஞ்சிதா வைத்தியசாலை,
ஸ்ரீ றஞ்சிதா வைத்தியசாலை,
கிறீன் மெட் வைத்தியசாலை.

021 225 5684
021 568 7651
(54029) (12.3.6)

# 4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு 21.12.1948
இறப்பு 13.11.2010

## அமரர் சொக்கலிங்கம் செல்வவதி (மணி)

(செல்வநகர், மன்னார்)

நான்கு ஆண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்; அன்பும்பாசமும் நிறைந்த
பொக்கிசம் நீங்கள்; நித்தம் புலம்புகின்றோம்;
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை
எங்கள் இதயம்; உங்கள் ஆத்மா சாந்திபடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!

கிளிநொச்சி.
மகன் : சொ.சிவகாந்தன் (சுதர்சன்)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 . 07 . 1937 | 13 . 11 . 2010 |

## திருமதி மனோன்மணி பழனிநாதன்

துடித்தது இதயம் உந்தன் நினைவால்
நான்கு வருடங்கள் உருண்டோடி விட்டதம்மா
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாதம்மா உங்கள் நினைவு...

(53795)(7.6.3)

36/2. காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
என்றும் நினைவில்... கணவர்.

# வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பும்

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு பொது நூலக கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம்பெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சம்பத் வங்கிக் கிளை முகாமையாளர் பா.கிரிதரன், நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கந்தையா கனகம்மா நிதிய காப்பாளர் க.மயில்வாகனம், சித்தி விநாயகர் அபிவிருத்திச் சபை உறுப்பினர் சோ.ஜீவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் சி.சிவராஜா கௌரவிப்பும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம் பெறும்.

(வ-9)

# அறிவாயுதமே தமிழர் விடுதலைக்கு வழி கல்வியியலாளர் தனபாலன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.13

நாம் தற்போதும் எதிர்காலத்திலும் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதற்குத்தேவையான அனைத்துப் பலங்களையும் வழங்கும் உயர்சக்தி கல்வியிடமே உண்டு. அறிவாயுதமே தமிழர்களின் விடுதலைக்கு வழியாகும். இதற்குச் சான்றாக கு.சண்முகநாதன் எழுதி வெளியிடும் 'கல்வி மெய்யியல்' என்ற நூல் வழி சமைக்கின்றது என்று தெரிவித்தார் கல்வியியலாளர் பா.தனபாலன். கு.சண்முகநாதன் எழுதிய 'கல்வி மெய்யியல்' நூல் வெளியீடு முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

கல்வியின் ஊடாகப்பெரிய ஒரு சிந்தனை செயல்முறை மாற்றத்தை எம்மால் ஏற்படுத்த முடியும். புதிய சிந்தனைப் போக்கையும், நேர்மையுடனும், கண்ணியத்துடனும், அர்ப்பணிப்புடனும் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்களால் இதனை ஏற்படுத்த முடியும்.

இதற்குக் கல்வியியல் ஆய்வுகள், விழிப்புணர்வுச் செயன்முறைகள், புதிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள் விஸ்தரிக்கப்படவேண்டும். எதிர்கால வியல் நோக்கில் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பதும் நாளைய எதிர்பார்ப்புக்கேற்ப இன்றைய செயற்றிட்டங்களைத் திட்டமிடுவதும் அவசியமாகும். அன்று சோக்கிரட்டீஸ் கூறிய அறிவாயுதம் எதிர்காலவியல் நோக் கில் கல்வியின் முக் கியத்துவத்தைக் காட்டுகிறது.

எதிர்காலவியல் கல்வி நோக்கில் மாணவர்கள் பாடசாலையுடன் அல்லது பல்கலைக் கழகத்துடன் நின்றுவிடாது வாழ்நாள் முழுவதும் தொடருறு கல்வியைக் கற்க வேண்டும். மேலும், கற்ற கல்வியும் காலாவதியாகிவிடும் புதிதாக வரும் புதிய அறிவும் தேர்ச்சிகளும் முதன்மை பெற்றுவிடும்.

இந்த நிலையில் விரைவில் மாறிச் செல்லும் தொழில்நுட்ப விஞ்ஞான பொருளாதார தொழில்சார் அறிவுத் தொகுதியில் மனித சமூகம் கற்கும் சமூகமாக வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

எதிர்காலவியல் கல்வியில் நவீன தகவல் தொழில் நுட்பத்தின் விளைவாகப் பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்கள் அதிகளவில் தாமாகச் சுய கற்றலும் தேடலிலும் ஈடுபடுவர். ஆசிரியர்களின் கற்பித்தல் பணி குறைந்து வழிகாட்டும் பணியே முக்கியம் பெறும்.

மேலும் வர்த்தகப் பொருளாதாரத்துறைகளை நோக்கும் போது தொழில்நுட்பத்தை எவரும் மலிவாக உலகச் சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் வாண்மையுள்ள பயிற்சி பெற்ற மனித வளத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியாது.

உலகப் பொருளாதாரத்தில் எல்லா நாடுகளுமே போட்டியில் ஈடுபடுவதால் ஊழியர்களின் தராதரங்களை, வாண்மையை, சேவைத் திறனை மேம்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கு தொழில்வாண்மைக் கல்வியை வழங்கும் வகையில் விரைவான மாற்றங்கள் தேவையாகவுள்ளன.

அவற்றைக் கருத்தில் கொண்டு தற்போது கல்வியமைச்சு தொழில்நுட்பப்பாட அறிமுகம், தேசிய தொழில்பயிற்சி அதிகார சபையின் பாடசாலை நோக்கிய செயற்றிட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. எமது எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களைச் சரியாக வழிகாட்டி ஆற்றுப்படுத்தி அவர்களது எதிர்கால வாழ்வை ஒளிபெறச் செய்வதே இன்றைய கல்விப் பணிப்பாளர்களின் கடமையாகும்"-என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கல்வி மெய்யியல் ஆசிரியர்களுக்கு மேற்படி நூல் இலவசமாக வழங்கப்பட்டது.

(வ-29)

**இடமாற்றம்**

**டயானா பிளாஸ்ரிக்**

108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)

- உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
- பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
- புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்

(C/17542) (7.6.3)

தொடர்பு : 077 592 5088/021 222 8680

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள/பழக விரும்பும் பணியாளர்கள் (ஆண்/பெண்) உடன் தேவை.

தொடர்பு: 077 125 1155

(சி17618) (12.3.6)

**வாடகைக்கு**

இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் அலுவலக இடமும் களஞ்சியசாலையும் வாடகைக்குண்டு. கீழ் தளத்தில் LAVA பல் வைத்தியசாலை இயங்குமிடம். Nov .13.14 ஆம் திகதிகளில் பார்வையிட முடியும்.

தொடர்பு: 077 776 9260

(63978) (45.6.3)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு (35 - 50 வயதுக்குட்பட்ட) பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 125 1155

(சி17617) (45.6.3)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

75 வீதம் பொருள்கள் விற்பனை செய்பவர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ரூபா 15000/= உம் 125 வீதம் பொருள்கள் விற்பனை செய்பவர்களுக்கு ரூபா 25000/= உம் அத்துடன் தரகுப் பணமும் வழங்கப்படும்.

உணவு, இருப்பிடம் இலவசம்.

ஆண், பெண் இருபாலாரும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**சுஜித் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
021 227 0586

(C/17635)(7.3)

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

**Spoken English**
Veta Fluency Diploma
புதிய பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்
Mon, Fri 11.00 a.m.
Sat, Sun 9.00 p.m.

நெல்லியடி
Mon, Fri 3.30 p.m.

DMI COMPUTER EDUCATION

City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

**IELTS**
(Duration: 50 hrs with 5 mock exams)

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

DMI British Council , இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) | கண்டி வீதி, (HNB அருகில்) | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

(சி.77629)

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**



'கணேச வாசம்' உடுவிலைச் சேர்ந்த **திரு.திருமதி ப.சசிவர்ணன்** தம்பதியரின் செல்வப்புதல்வன் **நிகமஸ்துதன்** 05.11.2014 அன்று தனது பிறந்த நாளையும் இன்று (13.11.2014) வியாழக்கிழமை ஆயுஸு ஹோமத்தையும் தனது பாட்டியின் வீட்டில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
பாட்டி, பூட்டி. அத்தைமார், மாமாமார்.
மச்சான்மார்,மச்சாள்,
அண்ணா பிரமனஸ்தன்,
பாட்டிமார், தாத்தாமார்.

Happy Birthday

(54027H5.3F)

**25 ஆவது ஆண்டு திருமண வாழ்த்து**



13.11.2014 வவுனியா தோணிக்கல்லில் வசிக்கும் எமது பெற்றோராகிய திரு.திருமதி சண்முகர் ஸ்ரீஸ்கந்தராணி தம்பதிகள் இல்லறத்தில் இணைந்து இனிதே இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த இனிய நாளில் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.

வாழ்த்துவோர்: பிள்ளைகள், டியா, டிலு, சிவா, டிலா, டினேஷி, சகோதரிகள் குடும்பம்.

(53718)(4.3.6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Best Wishes



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30ஆவது பட்டமளிப்பு விழாவில் மருத்துவமாணி (M.B.B.S) பட்டத்தினைப் பெற்ற **செல்வி விஜிதா இராமசாமி** அவர்களை மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று, மக்கள் சேவையாற்றி மகத்தான வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations



கடந்த 16.10.2014இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **இராமசாமி நிருஜன்** National Diploma in Teaching Maths பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பட்டங்கள்பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வராகிகோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, தாத்தா, மாமா, மாமி.

(C17633)(12.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



11.11.2014 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (BA PGDE) பட்டம் பெற்ற

**அருளப்பு றொபின்சன்**
(சுரேஷ்)

அவர்களை மேலும் பல கலைகள் கற்று பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

Congratulations
Best Wishes

வாழ்த்துவோர் :
அப்பா, அம்மா, அம்மம்மா, அக்கா,
பெரியண்ணன், சின்னண்ணன்,
தம்பி, மருமகன் கெவின் கொஸ்னர் (டிலான்)

(54015H7.3)

# பயன்தரு மரங்களை நீதிமன்றில் நடும்பணி ஆரம்பம்

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டட வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. மரக்கன்றுகளை நடுவதற்கு தென்மராட்சி பிரதேச செயலகமும், சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வங்கிகளும் முன் வந்துள் ளன. அவற்றை நடப்படவுள்ள பகுதிகள் அடைக்கப்படும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையால் எதிர்வரும் 20ஆம்திகதி நீதிமன்ற முன்றிலில் மரக்கன்றுகள் நடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அனைத்து வங்கிகளும் நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்று நடுவதற்கு முன்வந்துள்ளதால் நீதிமன்ற வளாகத்தின்உட்புறம்வெளிப்புறம் ஆகியவற்றில் பயன்தரு மரக்கன்றுகள் மட்டும் நடப்படவுள்ளதாக அறிய முடிந்தது.

வன்செயல்களின் போது அழிக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதி பல மில்லியன் ரூபா செலவில் புதுவடிவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் நீதிய மைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம நீதிய ரசர் மொஹான் பீரிஸ் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே. (வ-9)

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவன வேலைத்தளத்திற்கு
1) தச்சு தொழிலாளர்
2) வெல்டிங் ஒட்டுநர்
உடன் தேவை.
தொடர்பு : 021 205 3080 (54031) (7.6.3)
இல. 9, நந்தாவில் லேன், தாவடி.

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு**

அரச உத்தியோகத்தரின் தனிப் பாவனையில் உள்ள CT-100 (25,000km ஓடியது) (54036) (7.6.3)
தொடர்பு : 071 834 3033, 077 059 1904

**வாடகைக்கு**

Isuzu கன்ரர் வாடகைக்கு உண்டு. (54034) (7.6.3)
தொடர்பு : 077 632 7655

# மத்தியஸ்த சபை அமர்வுகள் பிற்போடல்

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி மத்தியஸ்த சபையினால் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த அமர்வுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் முதல் நாளான நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று சபையின் தவிசாளர் செ.சபாரத்தினம் அறிவித்துள்ளார். (வ-9)

**இத்தால் சகலரும் அறிக**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, புத்தூர் கோவிற்பற்று, அச்செழு இறையிலுள்ள 'வியவெளியிற்காடு' என்னும் நிலப்பரப்பு 86½ (எண்பத்தாறரை) விஸ்தீரணம் கொண்ட எல்லைகள் கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு வீதிக்கும் சிதம்பரப்பிள்ளை பெண் பொன்னுப்பிள்ளையினாதனமும் தெற்கு இராமுப்பிள்ளை அம்பலவாணரின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் என அமைந்ததுமான எனக்கும் வேறு இரு நபர்களுக்கும் சொரியல் உரித்துள்ள காணி தொடர்பாக என்னால் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 215ஆம் இலக்கப் பிரிவிடுதல் வழக்கு 1981ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் முடிவுறா நிலையில் உள்ள அவ் வழக்கு என்னால் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளது.

அச்செழு, நீர்வேலி. (54032)(5.3) நகல்: S.மகேந்திரன்.

யாழில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்
டென்மார்க் பிரண்டபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளி தர்சன மாலையும்
திருக்கார்த்திகை விசேட பூஜையும்



வரமருளிக் காத்தருள்ள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் கார்த்திகை மாதத்திற்குரிய அருள்ஒளி தர்சன மாலை விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

இடம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபம்
காலம் : 16.11.2014
ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.30 மணி

திருவருள் நிகழ்வுகள்:
- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திரட்டுத் தோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு: Tel: 0045 97180192, 0045 40413431 Fax: 0045 97184192
யாழ் தொடர்புக்கு: 077 982 5004
www.abiramiamman.dk
www.rissart.com
(54033)
இடம் : நல்லூர் இளங்கலைஞர் மண்டபம் காலம் : 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30

# பாலஸ்தாபனம்

வடமராட்சி, நவ.13

அல்வாய் கிழக்கு, பெருங்கலட்டி, தில்லையம்பலப்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபனம் இன்று வியாழக்கிழமை காலை 6.05 மணி தொடக்கம்மாலை 6.24 மணி வரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

பாலஸ்தாபனத்தை மந்திகை கண்ணகை அம்மன் கோயில் பிரதம குரு சக்தி உபாசகர் சிவஸ்ரீவை. இராமேஸ்வரக் குருக்கள் நடத்தி வைப்பார். (வ-173)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
மார்க்கண்டு விஜிதா



10.11.2014 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 30ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பல்கலையின் மருத்துவப்பிரிவில் MBBS பட்டம் பெற்றதையிட்டு கலைகள் பல கற்று பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு காலம் விநாயகர் அருளுடன் வெற்றிகள் பல பெற்று வாழ்கவென வாழ்த்தும் உறவினர்.

வாழ்த்துவோர்:
பெற்றோர் : மார்க்கண்டு, கனேஸ்வரி
சகோதரர்கள் : விமல்ராஜ், ஜீவராஜ்.
மாமா : குணசிங்கம்,
மர்மஜோதி, ஜெயந்தினி, மதிவர்மன்.

சிவமயம்
சிவாச்சார்யாபிஷேக விஞ்ஞாபனம்



நிகழும் மங்கலமிகு ஜய வருஷ ஐப்பசி 27ஆம் நாள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை பூச நட்சத்திரமும் விருச்சிக லக்கினமும் கூடிய காலை 7.40 மணி முதல் 9.10 மணி வரை வரும் சுபமுகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ
செ.தெட்சனாமூர்த்திசர்மா
அவர்களுக்கு

ஸ்ரீ அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாதர் திருவருள் துணை கொண்டு சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாதர் தேவஸ்தானத்தில் விசேடதீக்ஷை, நிர்வாணதீக்ஷை, சிவாச்சார்யா அபிஷேகம் நிகழ்த்த பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிவாச்சாரிய குருவை சிறப்பித்து குருவருள் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீக்ஷாகுரு
பிரதிஷ்டா சிரோன்மணி
ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.)

தங்கள் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ. ஸ்ரீமதி.
தெட்சனாமூர்த்தி சர்மா இராஜலட்சுமி அம்மா.
மயூராபதி.
இல.06, சிவன்கோயில் வீதி,
சாவகச்சேரி.
(C/17634)(5.3)

# வதிவிட செயலமர்வு

கரணவாய், நவ.13

கல்வி அமைச்சினால் நடத்தப்படும் விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வலய இணைப்பாளர்களுக்கான வதிவிடச் செயலமர்வு இன்றும், நாளையும் கொழும்பு டொறிங்டன் பிளேஸில் அமைந்துள்ள விளையாட்டு விஞ்ஞான அலகில் இடம் பெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ரக்பி, ஜிம்னாஸ்ரிக், மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள், உதைபந்து, கரபந்து மற்றும் வலைப்பந்து ஆகிய 6 விளையாட்டுக்களுக்கான வலய இணைப்பாளர்களுக்கே இவ்வதிவிடச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வில் வட மாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 104 ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர். (வ-108)

குறைந்த விலையில்
உன்னதமான பயணம்



- London
- Perth
- New York
- Auckland
- Doha
- Thiruchi
- Delhi
- Bangkok
- Honk Kong
- Guangzhou
- Narita
- Melbourne
- Toronto
- Sydney
- Madurai
- Bombay
- Singapore
- Malaysia
- Rome
- Dubai

உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

| | |
|---|---|
| Chennai | Rs. 24,100/- upwards |
| London | Rs. 82,500/- upwards |
| Paris | Rs. 61,200/- upwards |
| Frankfurt | Rs. 65,800/- upwards |
| Zurich | Rs. 62,800/- upwards |

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சி17470)
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

**கேள்வி அறிவித்தல்**

**சூரிய மின்கலம் வழங்குதலும் பொருத்துதலும்**

மாந்தைகிழக்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சிராட்டிகுளம் கிராமத்திற்கு 1.5 மில்லியன் ரூபா செலவில் சூரியமின்கலங்களைப் பொருத்துவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து பொருள்கொள்வனவும், நிலையான பொருத்து வேலைக்குமான கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி சூரிய மின்கலத்திற்குரிய மதிப்பீடும் அதனை வீதியோரத்தில் பொருத்துவதற்குமான மதிப்பீடும் போக்குவரத்துச் செலவும் உள்ளடக்கிய வகையில் தங்களது கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவத்தை 13.11.2014 தொடக்கம் 19.11.2014 வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொண்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 20.11.2014ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவகையில் தலைவர், மாந்தை கிழக்குப் பிரதேசசபை, பாண்டியன்குளம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். பொருத்தமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவித்தல் வழங்கிய நாள்களிலிருந்து ஒரு வாரத்துக்குள் பொருள்கள் மாந்தை கிழக்கு பிரதேசசபையிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

அ.தனிநாயகம், தவிசாளர்,
மாந்தை கிழக்கு, பிரதேசசபை, பாண்டியன்குளம்.
தொ.பே: 024 324 3663
(சி17636) (12.3.6)

# நீர் உவர்த் தன்மையாவதால் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு

## வடமராட்சி மற்றும் தீவகப் பகுதிகளில்

யாழ்ப்பாணம்.நவ.13

வடமராட்சி மற்றும் தீவகப் பகுதிகளில் நீர் உவர்த் தன்மையாக மாற்றமடைந்து வருவதால் விவசாய நிலங்கள் உற்பத்தித் திறன் குறைந்த நிலப்பரப்பாக மாற்றமடைந்து வருவதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை, மரக்கறிப் பயிர்ச்செய்கை என்பன பிரதானமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய விவசாய நிலங்களில் அதிகூடிய உரப் பாவனையால் உற்பத்தித் திறன் ஏற்கனவே குறைவடைந்து வருகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தில் தெண்டமானாறு மற்றும் தீவகப் பகுதிகளில் நீர் உவர்தன்மை அடைந்துள்ளதால் விவசாய நிலங்களில் உற்பத்தித்திறன் குறைவடைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மட்டும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் விவசாயப் போதனாசிரியர்களின் ஆலோசனை களைக் கேட்டு விவசாயிகள் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதன் ஊடாக உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை எட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# சிவசிதம்பரத்துக்கு கரவெட்டியில் சிலை



வடமராட்சி, நவ.13

முன்னாள் உடுப்பிட்டி, நல்லூர்த் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் முழு உருவச்சிலை ஒன்று கரவெட்டி சாமியன் அரசடிச் சந்தையில் நிர்மாணிக் கப்படவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச மக்களால் நிறுவப்படவுள்ள அன்னாரின் உருவச்சிலையை வடிவமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இச்சிலை நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பருத்தித்துறைத் தொகுதியில் இருந்து 1960 ஆம் ஆண்டு உடுப்பிட்டித் தொகுதி உருவானதைத் தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு அமரர் மு.சிவசிதம்பரம் முதன் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார். எனினும் 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தார்.

1970 களுக்குப் பின்னர் தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ்கட்சியும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டபோது அந்தக் கூட்டணியில் அமரர் சிவசிதம்பரமும் அமரர் அமிர்தலிங்கமும் இணைச் செயலதிபர்களானார்கள். தொடர்ந்து 1977 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் கூட்டணி சார்பில் நல்லூர்த் தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

உடுப்பிட்டித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் 1965 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரை இலங்கைப் நாடாளுமன்றத்தில் உப சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். சிறந்த குரல் வளத்தைக் கொண்ட அமரர் சிவசிதம்பரம் அன்றைய காலகட்டத்தில் சிம்மக்குரலோன், உடுப்பிட்டிச் சிங்கம் என்றும் அழைக்கப்பட்டு வந்தார்.

உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்குச் சிறந்த சேவையை அக்காலங்களில் வழங்கிவந்த அவர் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் இறுதிவரை போராடியவராவர். (த-173)

# மண் சரிவினால் உயிரிழந்தோருக்கு கரவெட்டி பிரதேச சபையில் அஞ்சலி

வடமராட்சி, நவ.13

பதுளை மீரியபெத்த தோட்டத்தில் மண்சரிவினால் உயிரிழந்தோருக்கு கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்றுப் புதன்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றபோது 18 உறுப்பினர்களில், ஆளும் தரப்பு உறுப்பினர் ஒருவர் தவிர ஏனைய 17 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டம் ஆரம்பமானபோது சபை உறுப்பினர் க.இரத்தினம் சபையின் அசையாச் சொத்தான சமண்டலை மரம் தறித்து அழிக்கப்பட்டதைப் பிரஸ்தாபித்தார். அதனைத் தொடர்ந்து எதிரணி உறுப்பினரான சி.கணபதிப்பிள்ளை பதுளையில் மண் சரிவால் உயிரிழந்த எம்து உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உயிரிழந்த மக்கள் வாழும் பிரதேச சபைக்கும், பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்எனக்கோரிக்கைவிடுத்தார்.

இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்ட அதேவேளை ஆளும் தரப்பு உறுப்பினரான ஆ.மதியரசன், இது கார்த்திகை மாதம். தமிழர்களுக்குப் புனிதமான மாதம். கார்த்திகை தீபம் இடம்பெறும் மாதம். எம் மக்களில் இறந்தவர்களை நினைவு கூரும் மாதம். எம் மத்தியில் தடம் பதித்துவிட்டுச் சென்ற குமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன், உரிமைக்காகப் போராடி இறந்து போன எம் மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதோடு மலையகத்தில் மண் சரிவால் உயிரிழந்தோருக்கும் அஞ்சலி செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இவ்வேளையில் குறுக்கிட்ட ஆளும் தரப்பு மற்றொரு உறுப்பினரான கே.பரஞ்சோதி எமக்கென நிகழ்ச்சி நிரல் ஒன்றுள்ளது. அதன்படி சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். நிகழ்ச்சி நிரல் முடிந்த பின்னரோ அல்லது இடையிலோ மண் சரிவால் உயிர் நீத்தவர்களுக்கும் மண்ணுக்காக உயிர் நீத்தவர்களுக்கும் அஞ்சலி செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதனைச் சபைத் தவிசாளர் ஏற்றுக்கொண்டபோது உறுப்பினர்களான ஆ.மதியரசன், கே.பரஞ்சோதி, தவிசாளர் ஆகிய மூவருக்கும் இடையில்கடுமையானவாக்குவாதம் இடம்பெற்றது. வாக்குவாதத்துக்கு மத்தியில், எங்கள் மண்ணில் உயிர் நீத்தவர்களுக்கு நான் அஞ்சலி செலுத்தப் போகிறேன் எனக் கூறி எழுந்து நின்று கைகளைக் கட்டியவாறு அஞ்சலி செலுத்திவிட்டு எனது கடமை முடிந்துவிட்டது எனக் கூறிச் சபையை விட்டு வெளியேறினார் மதியரசன். உறுப்பினர் ஆ.மதியரசன் அஞ்சலி செலுத்திய சமயம் தவிசாளர் உட்பட்ட அனைத்து உறுப்பினர்களும்தமது ஆசனங்களிலேயே அமர்ந்திருந்தனர். உறுப்பினர் ஆ.மதியரசன் வெளியேறியதும் பதுளை மண்சரிவில் உயிரிழந்தோருக்கு அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினார்கள்.

இதன் பின்னர் சபை ஆளும் தரப்பு உறுப்பினர் க.இரத்தினம் எழுப்பிய சமண்டலை மரம் தறித்து அழித்த விடயம் தொடர்பாகச் சபைத் தவிசாளர் பதிலளிக்கையில், கற்கள் பரவேண்டிய நேரத்தில் குறிப்பிட்ட மரத்தின் அடிப்பகுதி உக்கி இருந்ததால் எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த மரத்தை அழித்து அப்புறப்படுத்த உத்தரவிட்டேன் எனத் தெரிவித்தார்.

சிறிது நேரத்தில் அவரச அலுவல்கள் காரணமாகச் சபைத் தவிசாளர் வெளியேறியதால் உப தவிசாளர் கே.சாந்தசொரூபன் தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (த-173)

# அனுமதியின்றி குழாய்க் கிணறு அமைத்தவர் மீது நடவடிக்கை

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி நகரசபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைத்த குடியிருப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த 9ஆம் திகதி மீசாலைப் பகுதியில் வரியிறுப்பாளர் ஒருவர் இயந்திரம் மூலம் குழாய்க் கிணறு அமைத்தபோது அயல் வீட்டுக் கிணற்று நீர் பால் நிறமாக மாறியது.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர் சாவகச்சேரி நகரசபைத் தலைவருக்கு அறிவித்துள்ளர். தலைவர் அந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்க அவர்களும் அங்கு வந்து பார்வையிட்டனர். சபையின் அனுமதியின்றிக்குழாய்க்கிணறுஅமைத்தமைக்காக நகர சபையினரும், குழாய்க்கிணறு அமைத்ததால் தனது கிணற்றுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அயல் வீட்டுக்காரரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அனுமதியின்றி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குழாய்க்கிணறு அமைக்கக் கூடாது எனச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# பராமரிப்பற்ற கேணிகளில் நுளம்புப் பெருக்கம் அதிகம்



யாழ்ப்பாணம், நவ.13

எவரது பராமரிப்பு இன்றி கவனிப்பாரற்றுக் கிடக்கும் கேணிகளில் இருந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கால்நடைகளில் குடிதண்ணீர் தேவைக்காக அமைக்கப்பட்ட இந்தபழைமைவாய்ந்த கேணிகள் பராமரிப்பு இன்றித் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்தக் கேணிகள் சிலவற்றில் நீருடன் கழிவுப்பொருள்களும் தேங்கிக் காணப்படுவதால் நுளம்புக் குடம்பிகள் பெருகிக் காணப்படுகின்றன.

கோப்பாய், நீர்வேலி, அரியாலை புதிய செம்மணி வீதி போன்ற இடங்களில் உள்ள கேணிகள் இவ்வாறு பராமரிப்பு இன்றித் தூர்ந்த நிலையில் உள்ளன.

இது குறித்து வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

பிரதேசத்தில் உள்ள அனேகமான கேணிகள் பராமரிப்பு இன்றித் தூர்ந்த நிலையில் உள்ளன. இந்தக் கேணியில் சிலவற்றை மூடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டன. ஆனால் இந்தக் கேணிகளை மூடுவதற்கு எதிர்ப்புக் கிளம்பியதால் கைவிடப்பட்டது. இந்த வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதனால் இந்தக் கேணிகளைத் தற்போது துப்புரவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே நீர்வேலி கேணி துப்புரவு செய்யப்பட்டுக் கால்நடைகளின் குடிதண்ணீர் பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (த-17)

# 2 மாடிக் கட்டடங்கள் கொண்ட பொது நூலகம் சங்கானையில்

## இந்த மாத இறுதியில் திறப்பு

யாழ்ப்பாணம்.நவ.13

சங்கானைப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2 மாடிக்கட்டடங்களைக் கொண்ட பொது நூலகம் இந்த மாத இறுதியில் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபையால் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக 35 லட்சம் ரூபா நிதியில் பொது நூலகத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

சபையில் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் இந்த வருடத் திட்டத்தில் நூலகக் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது ஒரு மாடிக் கட்டடத்துக்கான பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே வலி.மேற்கைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் நூலகத்துடன் இணைந்துள்ள நிலையில் 2

> “ வலி.மேற்கைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் நூலகத்துடன் இணைந்துள்ள நிலையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாச கர்கள் இந்த நூலகத்தை பயன் படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாசகர்கள் இந்த நூலகத்தை பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

வலி.மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் அதிகளவு பயன்பெறக் கூடிய வகையில் பயனுள்ள நூல்கள் மற்றும் பத்திரிகைகள் நூலகத்தில் பாவனைக்கு வைக்கப்படும். அத்துடன் இரவல் வழங்கல் பகுதியும் நூலகத்தில் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# நீர் வழங்கல் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கலும் சுகாதாரத் திட்டமும் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணி தொடக்கம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ்.நீர்வழங்கல் முகாமைத்துவக் குழு, நிலம் கையகப்படுத்தற்கு குழு, திட்ட முன்னேற்றக்குழு ஆகியவற்றுடன் கலந்துரையாடல் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# 9 மில்லியன் ரூபா செலவில் இயக்கச்சியில் 15 கடைகள்

பளை, நவ.13

பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் மக்களின் நலன் கருதியும் இயக்கச்சியில் 9 மில்லியன் ரூபா செலவில் 15 கடைகளை அமைக்க முன்வந்துள்ள பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் எம்.மகாதேவன் இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அனைத்து மக்களும் மீள்குடியமர்த்தப்பட்டமையாலும் ஏ-9 வீதியில் போக்குவரத்து அதிகரித்துள்ளமையாலும் இந்தப் பகுதியில் மக்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் கீழுள்ள இயக்கச்சி உப அலுவலகத்துக்கு அருகாமையிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 90 லட்சம் ரூபா நிதியில் இந்தக் கடைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கடைத் தொகுதிகளில் கருவாட்டுக் கடைகள், மரக்கறிக் கடைகள், பலசரக்குக் கடைகள் ஆகியன இயங்கவுள்ளன. (த-115)

## நாரந்தனை பொது நூலகம் 17 ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம், நவ.13
ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் புளியங்கூடலில் புதிதாகக் கட்டப்பட்ட நாரந்தனை பொது நூலகம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கள்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நூலகத்தைத் திறந்து வைப்பார்.
ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.ஜெயகாந்தன் தலைமையில் இந்த வைபவம் இடம்பெறும். தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலகம் திறக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. (த-7)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு தண்டம்

கிளிநொச்சி, நவ.13
கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் அனுமதியற்ற முறையில் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய நபரொருவருக்கு ரூபா 50 ஆயிரம் தண்டம் விதித்துள்ளது நீதிமன்றம். கடந்த 11ஆம் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தால் மேற்படி தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (த-18)

# நெற்செய்கைக்கு நீர் வழங்குவதில் இடர்

### மழை குறைந்து குளங்களில் நீரின்மையே காரணம் என்கிறார் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்



கிளிநொச்சி, நவ.13
கிளிநொச்சி மாவட்ட குளங்களுக்கு மழை வீழ்ச்சி குறைந்து நீர் வரவு குறைவாகக் காணப்படுவதன் காரணமாகக் காலபோக நெற்செய்கைக்கு நீர் விநியோகம் மேற்கொள்வதில் இடரை எதிர்கொண்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பிராந்தியபிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டக் குளங்களின் நீர்மட்டம் தொடர்பாக உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த ஆண்டு போலவே மிக நெருக்கடியான நிலையிலேயே குளங்களின் கீழான நெற்செய்கை இடம்பெற்று வருகின்றது. நாம் எதிர் பார்த்தோம் இந்த மாதத்தில் குளங்களின் நீர்மட்டம் உயருமென்று. இரணைமடு 18 அடிக்கு மேலே உயருமென நம்பினோம். அதனடிப்படையிலேயே பயிர்ச் செய்கைக்கான கால அட்டவணை தயார் செய்யப்பட்டது. எனினும் துரதிஸ்டவசமாக இன்றுவரை நீர் மட்டங்கள் எதிர்பார்த்த அளவு உயரவில்லை. இரணைமடுவில் 15 அடி 04 அங்குலமாக நீர் மட்டம் காணப்படுகின்றது.
இந்த மட்டத்தில் வைத்தே நீரை விநியோகிக்க வேண்டியுள்ளது. விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு கொண்டிருப்பதால் மருந்து விசிறுதல், களை பிடுங்குதல் என்பவற்றுக்கு நீர் விநியோகம் அவசியமானதாகும். அரச அதிபரின் அனுமதியைப் பெற்று குளங்களைத் திறந்து விட்டிருக்கின்றோம்.
இரணைமடுக்குளம் கடந்த 10 ஆம் திகதி 15 அடி 06 அங்குலமாக இருந்த நிலையில் திறந்து விட்டுள்ளோம். முழுமையான நீர்விநியோகத்துக்கு நீர் பற்றாமல் உள்ளது. தொடர்ச்சியான மழை இவ்வாரத்தில் பெய்யாமல் விட்டால் மிகவும் நெருக்கடியான நிலைமைதான் ஏற்படும். தற்போது குளங்களின் நீர் மட்டங்களை வைத்துக்கொண்டு நீர் விநியோகத்தினை தொடர்ந்து செய்யமுடியாது. 10 மில்லிமீற்றர் மழை கிடைத்திருப்பதன் காரணமாக ஓரளவு ஆறுதல் அடையக் கூடியதாகவுள்ளது. அக்கராயன், கல்மடு குளங்களில் நீர் மட்டம் குறைவாக இருந்த போதிலும் குளங்களைத் திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த ஆண்டைப் போல் அல்லாது இவ்வாண்டு கூடுதல் மழைவீழ்ச்சி இடம் பெறவேண்டும். அக்கராயன் குளம் 08 அடி 11 அங்குலமாக நீர் மட்டம் உள்ளது. கல்மடு ஓரளவு நீர் மட்டம் 11 அடி 06 அங்குலமாக உள்ளதன் காரணமாக நீர் விநியோகம் மேற் கொள்ளககூடியதாகவுள்ளது - என்றார். (த-18)

## முழங்காவில் வித்தியாலயத்தில் புதிய கட்டடம் திறந்து வைப்பு



முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
கனடாவில் வாழ்கின்ற முத்தையா இராஜகோபால் என்பவரால் 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடமே திறந்து வைக்கப்பட்டது.
பாடசாலை முதல்வர் திருமதி. சிவானந்தி பரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கட்டடத்தை அமைக்க உதவிய முத்தையா இராஜகோபால் கலந்துகொண்டு அதனைத் திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பூநகரி கல்விக்கோட்ட அதிகாரி சு.தர்மரட்ணம், கௌரவ விருந்தினராகக் கிராம அலுவலர் பா.நகுலேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்காவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.
368 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் கணனி அறை, நூலகம் என்பன இயங்குகின்றன. (த-18)

## வடக்கு, கிழக்கில் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.13
வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பெண் தலைமைத்துவம், மாற்று வலுவுள்ளோர் மற்றும் ஆதரவற்ற குடும்பங்கள் ஆகியவற்றின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவது தொடர்பான செயலமர்வு கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில் வவுனியா நெல்லி ஸ்ரார் ஹோட்டலில் இடம்பெற்றது.
பிரித்தானியா ஏபிரி நிறுவன அனுசரணையுடன் சமூக தொழில் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்ட நிறுவனத் தினால் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.
இதில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் அனைத்து மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், அந்தந்த மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், சோதியா பெண் அமைப்பின் பிரதிநிதிகள் என 92 பேர் பங்குபற்றியிருந்தனர். (த-9)




## வடக்கு சிகை அலங்கரிப்பாளர்களின் வருமானம் அதிகரிக்க ஆலோசனை

யாழ்ப்பாணம், நவ.13
சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்கள் தமது வாடிக்கையாளர்களுடன் சிறந்த அணுகுமுறைகளைப் பேணுவதன் மூலமும், புதிதாக அறிமுகமாகிக் கொண்டிருக்கும் அழகு நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலமும், வாடிக்கையாளர்களைக் கவரும்படியான சுகாதார முறைமைகளைப் பின்பற்றுவதன் மூலமும் தமது வருமானங்களை படிப்படியாக அதிகரித்துக் கொள்ள முடியும்.
இவ்வாறு தெரிவித்தார் சிகை அலங்கார் பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்குபவரும் அரச என்.வி.கியூ தகுதிச் சான்றிதழ் பெற்றவரும் சிகை அலங்கரிப்பு பரிசோதகருமான திலக் டி சில்வா.
வடக்கு மாகாணச் சிறுகைத் தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தைக் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து எதிர்வரும் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான ஒரு வருட காலத்தில் இரட்டிப்பாக்குதல் மற்றும் அவர்களுக்கான சேமிப்பைக் கட்டயமாக்குதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டு வரும் நியுக்கிளேஸ் நிறுவனம் நேற்றைய தினம் தனது செயற்பாட்டை வடக்கு மாகாண சிகை அலங்கார ஒன்றியத்தில் முன்னெடுத்தது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டபோதே திலக் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அமெரிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் (யு.எஸ்.எய்ட்) நிதியுதவியோடு கிறிஸ்தவ இளையோர் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் வடமராட்சி, தென்மராட்சி, சுன்னாகம், யாழ்ப்பாணம் எனப் பல பகுதிகளிலும் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட சிகை அலங்கார நிறுவனங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கான பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டதுடன் புதிய நுட்பங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. (த-ரி)

## கோட்டைக்கட்டிய குளம் அ.த.க. பாடசாலையின் மாணிக்க விழா



முல்லைத்தீவு, நவ. 13
கிராமப்புறப் பாடசாலையொன்று மாணிக்க விழாவைக் கொண்டாடி நூல் வெளியீடு ஒன்றை மேற்கொள்வது பாராட்டுக்குரியதென முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு துணுக்காய் கோட்டைக்கட்டிய குளம் அ.த.க. பாடசாலையின் மாணிக்க விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இப்பாடசாலை மாணிக்கவிழா கொண்டாடுவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். கிராமங்கள் தோறும் ஆலயங்கள் அமைக்கப்படுவதன் மூலம் ஆன்மீகம் வளர்வதுபோல கிராமங்கள் தோறும் பாடசாலைகள் அமையப்பெற்றால் கல்வி பெரிதும் வளர்ச்சியடையும் என்பதே உண்மை. கிராமங்களில் வாழ்பவர்களிடம் ஒரே வகையான ஒழுக்கப் பண்பு பரம்பரையாகக் கடத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. ஆனால் அடிப்படைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பெரிய பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பாடசாலைக்கான போக்குவரத்துக்கு பெருமளவு நேரத்தினையும் பொருளாதாரத்தையும் செலவழிக்கின்றனர். கிராமங்களில் பணியாற்றுவதற்கு ஆசிரியர்கள் விரும்புவதில்லை. இந்த நிலை மாறவேண்டும். கிராமங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை விலைமதிப்பற்றது.
இப்பாடசாலை 40 ஆண்டுகளாக உயரிய கல்விப் பணியினை ஆற்றிவருகின்றது. பல மாணவர்களை உயர்கல்விக்கும் அனுப்பிவருகின்றது. இப்பாடசாலை எதிர்காலத்தில் சிறந்த கல்வியை மாணவர் களுக்கு வழங்க வாழ்த்துகின்றேன் என்று தெரிவித்தார்.
பாடசாலை முதல்வர் இ.தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணிக்கக் கோட்டை என்னும் மலரை துணுக்காய் கோட்டக் கல்வி அலுவலர் எஸ்.செல்வரட்ணம் வெளியிட முதன்மை விருந்தினர் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் பெருமளவு பெற்றோர் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (த-18)

### குற்றங்களும் கைதுகளும்

## கஞ்சா வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 13
9 கஞ்சாப் பொதிகளைத் தன் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் நபர் ஒருவரை யாழ். பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.
யாழ். திருநகர் இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த தேவதாஸ் குணசீலன் (வயது-46) என்பவரே கைதானவராவார்.
யாழ். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்துக் குறித்த நபரின் வீட்டைச் சோதனை செய்தபோது, 4 கிராம் 810 மில்லிக்கிராம் நிறையுடைய 9 கஞ்சா பைக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டதுடன் அதை வைத்திருந்த நபரும் கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட நபரை யாழ். நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-106)

## சிறுமி துஷ்பிரயோகம் மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், நவ.13
13 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் 23 வயது இளைஞர் ஒருவரும், அவருக்கு உதவி புரிந்த இருவரும் யாழ். பொலிஸாரினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப் பட்டுள்ளனர்.
கடற்கரை வீதி, கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (த-106)

# உயர்நீதிமன்றம் வழங்கியது ஆலோசனை ரீதியான கருத்தே

## அதை சபை முதல்வரே அறிவித்திருக்கலாம் என்கிறார் முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா



கொழும்பு, நவ.13
மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி பதவிக்கு தெரிவுசெய்யப்படலாம் என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வழக்கொன்றின் தீர்ப்பல்ல. அது ஆலோசனை ரீதியான கருத்தே என்று தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா. உயர்நீதிமன்ற நீதியரசர்களை நாடாமல் இதனை சபை முதல்வரே அறிவித்திருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"விசேடமாக வழக்கொன்றின் தீர்ப்பு வழங்கப்படும் முன் அதனை விசாரிக்க காலம் எடுக்கும். விடயங்களை தொகுத்து, சாட்சியங்களை கேட்டறிந்த பின்னரே தீர்ப்பு வழங்கப்படும். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை பார்த்தால் நீதிபதி ஒரே நாளில் வழக்கை விசாரித்து தீர்ப்பை வழங்க முடியும். சட்டத்தை தரம் தாழ்த்தும் இவர்கள் என்ன செய்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது.
அலரி மாளிகை இருக்கும் இடத்தில் தான் 1802 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் இருந்தது. அதற்கு அருகில் ஆங்கிலேயர் அரசின் மனிதர்களை சித்திரவதை செய்யும் கூடமும் இருந்தது. இதனை சட்டத்தரணிகள் எதிர்த்ததன் காரணமாகவே உயர்நீதிமன்றம் புதுக்கடைக்கு மாற்றப்பட்டது.
200 வருடங்களுக்கு பின் மஹிந்த ராஜபக்ஷ தற்போது உயர்நீதிமன்றத்தை அலரி மாளிகைக்கே கொண்டு வந்துள்ளார். மூன்றாது முறை போட்டியிட முடியுமா முடியாதா? என்ற விடயம் தொடர்பில் நியாயமான தீர்ப்புக்கு அடிபணியும்வகையில்மஹிந்த செயற்பட மாட்டார் என் பதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே அறிந்து கொண்டோம். அதன் காரணமாகவே முன்னதாகவே இதனை நாட்டு மக்களுக்கு நாங்கள் தெரியப்படுத்தினோம்.
மஹிந்தவுக்கு ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டுமாயின் இன்னும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் இருக்கலாம். அப்படி இருக்கும் போது ஏன் சட்டத்தின் நியாயங்கள் அனைத்தையும் அழித்து விட்டு ஆட்சி அதிகாரத்தில் இருக்க முயற்சிக்கிறார். நீதிமன்றத்தில் அதிகாரம் என்பது அரசியலமைப்பு ரீதியான மக்களின் அதிகாரம். இதனால் மக்களே தற்போது தீர்மானத்தை எடுக்க வேண்டும். இது குறித்து நாங்கள் தொடர்ந்தும் மக்களுக்கு தெளிவு படுத்துவோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சுகாதாரத் துறைக்கு பல்வேறு பிரச்சினைகள்

## ஐ.தே.க. குற்றஞ்சாட்டுகின்றது

கொழும்பு, நவ.13
நாட்டின் சுகாதாரத் துறை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.
கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தேசிய சுகாதார சேவைகள் சங்கத்தின் வருடாந்த சம்மேளனம் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் இலங்கையில் சுகாதார துறை தற்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டாலும் அதற்கு தீர்வு காணப்படுவதற்கான எத்தனிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# ஆளும்கட்சிக்கு தாவுவதற்கு ரூ.500 லட்சம் பேசப்பட்டது

## ஜனநாயகக் கட்சி உறுப்பினர் நலின் பிரதீப் உடுவெல போட்டுடைத்தார்




கொழும்பு, நவ.13
தமது பக்கத்தில் இணைந்து கொண்டால் ரூபா 500 லட்சம் வரையில் தருவதாக ஆளும் தரப்பில் இருந்து கேட்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர், நலின் பிரதீப் உடுவெல.
தமது கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணையவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளமை தொடர்பில் விளக்கமளிப்பதற்காக ஜனநாயகக் கட்சி நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.
இதன்போது, ஜனநாயகக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர், நலின் பிரதீப் உடுவெல தெரிவித்ததாவது:
"குறிப்பாக 500 லட்சம் ரூபா தருவதாகவும், அதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன அனுமதிப்பத்திரம் தருவதாகவும், தேவையாயின், கனடா அல்லது ஆஸ்திரேலியா அல்லது நெதர்லாந்தில் குடும்பத்தாருக்கு குடியுரிமை நுழைவு விசைவு பெற்றுத் தருவதாகவும் அவர்கள் கூறினார்கள். அதனையும் விட ஹோமாகமதொகுதியின்இணை அமைப் பாளர் பதவியைத் தருவ தாகவும் தெரிவித்தார்கள். நான் பணத்தின் பின்னால் செல்கின்ற நபர் அல்லவென அவர்களுக்கு இறுதியாக பதிலளித்தேன். வாழ்வதற்காக மட்டும் என்னிடம் பணம் இருந்தால் போதுமானது."- என்று தெரிவித்தார். (ற)

# சப்ரகமுவ மாணவருக்கு வகுப்புத் தடை

கொழும்பு, நவ.13
சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்குள் நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் உள்நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு மாணவர்களுக்கும் பெண்கள் விடுதியில் உள்நுழைய ஒத்துழைப்பு வழங்கிய மாணவி ஒருவருக்கும் விடுதி வசதி மறுக்கப்பட்டுள்ளது என்றும் - பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் தாங்கள் தேநீர் அருந்துவதன் பொருட்டே பெண்கள் விடுதிக்குச் சென்றதாக குற்றச்சாட்டப்பட்டுள்ள மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

நன்றி: டெய்லிமிரர்




# பல தரப்பினரிடம் இருந்தும் பலசேனாவுக்கு அழைப்பாம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான தமது அமைப்பின் ஒத்துழைப்பைபெற்றுக்கொள்வதற்காக பல்வேறுப்பட்ட தரப்பினரிடமிருந்து அழைப்புக்கள் கிடைக்க பெறுவதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் இதனை தெரிவித்துள்ளார்.
பௌத்த தர்மத்துக்கு உட்பட்ட யாப்பு ஒன்று நாட்டுக்கு அவசியம் என்றும் - அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ற)

# தேர்தலில் ரணிலே போட்டியிட வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கம் போர்க்கொடி

கொழும்பு, நவ.13
அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவே பொது வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.
இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித்த,
"ரணில் விக்கிரமசிங்கவுடன் தோல்வியடைந்த கரு ஜயசூரிய எவ்வாறு பொதுவேட்பாளராக முடியும். இதுவொரு கேலிக்குரிய விடயமாகும். இது இந்தக் கட்சியை தோல்வியடையச் செய்வதற்கான திட்டமல்லவா? ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சித் தலைவர் முன்வர வேண்டும். கரு ஜயசூரியவிடம் திட்டமொன்று உள்ளது. ரவி, மங்கள மற்றும் விஜேதாஸ போன்றவர்களையும் குறிப்பிட வேண்டும்.
ரணிலை நீக்குவதற்காக உள்ளே போராடி, கட்சியின் தலைமைத்துவத்தக்கு கரு ஜயசூரியவை கொண்டுவரப் போகின்றனர்.
கரு ஜயசூரியவின் மைத்துனர்களையும் கட்சிக்குக் கொண்டு வர முயற்சிக்கின்றனர். எனவே இதில் ரணில் விக்கிரமசிங்க சிக்க வேண்டிய அவசியம் இல்லை."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# போர் குற்றச்சாட்டை சமாளிக்கவே அவசரமாக ஜனாதிபதித் தேர்தல்

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் அதாவுட செனவிரட்ன



கொழும்பு, நவ.13
சர்வதேச நாடுகளால் கொண்டு வரப்படும் போர் குற்றத்துக்கு பதிலளிப்பதற்காகவே அவசரமான ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரட்ன.
சிரேஷ்ட அமைச்சர்களின் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:
"போர் குற்றத்துக்காக பதிலளிக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்தத் தேர்தலின் போது மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருக்கின்றனர் என்பதை போர் குற்றம் சுமத்தும் உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.
போர் நடைபெற்ற காலத்தில் போரை நிறுத்துமாறு சில வெளிநாடுகள் அழுத்தங்களை கொடுத்தன. சில நாடுகள் பயங்கரவாதிகளை மீட்க கப்பல்களை அனுப்பியிருந்தன. எனினும் இந்த வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
இதன் காரணமாக வெளிநாடுகள் போர்க் குற்றங்களை சுமத்தி விசாரணைகளை நடத்தி வருகின்றன. இதற்கு ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை வழங்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்களே

இன்றைய உலகின் வியத்தகு விஞ்ஞான விந்தையினால் அவசிய மானதும், அவசரமானதுமான ஒன்றாகக் காதல் மிளிர்கின்றது. ஏனெனில் தற்கால சமூகமாற்றத்தினால் காதல் என்பது கட்டாயமானதாகவே கருதப்படு கின்றது. அதாவது விரும்பியோ விரும்பா மலோ காலத்தின் தேவைகளில் ஒன்றாகவே இளையோர் உள்ளங்களில் காதல் எனும் கடிவாளம் வலம் வருகின்றது. இதனால் பல தரப்பட்ட சஞ்சலங்களும், பாதிப்புக்களும் பரந்து காணப்படுகின்றன. எது எவ்வாறு இருப்பினும் சிலருக்கு கனியாகவும், சிலருக்குக் காயாகவும் சிலருக்கு எட்டாக்கனியாகவும், சிலருக்குக் கட்புலனாகா மலும் பல்வேறுபட்ட கோணங் களிலும் காதல் பவனி வந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறான காதலினால் அதிகம் தோல்வியை எதிர்கொள்பவர்களாக ஆண்களே துலங்குகிறார்கள்.

அதாவது காதல் என்று வந்து வு டனே ஆண்கள் கட்டிப் போடப்பட்டவர் களாக, பெட்டிப் பாம்புகளாக முடங்கி விடுகிறார்கள். அவர்கள் தமது காதலிக்காகவே அனைத்தையும் தியாகம் செய்து விடுகிறார்கள். அன்பு, பாசம், பழக்க வழக்கம் எனத் தம்மையே அடக்கிக் காதலை ஓர் உயர் வாகக் கொண்டு எதையுமே காதலியை கேட்டுக் செய்பவர்களாக ஆண்கள் மாறி விடுகின்றார்கள்.

ஆனால் இத்தனை மாற்றங்களுக்கும் காரணமாக விளங்கும் காதலிகள் எதிர் மாறானவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஆண்களை ஓர் அடிமையா ளர்களாகவே அவர்கள் கருதுகின்றனர். அது மட்டுமன்றி நவநாகரிக மாற்றத்தினால் பல்வேறு கோணங்களில் மனநிலையைக் கொண்டவர்களாகப் பெண்கள் அதாவது காதலிகள் விளங்குகின்றனர். தமக்குள் ஒரு சிறிய சண்டை ஏற்பட்டதும் பிரிவு தான் முடிவு எனக் கொண்டு பச்சோந்திகள் போன்று உடனே மாறி விடுகிறார்கள்.

ஏற்கனவே ஏற்பட்ட காதலை அடியோடு சிதைத்துப் புதிதாகத் தம்மைக் கவரக் கூடியவர்களாக யார் தென்படுகிறார்களோ அவர்களைத் தமக்கு ஏற்றவர்களாக மாற்றி அமைக்கிறார்கள். அது மட்டுமன்றி காதல் என்பது அவர்களுக்கு காலுக்கு அணியும் செருப்பாகத்தான் இருக்கின்றது. பொதுவாக உலகியலை நோக்குகின்ற போது காதலிக்காக காதலனால் கட்டப்பட்ட தாஜ்மஹால் காதலுக்கான சின்னமாகக் காணப்படுகின்றது. ஆனால் எந்தவொரு காதலனுக் காகவும் எந்தவொரு காதலியும் நினைவுச் சின்னம் கட்டியதாகச் சரித்திரம் இல்லை.

காதலில் உயிரையே தியாகம் செய்பவர்களாக அதிகம் விளங்கு பவர்களாகவும் ஆண்கள் காணப் படுகின்றனர்.

இவ்வாறான தியாகிகளாக ஆண்கள் விளங்கினாலும்கூட அதிகளவு தோல்வியை எதிர் கொள்பவர்களாகவும் ஆண்களே காணப்படுகின்றனர்.

இதுவே எனது வாதம் ஆகும்

*ஆர்.ரிஷி, நயினை.*

விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட் டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங் கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................

முகவரி :-........................................

........................ திகதி ........................ கையொப்பம்

**இளவல்கள் வட்டம்,**
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




பாராட்டி வாழ்த்துகின்றோம்

11.11.2014 செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 30 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் தமிழ்துறையில் சிறப்பு கலைமாணி (B.A. Hons) பட்டம் பெற்ற

திருமதி
**விஜயலதா குகேந்திரன்**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர்வுபெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்

Best Wishes

வாழ்த்துபவர்கள்
கணவர் -குகேந்திரன்
மகள் கலையரசி
ஒட்டுசுட்டான், புளியங்குளம்.

(479?/10.6)

## பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றி டம் உண்டு.

**குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பெண் பராமரிப்பாளர்கள் தேவை.**

**தகைமைகள்:**

1. க.பொ.த. சா/தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை.
2. வயதெல்லை : 30-65
3. விடுதியில் தங்கியிருப்பது அவசியம், உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
4. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடைய வராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவ நெறி ஒழுக்கத்துக்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்புமிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 20.11.2014**

தொடர்புகளுக்கு: நி.இராசநாயகம், தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி. தொலைபேசி இல. 077 060 4950, 021 492 3118

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருமதி இராஜராஜேஸ்வரி சத்தியசீலன்**



எமது கல்லூரியின் பழைய மாணவியும் பகுதித் தலைவருமான திருமதி இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்கள் 11.11.2014 யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் பல பட்டங்கள்பெற ஆசிக்கின்றோம்

கல்லூரிச் சமூகம்
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
வதிரி, கரவெட்டி.

Best Wishes

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## நவரட்ணம் துஷிகேசன்

(யாழ் பல்கலைக்கழக வர்த்தகப் பீரிவு – 2ஆம் வருட மாணவன்)



அன்னை மடியில் 28.12.1991 — இறைவன் அடியில் 01.10.2014

ஆலமரமாய் நீ இருந்து நிழல் தருவாய் என இருந்தோம்
காலனவன் கவர்ந்ததனால் கண்ணீரால் நனைகின்றோம்
பாசப் பறவையே எங்கே நீ சென்றுவிட்டாய்
நெஞ்சு வலிக்குதையா நிம்மதி வாராதோ?
அன்பான உனைத் தேடுகின்றோம் காணாமல் வாடுகின்றோம்
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 14.11.2014 வெள்ளிக்கிழமை மதியம் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

குடும்பத்தினர்.

168/1, முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(54054) (7.6.3)

13 NOV 2014

# வில்லன் வாழ்க்கை சுகமானது



தமிழ் சினிமா ரசிகர்களுக்கு வில்லன்கள் என்றாலே ரகுவரன்தான் முதலில் ஞாபகத்துக்கு வருவார். அதன் பின்னரே ஏனைய வில்லன் நடிகர்கள். சில காலங்களுக்கு முன்னர் வரையில் தமிழ் சினிமாவில் தனது அதட்டலான, வில்லத்தனமான நடிப்பால் கலக்கிக் கொண்டிருந்தவர் ஆனந்தராஜ். தனது பிறந்த நாளை கடந்த 10 ஆம் திகதி கொண்டாடினார். இதன்போது அவர் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

சினிமாவில் படித்தேன். அதன் பின்னர் வாய்ப்புக்களுக்காக அலைந்தேன். அப்போதுதான் 'வாழும் ஆலயம்' மற்றும் 'உரிமைக் கீதம்' படங்களில் துணை வில்லனாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின்னர் 'என் தங்கச்சி படிச்சவ' படத்தில் வில்லனாக நடித்தேன். அதன் பின்னர் தமிழ் சினிமாவில் மறக்க முடியாத வில்லன் நடிகராக நிலை நிறுத்திக் கொண்டேன்.

ஒரு சில படங்களில் கதாநாயகனாகவும் நடித்துள்ளேன். கதாநாயகனாக நடிப்பதை விட வில்லனாக நடிப்பதே சுகமானது. ரசிகர் மன்றம் வைக்க மாட்டார்கள், விழாக்களுக்கு கூப்பிட மாட்டார்கள் இது போன்ற பல பிரச்சினைகள் வராது. நமது நடிப்பும் நாமும் என்றே இருந்து விடலாம். வில்லனாகவே எப்போதும் நடிக்க ஆசை - என்றார்.




ஒரு மனிதனின் முகத்தில் சிரிப்பைக் காண விரும்பிய கடவுள் அவன் முன்னே தோன்றினார். "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

'பணம், தங்கம், வைரம்!' என்று அந்த மனிதன் ஆசையோடு கேட்டான். கடவுள் வலது கையின் சுட்டுவிரலை நீட்டினார். அங்கிருந்த பொருள்கள் எல்லாம் தங்கமானது. ஆனால் மனிதன் பேசாமல், சிரிக்காமல் இருந்தான்.

கடவுள் மறுபடி விரலை நீட்ட, அங்கிருந்த ஏனைய பொருள்களும் தங்கமானது. அவன் பேசாமலேயே இருந்தான். கடவுள் வேகமாக அந்த அறையில் உள்ள பொருள்களை எல்லாம் தங்கமாக்கினார். அப்போதும் மனிதன் சிரிக்க வில்லை. சோர்ந்து போன கடவுள் மனிதனிடம் கேட்டார். "இன்னும் உனக்கு என்ன வேண்டும்?" என்று. "அந்த விரல் வேண்டும்" என்றான் மனிதன். கடவுள் மயங்கி விழுந்தார்....!!

## சிரார்த்தனம் என்றால் என்ன?

சிரத்தையுடன் அதாவது நம்பிக்கையுடன் இறைவனின் மலார் பாதங்களுக்குப் பிண்டத்தைச் சமர்ப்பித்தல் என்பதே 'சிரார்த்தம்' என்பதன் உண்மையான கருத்து.




## இப்படியும் கொடுமை

மனைவியைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில், 45 வயது பெண்ணொருவரை நிர்வாணமாக்கி, முகத்தில் கரியைப் பூசி, கழுதை மேல் ஏற்றி ஊர்வலம் கூட்டிச்சென்ற சம்பவம் இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராஜஸ்தான் மாநிலம் ராஜசமந்த் மாவட்டத்திலேயே இந்த மனிதாபிமானமற்ற அநாகரிக செயல் நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 30 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் நடந்த கிராமத்தில் பழங்குடியின மக்கள் அதிகம் வாழ்ந்து வருகின்றனர். குறித்த பெண்ணின் மருமகள் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் உயிரிழந்தமைக்கான காரணங்கள் தெரியாத பட்சத்தில், இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தாமல் உடலை எரித்துள்ளனர்.

அவரை இந்தப் பெண் தான் கொன்றுள்ளார் என்று ஊரில் உள்ள பஞ்சாயத்துத் தலைவருடன் கூடிய குழு முடிவெடுத்து, கொடூரமான தண்டனையைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

கிராமத்தின் நடுவில் வைத்து அனைவரும் பார்க்க அந்தப் பெண்ணை நிர்வாணப்படுத்தியுள்ளனர். பின்னர் அவரது முகத்தில் கரியைப் பூசி கழுதை மீது ஏற்றி, கிராமம் முழுவதும் சுமார் ஒரு மணி நேரம் ஊர்வலமாக அழைத்துச் சென்றுள்ளனர்.

இதைப் பார்த்த அந்தப் பெண்ணின் கணவர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் வழக்குப் பதிவு செய்து 30 பேரை கைது செய்தனர். இதில் 9 பேர் அந்தப் பெண்ணின் உறவினர்களாவர். தற்போது பாதிக்கப்பட்ட பெண் இன்னும் அதிர்ச்சி அடைந்துள்ளார். அவருக்கு மன நல ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சோகமான இன்ப அதிர்ச்சி

வியட்நாம் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சிங்கப்பூருக்கு சுற்றுலா சென்றிருந்தார். அங்கு அவர் தன்னுடைய காதலிக்கு ஐபோன் 6 ஒன்றை வாங்க விரும்பி 'அப்பிள்' காட்சியறைக்குச் சென்றார். 950 டொலர் என்று விலை பேசி ஐ போன்6 ஒன்றை வாங்கினார். ஆனால் அவருடைய ஐபோனுக்கு மேலதிக உத்தரவாதத்துக்குரிய கட்டணத்தை சேர்த்து ஆயிரத்து 500 டொலர் என்று அவருக்கு பற்றுச் சீட்டுக் கொடுக்கப்பட்டது. அவர் பில் தொகையைக் கவனிக்காமல் தன்னுடைய பெபிட்கார்டை கொடுத்து பணத்தைக் கட்டிவிட்டார்.

பின்னர் பற்றுச் சீட்டுத் தொகையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். தான் மாதம் 200 டொலர் மட்டுமே சம்பாதிப்பதாகவும், எனவே தன்னுடைய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடும்படியும் கெஞ்சினார். ஆனால் கடைக்காரர் கொடுக்க மறுத்ததால் அவர் அந்த இடத்திலேயே முழங்கால் இருந்து மண்டியிட்டு அழுது புலம்பினார்.

இந்தப் பரிதாபக் காட்சியை ஒருவர் வீடியோ எடுத்து சிங்கப்பூரில் உள்ள இணையத் தளத்துக்கு அனுப்பினார். அந்த இணையத் தளம் வீடியோவைத் தங்கள் இணையத்தளத்தில் பதிவு செய்து பரிதாபமான அந்த வியட்நாம் வாலிபருக்கு உதவி செய்ய விரும்புவர்கள் பணம் அனுப்பலாம் என்று கோரிக்கை விடுத்தது.

வீடியோ வெளியிடப்பட்ட சில நிமிடங்களில் 11 ஆயிரத்து 713 டொலர் பணம் சேர்ந்துவிட்டது.

அதற்குள் இந்த விடயத்தில் பொலிஸார் தலையிட்டு அவருக்குக் கடை நிர்வாகத்திடமிருந்து 450 டொலர் பணத்தை மட்டும் மீட்டுக் கொடுத்துள்ளனர்.

தனக்கு ஆயிரத்து 50 டொலர் நஷ்டம் எனறு அவர் நினைத்துக் கொண்டிருக்கும் நிலையில் இணையத்தள நிர்வாகத்தினர் அவருக்குப் பொதுமக்கள் அனுப்பிய 11 ஆயிரத்து 173 டொலர் பணத்தை அவருடைய கையில் கொடுத்து நடந்த விடயத்தையும் கூறினர். இதனால் இன்ப அதிர்ச்சியில் மூழ்கிய அவர், தனக்குப் பணம் அனுப்பிய சிங்கப்பூரைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



# சின்னத்திரையிலும் புகுந்தது பொலிஸ்



பொலிஸ் கதையை மையமாக வைத்து இதுவரையில் தமிழ் சினிமாதான் எடுத்து வந்தார்கள். தற்போது அது சின்னத் திரைக்குள்ளும் ஊடுருவியுள்ளது.

தற்போது 'சீ' தொலைக்காட்சியில் 'திருமாங்கல்யம்' என்ற நெடுந்தொடர் ஒளிபரப்பாகத் தொடங்கியுள்ளது. இந்தத் தொடர் பொலிஸ் கதையை மையமாக வைத்தே எடுக்கப்பட்டுள்ளது. அடிதடியான கதையல்ல. மாறாக பொலிஸ் குடும்பத்தில் நடக்கும் பிரச்சினைகளைச் சொல்லும் தொடராகவே 'திருமாங்கல்யம்' அமையப்போகின்றது.

பொலிஸ் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டுப் பல துன்பங்களை அனுபவித்த தாய், தன் மகளைப் பொலிஸ் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார். ஆனால் மகளோ பொலிஸ் உத்தியோகத்தரைக் காதலித்துத் திருமணமும் செய்து கொள்கின்றார். அதன் பின்னர் வரும் பிரச்சினைகளை மையமாக வைத்தே 'திருமாங்கல்யம்' தொடர் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எல்லாவற்றிலும் அரசியல் என்ற துரதிர்ஷ்டம் தமிழர்களுக்கு

போர் முடிந்ததன் பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்ட, ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற மாற்றங்கள் தமிழர்களை முன்னோக்கி நகர்த்துகின்றனவா என்பது மிக முக்கிய கேள்வி. உட்கட்டுமான ரீதியிலும் வடக்கு - தெற்கு இடையிலான போக்குவரத்துத் தொடர்பு ரீதியிலும் போருக்குப் பின்னர் வளர்ச்சி ஏற்பட, பண்பாட்டு ரீதியிலும் நிலப்பரப்பு ரீதியிலும் தமிழர்கள் பின்னோக்கித் தள்ளப்படுவதும் நடக்கிறது. இது கொழும்பு - வடக்கு அரசுகள் இடையிலான அரசியலின் வெளிப்பாடு.

துரதிர்ஷ்டவசமாக போருக்குப் பின்னரான வடக்கின் நிலைமை எல்லாவற்றுக்குள்ளும் அரசியல் என்றாகி விட்டது. இது தமிழர்களைப் பின்னோக்கி இழுத்து விழுத்தும் இழிவரசியலுக்கும் வித்திட்டு விட்டது. மக்களின் அடிப்படை சுகாதார விடயத்தில்கூட கண்மூடித்தனமான அரசியல் உள் விளையாட்டு புகும் அளவுக்கு அந்த நிலைமை போயிருக்கிறது என்பது வேதனையானது.

ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் உற்பத்திகள் தொடர்பில் சுகாதாரத்துறை அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை என்பது மக்களின் அடிப்படைச் சுகாதாரத்தைப் பேணும் நோக்கிலானது. ஒரு மனிதனின் சுகாதார நலன் என்பது அவனது அடிப்படை உரிமைகளில் ஒன்று. அது மிகச் சரியாகப் பேணப்படுவது மனிதனின் ஆயுள் முதற்கொண்டு அனைத்து அபிவிருத்திக்கும் முக்கியமானது.

போரால் பெரும் மனித இழப்புக்களைச் சந்தித்த ஒரு சமூகத்தில் ஆரம்ப சுகாதாரமும் அடிப்படைச் சுகாதாரமும் பேணப்படுவது இன்றியமையாதவை. அதிகாரிகள் அதற்கான நடவடிக்கையையே எடுத்திருந்தார்கள். ஆனால், கொழும்பு அரசுடன் ஒட்டி வாழும் அரசியல் கட்சிகள் தமது சுயநலத்துக்காக அதிகாரிகளின் நடவடிக்கை மீதும் அரசியல் சாயம்பூசின. மக்களின் சுகாதார நலன்களைவிட வியாபாரிகளின் நலன்களே முக்கியமானவை என்ற ரீதியில் அதற்கு ஒத்து ஊதுவதற்கும் சிலர் இங்கே இருந்தார்கள்.

யாழ். மாவட்டத்தில் நீர் மூலம் பரவும் நோய்களின் பாரதூரமான பாதிப்புக் குறித்தும் ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் என்பன அதற்கு எந்தளவு தூரம் பங்களிக்கின்றன என்பதையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தனது அறிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார். அதன் அடிப்படையிலேயே தமது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால், மக்களின் நலன் குறித்த இந்தத் திட்டத்தின் மீது லஞ்ச, ஊழல் சாயமும் அதன் பின்னர் அரசியலும் பூசப்பட்டன. சிலரது மலின நலன்களுக்காக அனைத்து மக்களதும் சுகாதாரத்தை ஆபத்தில் தள்ளுவதற்கும் இவர்கள் தயாராக இருந்தார்கள் என்பது மிகமிகக் கேவலமானது.


அரசியல் செய்வதற்கு பல வழிகளும் இடங்களும் இருந்தபோதும் மக்களின் அடிப்படைத் தேவைகளில் அரசியல் செய்யும் இவர்களின் போக்கு கடும் கண்டனத்துக்குரியது; மிக மோசமானது.

இவ்வாறு எல்லாவற்றுக்குள்ளும் அரசியலை நுழைத்து அதிகாரிகளை நெருக்கடிக்குள் தள்ளுவது, இனிவரும் காலங்களில் அவர்கள் நேர்மையுடன் மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுகாது தடுத்துவிடும். இதைக்கூட இந்த சுயநல அரசியல்வாதிகள் கவனத்தில் எடுக்கவில்லை. தமக்கு ஆமாம் சாமி போடுபவர்களாகவே அதிகாரிகளைப் பழக்கிவிட்ட அவர்களுக்கு அதிகாரிகள் நேர்மையாகச் செயற்படுவதைப் பார்க்கச் சங்கடமாக இருக்கக்கூடும்தான். ஆனால், வாக்களிக்கும் மக்களின் நலனைக் கொஞ்சமாவது கருத்தில் கொண்டு அவர்களின் அடிப்படை நலன்களிலாவது அரசியல் செய்யாமல் இருப்பதே நல்லது.

# திருப்பத்தை ஏற்படுத்துமா வாசனின் புதிய கட்சி?

சேரலாதன்





தமிழ்நாடு காங்கிரஸ் இரண்டாகப் பிளந்துவிட்டது. முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தனிக் கட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். தற்போது தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அவர் ஆதரவு திரட்டி வருவதைக் காண முடிகின்றது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி செல்லாக் காசாகி விட்ட நிலையில் தற்போது பிளவுபட்ட நிலையில் காணப்படுகின்றது.

**காங்கிரஸின் கோட்டை**

1967 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் கோட்டையாக விளங்கியது. பெருந்தலைவர் காமராஜர் போன்ற அப்பழுக்கற்ற தலைவர்களைக் கொண்டிருந்த அந்தக் கட்சியை அப்போது எவராலும் அசைக்க முடியவில்லை. ஆனால் திராவிட இயக்கங்கள் மெல்ல மெல்ல செல்வாக்குப் பெற்றுவந்தன. பெரியார் ஈ.வே. ராவின் வழித்தோன்றலான அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற்று வந்தது. படித்த இளைஞர்கள் பலர் அந்தக் கட்சியில் இணைந்து கொண்டதும் மேம்பட்ட பரப்புரை உத்திகளும் இதற்குப் பெரிதும் உதவின. அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியஸ்தர்களாக அதன் தலைவரான சி.என். அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், கா.அன்பழகன், வி.மதியழகன், திருமதி சத்தியவாணி முத்து உட்படப் பலர் விளங்கினர். மாணவர்கள், படித்தவர்கள் மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளுக்குப் பெருமதிப்புக் கிடைத்தது. பகுத்தறிவுக் கொள்கைகளும், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பரப்புரையும் அந்தக் கட்சியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றன.

இந்த நிலையில் 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் இடம்பெற்றது. தி.மு.க. வினர் மக்களின் பிரச்சினைகளையும், முன்னைய காங்கிரஸ் ஆட்சியின் குறைபாடுகளையும் வீடு வீடாகச் சென்று மக்கள் முன்வைத்தனர். அந்தக் கட்சியின் தொண்டர்கள் ஊண், உறக்கத்தை மறந்து தமது கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்டனர்.

**தேர்தலில் படுதோல்வி**

இறுதியில் தேர்தல் முடிவுகள் தி.மு.க.வுக்குச் சார்பாக அமைந்தன. காங்கிரஸ் கட்சி படுதோல்வியைத் தழுவியது. அசைக்கமுடியாதவர் எனக் கருதப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் தமது சொந்தத் தொகுதியில் முகம் தெரியாத இளைஞரொருவரிடம் தோல்வியைத் தழுவினார். காமராஜரின் தோல்வி அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திரா காந்தியைப் பெரும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது.

இந்தத் தேர்தலின் பின்னர் காங்கிரஸ் கட்சியால் தமிழ்நாட்டில் தலைதூக்க முடியவில்லை. அடுத்து இடம் பெற்ற தேர்தல்களில் தனித்துப் போட்டியிடக் கூடிய துணிவும் அந்தக் கட்சியிடம் இருந்திருக்கவில்லை.

இந்த நிலையில் தி.மு.கவும் இரண்டாக உடைந்தது. நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் அ.தி.மு.க. என்ற கட்சியைப் புதிதாக உருவாக்கினார். ஆனாலும் காங்கிரஸ் கட்சி மீண்டெழவில்லை. மாறாகத் தேர்தல்கள் வரும்போது திராவிடக் கட்சிகளுடன் கூட்டுவைப்பதையே தனது கொள்கையாகக் கொண்டது. இதனால் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளைத் தஞ்சமடைந்திருக்கவேண்டிய பரிதாபகரமான நிலையொன்றும் அந்தக் கட்சிக்கு ஏற்பட்டது.

**ஜி.கே.மூப்பனாரின் செல்வாக்கு**

இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியில் செல்வாக்குச் செலுத்திய ஜி.கே.கருப்பையா மூப்பனார் தமிழ் நாட்டிலும் ஓரளவு செல்வாக்குப் படைத்தவராக விளங்கினார். இவர் ஜி.கே.வாசனின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது. மூப்பனார் கூட காங்கிரஸ் தலைமையின் மீது கொண்ட வெறுப்புக் காரணமாகத் தனிக்கட்சியை ஆரம்பித்தார். காலப்போக்கில் காங்கிரஸுடன் அந்தக் கட்சி இணைந்து கொண்டது.

> **நேரு குடும்பம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இனிமேலும் அந்தக் கட்சியால் அரசியல் செய்யமுடியாது என்பதை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.**

தற்போது ஜி.கே.வாசனும் தந்தை வழியில் புதுக்கட்சி அமைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார். இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட வீழ்ச்சியே பிரதான காரணமாகும். நேரு குடும்பம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இனிமேலும் அந்தக் கட்சியால் அரசியல் செய்யமுடியாது என்பதை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் சோனியாவும் அவரது வாரிசுகளும் கட்சித் தலைமையிலிருந்து ஒதுங்கும் எண்ணமில்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். இதைவிட ஊழல் குற்றங்கள் அவர்கள் மீது சுமத்தப்படும் சாத்தியங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. நேரு குடும்பத்துக்கு வெளியிலிருந்து வரும் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்கும் போதுதான் அந்தக் கட்சிக்கு மீட்சி கிடைக்கும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களாக நியமிக்கப்படுபவர்கள் சோனியா காந்தியின் தயவுக்காகக் காத்து நிற்பதைக் காணமுடிகின்றது. இதனால் சுயசிந்தனை செய்யும் திறன் இவர்களிடம் இருப்பதில்லை.

**பொறுப்பற்ற வகையில் இளங்கோவன்**

தற்போது புதிய தலைவராக நியமிக்கப்பட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பொறுப்பற்ற வகையில் பேசுவதில் வல்லவர். தற்போதுகூட ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை உடனடியாகத் தூக்கிலிடுமாறு அவர் தெரிவித்தமை அவரது பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அனைவரும் விடுவிக்கப்படவேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கும் நிலையில் இளங்கோவனின் இதற்கு எதிர்மறையான கூற்று சீற்றத்தை ஏற்படுத்தவே செய்யும்.

காங்கிரஸ் கட்சி என்றாலே தமிழுணர்வு இல்லாதவர்களைக் கொண்டதும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டதுமான கட்சி என்றதொரு எண்ணம் உருவாகியுள்ளது. மேலும் ஈழத்தமிழர் மீதான அனுதாபமும் பரிவும் தமிழ்நாட்டில் அதிகரித்துச் செல்கின்றது. ஆகவே ஜி.கே.வாசன் இந்தக் கருத்துக்களைத் துடைக்கும் வகையில் தமது புதிய கட்சியின் கொள்கைகளை வகுத்துக் கொள்ளவேண்டும். தமிழ் உணர்வாளர்களின் உள்ளங்களை வெல்வதே அவரது முக்கியமான கடமையாக அமைய வேண்டும்.

**தமிழ் நாட்டில் தளம்பல் நிலை**

தற்போது தமிழ் நாட்டின் அரசியல் நிலையில் தளம்பல்நிலை காணப்படுகின்றது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதே இதற்கான பிரதான காரணமாகும். அத்துடன் தி.மு.கவைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலரும் சிறைக்குச் செல்லும் நாளுக்காகக் காத்திருக்கின்றனர். இதனால் இந்த இரு கட்சிகளுமே சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளன. இந்த நிலையில் ஜி.கே.வாசன் சமயோசிதமாகக் காய்களை நகர்த்தி தமது கட்சியின் எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

வாசனிடம் காணப்படும் துணிவும், தந்திரமும் குடும்பப் பின்னணியும் பெரும் வரப்பிரசாதங்களாகும். இவற்றைப் பயன்படுத்திக் கொள்வதிலேயே அவரது வெற்றி தங்கியுள்ளது. இதிலிருந்து அவர் தவறுவாராகில் காங்கிரஸ் கட்சியைப் போன்றே அவரது கட்சியும் தமிழ்நாட்டில் முகவரியை இழந்துவிடும் என்பதில் ஐயமில்லை.





# சனசமூக நிலையங்கள் புத்துயிர் பெற வேண்டும்

வந்தியத்தேவர்

கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களின் நலன்களிலும் அந்தப் பகுதியின் அபிவிருத்தியிலும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு இணையான பங்களிப்பை சனசமூக நிலையங்களும் வழங்க முன்வருதல் வேண்டும்.

பெரும்பாலான சனசமூக நிலையங்கள், இரண்டொரு பத்திரிகைகளைப் போட்டு விட்டால் தமது பணி நிறைவடைவதாகக் கருதி விடுவதுமுண்டு. பயன்படுத்தக் கூடிய கட்டட வசதிகள் உள்ள சில நிலையங்கள் கூட தமது முழுமையான செயற்பாடுகள் பற்றிச் சிந்திப்பதில்லை. கிராமப் புறங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது வீதமான சனசமூக நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் வழங்கும் நிதியில் சில பத்திரிகைகளை வாங்கிப் போடுவதுடன் சிறந்த நிர்வாகத்தை நடத்துவதாகக் கருதிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சனசமூக நிலையங்களின் பணி பத்திரிகைகளைப் போடுவதுடன் முடிந்து விடவில்லை. மக்களுக்கு, குறிப்பாக மாணவர்கள், சிறுவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவக் கூடியதான சிறந்த நூல்களை உள்வாங்கி அவர்களுக்கு உதவ வேண்டும். சில சனசமூக நிலையங்கள் இந்த மாதிரியான செயற்பாடுகளையும் செய்யாமலில்லை. முன்னைய காலங்களில் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களின் முயற்சியால் சிறிய நூலகங்களில் வானொலி கேட்பதற்கான வசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்பட்டன. அரசு கூட வானொலிகளை வழங்கியிருந் தது. முதியோருக்கான கல்வி வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

இந்தச் செயற்பாடுகளுடன் சிரமதானப் பணிகளிலும் உறுப்பினர்கள் ஆர்வம் காட்டினார்கள். அன்று கிராம சபைகளால் முன்னெடுக்கப்படும் சில வேலைத் திட்டங்களைப்



போன்று சனசமூக நிலையங்களும் கிராமத்தின் முக்கியமான தேவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டின. தத்தமது பகுதியில் கிணறுகள் மற்றும் கேணிகளைத் துப்புரவு செய்தல், வீதியோரங்களில் காணப்படும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளை உறுப்பினர்கள் தமது சொந்த நிதியைப் பயன்படுத்திச் செய்து வந்துள்ளனர். விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதிலும் நாட்டம் கொண்டிருந்தனர். வருடப்பிறப்பு, பொங்கல், தீபாவளி, கிறிஸ்மஸ், பண்டிகைக் காலங்களில் விசேட போட்டிகளை நடத்தியும் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தும் கிராமத்துக்கு சிறப்புச் செய்தனர். சகல சனசமூக நிலையங்களும் இவ்வாறில்லாவிடினும் அநேக நிலையங்கள் இந்தச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து மக்களுக்கு உற்சாகமூட்டின. இவ்வாறான நிலையங்களின் சிரமதான நடவடிக்கைகளில் அன்றைய மக்களும் தமது பங்களிப்பை வழங்கினர்.

இன்று கிராமப்புறங்களில் இவ்வாறான நிகழ்வுகளைக் காண்பது அரிதாகவுள்ளது. அநேகமான மக்கள் தமது கிராமங்களை விட்டு வெளியேறிய நிலையில் போர் காரணமாக சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்த சனசமூக நிலையங்களின் கட்டடங்கள் சிதைவடைந்து காணப்படுகின்றன. இப்போது மீள்குடியமர்வின் பின்னர் கணிசமான மக்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பியிருந்த போதும் சனசமூக நிலையங்கள் பெரிய அளவில் இயக்கப்படவில்லை. சிதைந்து புனரமைக்கப்பட்ட நிலையங்கள்கூட இயக்கமின்றி கால்நடைகளின் வாசஸ்தலமாக மாறிக் கொண்டிருக்கின்றன. கட்டடங்களைப் புனரமைத்துத் தாருங்கள் எனக் கோருபவர்கள் கூட புனரமைப்பின் பின் அதனை உரிய முறையில் பராமரிப்பதையும் பயன்படுத்துவதையும் காணமுடியவில்லை. பிரதேச சபைகளில் இதற்கென தனியான உத்தியோகத்தர்கள் இருந்த போதிலும் அவர்கள் கூட கண்டும் காணாதவர்களுமாகவே உள்ளனர். கிராமப்புறங்களின் நலனில் தமது வகிபாகத்தை ஏற்காத நிலையிலேயே அதிக சனசமூக நிலையங்கள் இன்னமும் உள்ளன.

போரின் பின்னர் இப்போது மெல்ல மெல்ல இடம்பெற்று வரும் கிராமங்களின் அபிவிருத்திக்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அவசியம் என்பதை உணர்ந்து அந்தப் பகுதியின் இளந்தலைமுறை அதன் சீரமைப்புக்கான முயற்சிகளை முதலில் முன்னெடுக்க வேண்டும். கிராமத்துச் சிறுவர்களின் கல்விக்கான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். அநேக கிணறுகள், கேணிகள் என்பன மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளாகி மக்களும் கால்நடைகளும் நீருக்காக அலையும் நிலைக்கு முற்றுப் புள்ளியிடுதல் வேண்டும். செயலிழந்து கிடக்கும் சனசமூக நிலையங்களை மீளப் புனரமைத்து அவற்றின் செயற்பாடுகளைப் பல்வேறு நிலையிலும் விஸ்தரித்துக் கிராமத்தின் அபிவிருத்திக்கு உதவுவதில் அந்தந்தப் பகுதி மக்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன் பிரதேச சபைகளும் அவற்றின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக விளங்கவேண்டும்.

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*நேற்றைய தொடர்ச்சி...*



ஒரேநாளில் இருமுறைகள் துணியைத் துவைக்க வேண்டியதால் ஈரமான உடையுடன் தான் எப்பொழுதும் பயிற்சிக்கான பயணம். சச்சின், பயிற்சியாளரின் செல்ல வீரன் ஆனதும் காசு என்பதை வாங்கிக் கொள்ளாமல் குளிர்பானம் வாங்கித்தந்து ஊக்குவிக்கும் மற்றொரு தந்தையாக அவர் மாறியிருந்தார்.

**நாளிதழை ஏமாற்ற ஒத்துக்கொண்ட சச்சின்:**

முதல்முறையாகக் கிளப் ஒன்றுக்கு விளையாடிய ஆட்டத்தில் சச்சின் டக் அவுட், அடுத்த போட்டியும் அவ்வாறே முடிந்தது. மூன்றாவது போட்டி யில் 24 ஓட்டங்கள் எடுத்தாலும் 30 ஓட்டங்களுக்கு மேல் இவர் கணக்கில் வந்தால் சச்சினின் பெயர் செய்தித் தாளில் வரும் என்று கூறிய வர்ணனையாளர், இவரின் அனுமதியோடு வர்ணனை அட்டையை மாற்றி எழுதினார். அதற்குக் கடுமையாக பயிற்சியாளர் அச்ரேக்கர் கடிந்து கொள்ள அன்று முதல் இறுதிவரை நேர்மையற்ற முறையில் கிரிக்கெட் ஆடக்கூடாது என்பதை உறுதியாகக் கடைப்பிடித்தேன் என்று பதிலளிக்கிறார் சச்சின்.

15 வயதுக்குட்பட்ட அணியில் இடம் கிடைக்காமல் போய், பஸ்சுக்குக் காசில்லாமல் வீட்டுக்கு நடந்தே போன ஆரம்பகால வாழ்க்கைதான் அவருக்குக் கிடைத்திருக்கிறது.

60 நாள்களில் 55 போட்டிகளை விடாமல் விளையாடுகிற அளவுக்குப் பேய் போல பயிற்சி செய் திருக்கிறார். அப்படியே உணவு மேசையி லேயே உறங்கி எழுந்து விளையாடப்போன காலங்கள்தான் அவரைச் செதுக்கியிருக்கிறது. அறுபது முதல் எழுபது பேர் சுற்றி நிற்க, வீச ப்படும் பந்தை எதிர்கொண்டு இலக்கு இல்லாமல் இருந்தால் ஸ்டம்ப்பில் இருக்கும் ஒரு ரூபாய் உனக்கே என்கிற போட்டியில் அடிக்கடி வெல்வது அவரின் பழக்கமாக இருந்திருக்கிறது.

**விரும்பி இலக்கான கதை:**

கைல்ஸ் மற்றும் ஹாரிஸ் ஷீல்ட் ஆகிய இரண்டு கிண்ணங்களுக்கும் விளையாடிக் கொண்டு இருந்த காலத்தில் 125 ஓட்டங்கள் அடித்து ஒரே ஒரு போட்டியில் மட்டும் அவர் இலக்கை இழந்து இருக்கிறார். அந்த ஆட்டத்தில் அவர் இலக்கை இழந்தது கவித்துவமான காட்சி. கேட்கும் இயந்திரம் அணிந்து கொண்டு ஒரு சுழல் பந்து வீச்சாளர் பந்தை வீசியிருக்கிறார். அது சச்சினை ஏமாற்றிக் கோட்டுக்கு வெளியே கொண்டு வந்திருக்கிறது. இலக்குக் காப் பாளர் பந்தை ஒரு கணத்தில் தவறவிட தப்பியிருக்க வேண்டிய சூழலில், மீண்டும் கோட்டுக்குள் நுழையாமல்சச்சின் வெளியே நிற்க இழப்பை இலக்காப்பாளர் செய்து முடித்தார். அது கருணையினால் அல்ல. அவர் வீசியது நல்ல பந்து. அதற்கான மரியாதை அது, அவ்வளவே என்கிறார்.

சுனில் கவாஸ்கரின் துடுப்பு மட்டைதான் சச்சினுக்குச் சொந்தமாகக் கிடைத்த முதல் துடுப்பு மட்டையாகும். அதைக் கவாஸ்கரின் உறவினர் ஹேமந்த் கேன்க்ரே சச்சினின் ஆட்டத்தைப் பார்த்து அச்ரேக்கரின் பரிந்துரையின் பெயரில் பரிசளித்து இருக்கிறார். கட்டாக்கில் மும்பை அணிக்காக ஆடுகிற போது மைதானத்தில் பாதணிகளை இன்னொருவர் மீது வீசி விளையாடும் விஷமமான ஆட்டத்தைத் தொடங்கி வைத்தது டெண்டுல்கர் தான். பாகிஸ்தான் அணி இந்தியாவில் உலகக்கோப்பை ஆட வந்த போது இம்ரான்கான் அணியில் மாற்று வீரராகக் களத்தில் இறங்கி கபில்தேவ் அடித்த பந்தைப் பிடிப்பதற்கு சச்சின் முயன்றிருக்கிறார்.

இரானி கோப்பையில் பதினைந்து வயதில் மும்பை அணிக்காக டெல்லியை எதிர்த்து விளையாடிய சச்சின் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். அணியின் மற்ற இலக்குகள் விழுந்து கொண்டிருந்தன. ஒன்பதாவது இலக்குச் சரிந்ததுடன் ஆட்டம் முடிந்திருக்க வேண்டும். காரணம் குருவீரன் சிங் என்கிற வீரருக்குக் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. கையில் கட்டோடு சச்சின் என்கிற சிறுவனுக்காக அவர் ஒரே கையில் ஆடி சச்சினை அண்ணன், அப்பு முன்னால் சதமடிக்க வைத்தார்.

(தொடரும்)

இது மரநடுகை மாதம்

# சமூகக் காடுகள்



செ.செல்வராஜா

முரண்பாடுகள் நிறைந்த ஆசியக்கண்டத்தில் காடுகளும் முரண்பாடுகளுக்குள் உட்படாமல் தப்பிவிடவில்லை. காடழிப்புக்கள் முன்னரை விடக் குறைவடைந்துள்ள போதும், முற்றாக நிறுத்தப்படவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை. இன்னமும் அது தொடர்பாக செய்யப்பட வேண்டியவை நிறையவே உள்ளன என்பது மரங்கள், பசுமை தொடர்பான ஆர்வலர்களின் கருத்தாகும். இதற்கான ஒரே வழி சமூகங்களுக்கு சூழல் தொடர்பான கல்வி ஊட்டுவதேயாகும்.

இரண்டு நூற்றாண்டுகளாக அதிவேகமாகக் காடுகள் அழிக்கப்பட்ட நீண்ட வரலாற்றை ஆசிய நாடுகள் கொண்டுள்ளன. 19 ஆம் நூற்றாண்டில் இந்தியா போன்ற நாடுகள் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்தபோது காடழிப்புக்கள் நிறையவே நிகழ்ந்துள்ளன என்பதற்கு ஆவணங்கள் உள்ளன. ஆங்கிலேய முடியாட்சியின் தேவைகளுக்கென நிறையவே தேக்க மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டன.

1960, 1970, 1980ஆம் ஆண்டுகளில், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளிலும் மர வளங்கள் குறைவடைந்தன. தற்போது பப்புவா நியூகினி, சொலமன் தீவுகளிலும் இதே போன்று காடழிப்புகள் மிக அண்மைக் காலம் வரையில் கூட இடம்பெற்றுள்ளன.

இதனை முற்று முழுதாகத் தடுக்க முடியாமற் போனாலும், கடந்த சில தசாப்தங்களாக சூழலுக்கு ஏற்படும் தீங்குபற்றிய விழிப்புணர்வு ஓரளவு உள்ளூர் மக்களிடம் ஏற்பட்டமையால், காடழிப்பு வேகம் தணிக்கப்பட்டுள்ளது. 1970 ஆம் ஆண்டு வரை அறியப்படாத ஒரு சொல்லாகிய சமூகக் காடு வளர்ப்பு என்கின்ற ஒரு எண்ணக்கரு, சமூகம் சார் காடு முகாமைத்துவமாக, நேபாளத்திலிருந்து உதயமாகிப் பரிணமித்து வருகின்றது. ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இது போன்ற செயற்பாடுகளை விரிவடையச் செய்வதன் மூலம், எம் எதிர்காலச் சந்ததிக்கு நாம் ஒரு பசுமையான உலகைக் கையளிக்கலாம்.



## தென்கொரிய கப்பல் விபத்து கப்டனுக்கு 36 வருடச் சிறை



சியோல், நவ.13

தென் கொரியாவில் நடந்த கப்பல் விபத்தின்போது பயணிகளுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்காத கப்பல் கப்டனுக்கு 36 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி தென்கொரியாவின் தென்மேற்குப் பகுதியில் கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 300 பேர் உயிரிழந்தனர். அவர்களில் சுமார் 250 பேர் சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்கள். மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்திய இந்த விபத்தின் போது, கப்பலில் இருந்த பயணிகளுக்கு சரியான பாதுகாப்பு அளிக்காமல் கப்பல் கப்டன் பத்திரமாகத் தப்பியிருக்கிறார்.

லீ ஜுன் சியோக் எனும் அந்த கப்டன் பலமுறை இந்தச் சம்பவத்துக்காக மன்னிப்பு கேட்டுள்ளார். இதுகுறித்து அவர், 'இந்த விபத்து எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. என்னால் எந்த முடிவையும் எடுக்கமுடியவில்லை. கப்பலில் இருப்பவர்கள் சாகட்டும் என்ற எண்ணத்துடன் நான் தப்பிக்கவில்லை' என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் ஐந்து மாத விசாரணைக்குபின் இந்த வழக்கில் தீர்ப்பு அளித்த மூவர் குழு, கப்பல் கப்டனுக்கு 36 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் கப்டனுக்கு எதிராக வாதிட்ட சட்டத்தரணி கள், விபத்தின்போது கப்பலின் கப்டன் லீ, பயணிகளைக் காப்பாற்ற கப்பலில் இருந்த பாதுகாப்பு படகுகள், உயிர் காக்கும் ஆடைகள், தப்பிக்க வழிமுறை தெரிவிக்கும் சாதனங்களை பயன்படுத்தாமல், முதலில் தப்பிக்க முயன்றதால் அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

# நைஜீரியா அதிருப்தி

## போக்கோ ஹராமை அழிக்க அமெ. ஆயுதம் வழங்க மறுப்பு



நைஜீரியாவில் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வரும் போக்கோ ஹராம் போராளிகளின் அச்சுறுத்தலை ஒடுக்குவதற்கு அமெரிக்க அரசு ஆயுத உதவி அளிக்க முன்வராதது தமக்கு ஏமாற்றமாக உள்ளது என்று நைஜீரியாவின் அமெரிக்காவுக்கான தூதர் வொஷிங்டன் நிர்வாகத்தை விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து நைஜீரியாவின் அமெரிக்க தூதர் அடேஃபுயே கூறுகையில்;

நைஜீரிய அரசு போக்கோ ஹராமுக்கு இறுதி அடி கொடுப்பதற்காகவே ஆயுத உதவி எதிர்பார்ப்பதாகவும் வெறுமனே முகத்தில் அறைவதற்கல்ல என்றும் காட்டமாகக் கூறியுள்ளார். திங்கட்கிழமை நைஜீரியாவின் யோபே மாநிலத்திலுள்ள பொடிஸ்கும் நகரப் பள்ளியில் போக்கோ ஹராமின் மனிதவெடி குண்டுத் தாக்குதல் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டதுடன் சமீபத்தில் வடகிழக்கே உள்ள மஹியா நகரையும் போராளிகள் கைப்பற்றியதை அடுத்தே இவரது கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை - நைஜீரியாவில் பெப்ரவரியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக தற்போது ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சியான பிடிபி இன் சார்பாக ஜனாதிபதி குட்லுக் ஜொனாதன் போட்டியிடப் போவதாக அறிவித் துள்ளார். மேற்கு ஆபிரிக்காவின் எண்ணெய் வளம் மிக்க நாடான நைஜீரியாவில் உள்ள முக்கிய எண்ணெய்க் கிணறுகள் போராளிகள் வசம் சிக்கி விடக் கூடாது என்பதில் மிகக் கவனமாகச் செயற்பட்டுவரும் அந்த நாட்டு இராணுவம் தான் கைது செய்பவர்களை சித்திரவதை செய்வதாகவும், கொலை செய்வதாகவும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் இருப்பதால் அமெரிக்கா அந்த நாட்டுக்கு உத்தியோகபூர்வமாக ஆயுத உதவி வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது. (வ)



மியன்மாருக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி அந்தநாட்டு ஜனாதிபதி தெயின் செயினை சந்தித்துப் பேசினார். இதன்போது கலாசாரம், வர்த்தகம், போக்குவரத்து உள்ளிட்டவற்றில் இருதரப்பு உறவை நீட்டிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதுகுறித்து டுவிட்டர் வலைத்தளத்தில் தெரிவித்துள்ள மோடி, இருதரப்பு உறவு தொடர்பாக பல்வேறு விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். (வ)

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, நவ.13

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 4.7 ஆக பதிவாகியிருந்ததாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் டோக்கியோ நகரில் கட்டடங்கள் குலுங்கின. இருப்பினும் உயிரிழப்பு, சேத மதிப்பு குறித்து உடனடி தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. (வ)



## சாகச விமானத்தை இயக்கிய முதலாவது சீன வீராங்கனை



ஷுகாய், நவ.13

சீனாவின் ஜே-10 என்ற ஜெட் சாகச விமானத்தை இயக்கி சாதனை படைத்துள்ளார் அந்தநாட்டு பெண் இராணுவ வீராங்கனை. இதன்மூலம் சாகச ஜெட் விமானத்தை இயக்கிய முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்றார்.

சீனாவின் இராணுவம் வலுவடைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டு குழுக்கள் ... கள் பிரிந்து இந்த விமானத்தை இயக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் அணியும் பச்சை நிற இராணுவ உடை மற்றும் கண்ணாடி போன்றவற்றை அவர்களும் அணிந்திருந்தனர். ஒவ்வொரு குழுவிலும் 5 பேர் இடம்பெற்றுள்ளனர். அந்தக் குழுக்களில் இடம் பெற்றுள்ளவர்களின் பெயர் தெரியவில்லை என்றும் -அவர்களின் குழு பெயர் மட்டும் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் அனைவரும் 750 மணி நேரம் விமானத்தை இயக்கி சாதனை புரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## பிரசவத்தின்போது 45 நிமிடங்கள் நாடித் துடிப்பின்றி வாழ்ந்த பெண்

நியூயோர்க், நவ.13

அமெரிக்காவில் பிரசவத்தின் போது இறந்து விட்டதாகக் கருதப்பட்ட பெண் ஒருவருக்கு, 45 நிமிடங்களுக்குப் பின்னர் மீண்டும் நாடித் துடிப்பு உண்டானதாக மருத்துவர்கள் ஆச்சரியத்துடன் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் புளோரிடா ல் உள்ள போகா ரேடன் பகுதியைச் சேர்ந்த நிறைமாத கர்ப்பிணிப் பெண் ரூபி கிராயுஸ்ரா கேசிமிரோ (வயது-40). பிரசவத்துக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ரூபி. அங்கு அவருக்கு சிசேரியன் மூலமாக பிரசவம் பார்க்கப்பட்டது. அப்போது எதிர்பாராத விதமாக பனிக்குடம் உடைந்து அதிலிருந்த நீர் ரூபியின் இரத்தத்தில் கலந்தது. இதனால் அவரது உடல் நிலை மிகவும் மோசமானது. படிப்படியாக ரூபியின் நாடித் துடிப்பு குறையத் தொடங்கியது. பின்னர் சுத்தமாக நாடித் துடிப்பு இல்லாமல் போனது. இதனால், ரூபி இறந்து விட்டதாக அவரது குடும்பத்தாரிடம் மருத்துவர்கள் அறிவித்து விட்டனர். இதற்கிடையே, ரூபியின் வயிற்றிலிருந்த பெண் குழந்தையை பத்திரமாக மருத்துவர்கள் வெளியில் எடுத்தனர். சுமார் 45நிமிடங்களுக்குப் பிறகு திடீரென ரூபியின் உடலில் அசைவு தெரிந்ததைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக அவருக்கு சிகிச்சை அளித்து ரூபியை மீண்டும் அவர்கள் உயிர்பிழைக்க வைத்தனர். இந்தச் சம்பவம் மருத்துவ உலகில் நடந்த மிகப்பெரிய அதிசயம் என்று மருத்துவர்கள் வர்ணிக்கின்றனர். (வ)



# சோவியத்யூனியன் மீது அணுகுண்டு தாக்குதல் நடத்துமாறு வலியுறுத்தினார் வின்ஸ்டன் சர்ச்சில்

## எவ்.பி. ஆவணங்கள் மூலம் தெரியவந்தது



சோவியத்யூனியன் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்துமாறு 1947 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமனை பிரிட்டனின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் வலியுறுத்தினார் என்று அமெரிக்காவின் எவ்.பி. புலனாய்வு நிறுவனத்தின் பழைய ஆவணங்கள் மூலம் அம்பலமாகியுள்ளது.

இரண்டாம் உலகப்போரின் போது 1945 ஆம் ஆண்டு ஜப்பானின் ஹீரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா அணுகுண்டு தாக்குதல் நடத்தியது. அதனால் பெரிய அழிவுகள் ஏற்பட்ட நிலையில் ஜப்பான் சரணடைந்தது. அதன்பின் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்து, இரண்டு வருடங்களில் சோவியத்யூனியன் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்த வேண்டும் என்று அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமனை அப்போதைய பிரிட்டன் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் வலியுறுத்தினாராம்.

இரண்டாம் உலகப்போர் காலத்தில், ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன ஓரணியாகவும் - பிரிட்டன், பிரான்ஸ், சோவியத்யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகள் மற்றொரு அணியாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து ஆரம்பித்த சோவியத்யூனியனுக்கும் மேற்குல நாடுகளுக்கும் இடையிலான பனிப்போரில் வெல்வதற்காக சோவியத் யூனியன் மீது அணுகுண்டு தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று வின்ஸ்டன் சர்ச்சில் வலியுறுத்தியதாக இதுவரை வெளியிடப்படாமல் இருந்த எவ்.பி.. ஆவணங்களில் தெரியவந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் சோவியத்யூனியன் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜோசப் ஸ்டாலின், 1953 ஆம் ஆண்டு இறக்கும்வரை அந்தப் பதவியில் நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

1940 முதல் பிரிட்டன் பிரதமராக பதவி வகித்த வின்ஸ்டன் சர்ச்சில் 2 ஆம் உலகப் போரின் பின் 1945 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தோல்வியுற்றார். 1951 ஆம் ஆண்டில் மீண்டும் அவர் பிரதமரானார். (வ)



எமது முயற்சியானது ஒன்றிணைந்த இலங்கையினுள் எம்மை சூழவுள்ள நிலத்தோற்றத்தை, எமது அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தலாகும்.

MÄGA
the saga of quality construction

30TH
ANNIVERSARY

# மூளை எவ்வாறு சுவையை அறிகிறது? விடை கண்டனர் விஞ்ஞானிகள்



மூளை எவ்வாறு சுவையை உணர்கிறது என்பது தொடர்பில் விஞ்ஞானிகள் இடையே நீண்ட காலமாக இருந்து வந்த ஒரு விவாதத்துக்குத் தீர்வை எட்டியுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் சிலர் நம்புகின்றனர்.

ஒவ்வொரு சுவைக்கும் மூளையில் சிறப்பு நியூரோன்கள் உள்ளனவாம். உப்பு, கசப்பு, இனிப்பு, புளிப்பு மற்றும் உப்பு உறைப்பான சுவை ஆகிய ஐந்து வகையான சுவைகளுக்கும் என தனித்தனியான விசேட நியூரோன்கள் (உணர்வு உயிரணுக் கள்) மூளையில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

வெவ்வேறு சுவைகொண்ட உணவுகளை சுண்டெலிகளுக்குக் கொடுக்கும் போது அவற்றின் மூளையில் ஒவ்வொரு நியூரோனிலும் ஏற்படுகின்ற மாற்றத்தை அவதானித்துக் கொலம்பியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

உணவு நாளுக்கு நாள் சுவையில்லாமல் போவதாக உணரும் வயோதிபர்களுக்கு சுவையுணர்வு அதிகரிக்க வழிதேடுவதற்கு இந்த ஆராய்ச்சி உதவும் என்று நம்பப்படுகிறது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | 8 | | | 7 | 2 |
| | | | 4 | | | | | 8 |
| 8 | | 1 | 2 | 6 | 9 | 4 | | 5 |
| | | | 7 | 9 | 2 | | 4 | |
| | 4 | | | | | | 9 | |
| | 6 | | 8 | 4 | 1 | | | |
| 1 | | 6 | 9 | 7 | 4 | 5 | | 3 |
| 5 | | | | | 6 | | | |
| 4 | 2 | | | 5 | 8 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 1 | 4 | 6 | 8 | 2 | 7 | 5 |
| 2 | 7 | 6 | 3 | 5 | 9 | 8 | 1 | 4 |
| 8 | 4 | 5 | 7 | 1 | 2 | 9 | 6 | 3 |
| 5 | 1 | 7 | 2 | 4 | 3 | 6 | 9 | 8 |
| 3 | 2 | 8 | 1 | 9 | 6 | 4 | 5 | 7 |
| 4 | 6 | 9 | 5 | 8 | 7 | 3 | 2 | 1 |
| 1 | 8 | 2 | 6 | 3 | 5 | 7 | 4 | 9 |
| 6 | 5 | 3 | 9 | 7 | 4 | 1 | 8 | 2 |
| 7 | 9 | 4 | 8 | 2 | 1 | 5 | 3 | 6 |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பெண்மையின் மேன்மை

பெண்களைத் தாயாகவோ, மகளாகவோ, சகோதரியாகவோ நினைக்க வேண்டும், மதபோதகனாக விரும்புகின்ற ஒவ்வொருவரும் பெண்களைத் தாயாகக் கருதி, அவர்களிடம் அந்த நிலையிலேயே பழக வேண்டும். உலகில் தாயின் இடம் மிகவும் உயர்ந்தது. அந்த ஓர் இடத்தில்தான் மிகவுயர்ந்த சுயலமின்மையைக் கற்கவும் செயல்முறைப்படுத்தவும் முடியும். தாயன்பை விட மேலான அன்பு ஒன்று இருக்க முடியுமானால் அது இறையன்பு மட்டுமே. மற்ற எல்லாமே தாழ்ந்தவை தான். முதலில் பிள்ளைகளைப்பற்றி நினைப்பதும் அதன்பிறகே தன்னைப் பற்றி நினைப்பதும் ஒரு தாயின் கடமையாகிறது. அப்படியில்லாமல் எந்தப் பெற்றோராவது தங்களையே முதலில் நினைப்பார்களானால் அந்தப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அமைகின்ற உறவு பறவைகளுக்கும் அதன் குஞ்சுகளுக்கும் இடையிலுள்ள, அதாவது சிறகு முளைத்ததும் பெற்றோரை மறந்து விடுகின்ற உறவாகவே அமையும். பெண்களையெல்லாம் இறைவனுடைய தாய்மையின் பிரதிநிதிகளாக நினைக்கும் ஆண்மகன் உண்மையில் பேறு பெற்றவன். ஆண்களையெல்லாம் இறைவனின் தந்தைக் குணத்தின் பிரதிநிதிகளாகக் காணும் பெண் உண்மையில் பேறுபெற்றவள், பெற்றோர்களை பூமியில் தெய்வ வடிவங்களாகக் காணும் பிள்ளைகள் பேறு பெற்றவர்கள். நாம் உயர்வதற்குரிய ஒரே வழி நம் முன் இருக்கும் கடமைகளைச் செய்வதாகும். அப்படிச் செய்வதன் மூலம் வலிமையைப் பெருக்கிக் கொண்டே சென்று, இறுதியில் உயர்நிலையை அடைந்து விடலாம். நம்மில் ஜீவபாவனையைக் குறைத்து அதன்மூலம் உண்மையான மேலான ஆன்மாவைப் பிரகாசிக்கச் செய்வதே, வாழ்க்கையின் கீழ்நிலைகளில் மனிதனின் ஆற்றல் விரயமாவதைத் தடுத்து, அதன் மூலம் ஆன்மா தன்னைத் தானே உயர் நிலைகளில் வெளிப்படச் செய்வதே அதன் நோக்கம். தொடர்ந்து கீழான ஆசைகளை மறுப்பதாலேயே இதனை நாம் சாதிக்க முடியும். கடமைக்கு இது மிகவும் தேவையாகும். அறிந்தோ அறியாமலோ சமுதாய அமைப்புக்கள் எல்லாமே இவ்வாறு செயல். அனுபவம் என்ற இரண்டின் வழியாகவும் விரிவடைந்து வந்ததே.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். ஆயுதங்கள் கையாளும் போதும் வாகனங்களை ஓட்டும்போதும் எச்சரிக்கை அவசியம். வீண் செலவு ஏற்படும். அடுத்தவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை.



**இடபம்**: தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த பிணக்கு நிலை மறைந்து உறவு பிரகாசிக்கும். மனைவி வழியில் உள்ள உறவினர்களுடன் கருத்து பரிமாற்றங்கள் செய்யும்போது மிகுந்த எச்சரிக்கை தேவை.



**மிதுனம்**: தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும்போது கவனமாகப் பேசுவது நல்லது.



**கடகம்**: குடும்பத்தில் நிம்மதி குறையலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் வருகை இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும்.



**சிங்கம்**: மற்றவர்களுக்கு உதவப்போய் வீண் பிரச்சினை உண்டாகலாம். கவனம் தேவை. மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கிச் சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம்.



**கன்னி**: வீண் வார்த்தைகளைப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வேலை செய்யும் இடத்திலும் மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுகளைத் தவிர்ப்பது நல்லது.



**துலாம்**: குடும்பத்தில் ஏதாவது வேண்டாத பிரச்சினை தலை தூக்கலாம். உறவினர்கள், நண்பர்கள், பிள்ளைகள் என்று யாரிடமும் வீண் சண்டையைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் அனுசரித்துச் செல்வது நல்லது.



**விருச்சிகம்**: வீண் அலைச்சலும் அதனால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாமலும் போகலாம். எதிலும் கவனமாக செயற்படுவது நல்லது. அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம்.



**தனுசு**: தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அதே நேரத்தில் பல தடைகளை தாண்டி செயற்பட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயற்படும் வாய்ப்புக் கிடைக்கும்.



**மகரம்**: அடுத்தவர்களுக்காக எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்து வர். வெளியூர் பயணங்களில் அவதானமாக இருக்கவும்.



**கும்பம்**: குடும்பத்தில் இருந்த பிரச்சினை குறையும். பிள்ளைகளுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுத்து திருப்தியடைவீர்கள். அடுத்தவர்களுக்காக எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது.



**மீனம்**: வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் ஏற்படலாம். மேலதிகாரிகள் கொடுத்த வேலையைச் செய்து முடித்து அவர்களின் நன்மதிப்புக்கு ஆளாவீர்கள்.

## நாளை

**ஐப்பசி-28 வெள்ளிக்கிழமை | 14.11.2014**

திதி: ஸப்தமி மு.ப.08.42 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.01.52 வரை

சுபநேரம்:06.07-07.37 வரை
இராகுகாலம்:10.37-12.07 வரை

# நல்லூர் கோட்ட உதைபந்தில் கொக்குவில் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 13
நல்லூர்க் கோட்டமட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றுசம்பியன் ஆனது.
நேற்று புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரிஅணியைஎதிர்த்துகோண்டாவில்இராமகிருஸ்ணமகாவித்தியாலய அணி மோதியது.
இருஅணிகளும்தலாஒருகோல் அடித்தன. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியைஎதிர்த்துமுத்துத்தம்பி மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டநேர முடிவு வரை இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. சமநிலை தகர்ப்பு உதைகளில் யாழ். இந்துக் கல்லூரி அணி 6:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(உ-23)





## இன்றைய திக்கம் மோதல்

### மனோகரா - யங்கம்பன்ஸ்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 11 பேர் கொண்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாமிடத்துக்கான ஆட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(உ-108)

# அடுத்தடுத்து 4 கோல்கள் அடித்த பாடும்மீனிடம் வீழ்ந்தது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், நவ. 13
பாசையூர் சென். அன்ரனீஸ் அணிக்கெதிராக அசத்தலான 4 கோல்களை அடித்து சிறப்பான வெற்றியைப் பதிவு செய்தது குருநகர் பாடும்மீன் அணி.
மைலோ கிண்ண உதைபந்தாட்டத்தில் யாழ். லீக் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றைய ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் குருநகர் பாடும்மீன் அணியும் மோதின. ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் பாடும்மீன் வீரர் சேயோன் முதல் கோலை அடித்து கோல் கணக்கை ஆரம்பித்தார்.
ஆட்டம் முழுவதும் பாடும்மீன் அணியின் கையே ஓங்கியிருந்தது. சென். அன்ரனீஸ்அணியினால் ஈடுகொடுத்து ஆடமுடியவில்லை. இடைவேளை வரை ஒரேயொரு கோலை மட்டுமே அடித்திருந்த பாடும்மீன், இடைவேளையின் பின்னர் பம்பரமாகச் சுழன்று மூன்று கோல்களை அடுத்தடுத்து அடித்துக் கலக்கியது.
இரண்டு கோல்களை ஞானபிரகாஸ் அடித்தார். ஆட்டத்தின் 45ஆவது மற்றும் 55ஆவது நிமிடங்களில் அசத்தலாக அந்தக் கோல்கள் பெறப்பட்டன. 50ஆவது நிமிடத்தில் மயூரன் மற்றொரு கோலை அடித்தார். சென். அன்ரனீஸ் வீரர்கள் எவ்வளவு முயன்றும் கோல் அடிக்க முடியவில்லை. முடிவில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் சென். மேரிஸ் அணி அபாரமாக ஆடி 3 கோல்களை அடித்து வெற்றி பெற்றது. நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்கும் ஊரெழு றோயல் அணிக்கும் இடையில் இந்த ஆட்டம் நடந்தது.
ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் வீரன் ஜக்சன்தமது முதல் கோலை அடித்து கோல் கணக்கை ஆரம்பித்தார். 24ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைந்த பந்தை அபாரமாகக் கையாள்ட ஜெனட் சிறப்பான கோலாக ாற்றினார். இடைவேளையில் பாது சென். மேரிஸ் இரண்டு கால்களுடன் முன்னிலை றது.
இடைவேளையி பின்னர் ஆட்டம் உக்கிர ருந்தாலும் ஊரெழு றே ன் ஆட்டத்தை மேரிஸ் பாகக் கட்டுப்படுத்தியது. றாயல் கோல் அடிப்பதற்கு இடமளிக்கவில்லை. கோல் அடிக்கும் அவாவில் முறைதவறிய றோயலின் ஆட்டத்தால் சென். மேரிஸ்க்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது. பக்குவமாக அதனை ஜக்சன் கோலாக்கினார். முடிவில் சென். மேரிஸ் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(உ-23)



# தேசிய ஹொக்கிப் போட்டிக்கு யாழிலிருந்து பிரதாப் தெரிவு



எஸ்.பிரதாப் ஜி.டி.மதி யழகன்

மாங்குளம், நவ. 13
தேசிய ஹொக்கி சுற்றுப் போட்டியில் விளையாட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரதாப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இலங்கை ஹொக்கி சம்மேளனம் நடத்தும் 58ஆவது தேசிய ஹொக்கி போட்டிகள் இன்று முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக ஹொக்கி வீரர் எஸ்.பிரதாப் இலங்கைப் பல்கலைக்கழக அணி சார்பாக இந்தப் போட்டியில் விளையாடுவதற்குத் தெரிவாகியுள்ளார்.
அத்தோடு 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்திலிருந்து தேசியப் போட்டி ஒன்றுக்கு ஹொக்கி நடுவர் ஒருவரும் செல்லவுள்ளார். யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியர் ஜி.டி.மதி யழகனே தேசிய நடுவர் குழாமிற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கை ஹொக்கி சங்கத்தினால் நடத்தப்பட்ட நடுவர்களுக்கான கருத்தரங்கில் வளவாளராகவும் தெரிவு செய் யப்பட்டுள்ளார். (உ-422)

## உதைபந்தாட்ட நடுவர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ. 13
உதைபந்தாட்ட நடுவர்களின் தரத்தினை மேம்படுத்துழ் முகமாக நடுவர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடுவர் சங்கத்தின் பிரதிநிதிகள் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு நெறிப்படுத்தவுள்ளனர்.
(உ-23)

# லவனின் அரைச் சதத்துடன் கிளிநொச்சி ம.வி. வெற்றி

மன்னார் சித்தி விநாயகர் அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது.
அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் 13 வயதினருக்கான போட்டியில் கடந்த சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இரு அணிகளும் மோதின.
நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணி தனது முதல் இன்னிங்சில் 79 ஓட்டங்களைப் பெற்றது. 26 பந்துப் பரிமாற்றங்களை எதிர் கொண்டது. அனைத்து இலக்குகளையும் இழ்ந்தது. அணித்தலைவர் தானுசன் அதிகபட்சமாக 22 ஓட்டங்க ளைப் பெற்றார். சித்திவிநாய கர் அணித்தலைவர் பகீர்த்த னன் 4 இலக்குகளையும் யகிர் சன் 3 இலக்குகளையும் வீழ்த்தி னர்.
பதிலுக்கு தனது முதலாவது இனிங்ஸை ஆடிய சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி 31 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. பகீர்த்தனன் 22 ஓட்டங்களையும் யாசிம் 18 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர். லவன் 4 இலக்குகளையும் பிரவிந்தன், தானுசன் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர். லவன் இந்தத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குஎதிராகஹற்றிக்சாதனை உட்பட ஓர் இனிங்சில் 8 இலக்குகளையும் வீழ்த்தி சாதனை புரிந்திருந்தார்.
தமது இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணி ஆட்டநேர முடிவில் 29 பந்துப் பரிமாற்றங்களில் 114 ஓட்டங்களைப் பெற்றார். லவன் (53) அதிரடியாக ஆடி அரைச் சதம் பெற்றார். அணி 5 இலக்குகளை மட்டும் இழந்தது. பகீர்தனன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.
முதல் இனிங்ஸில் 2 ஓட்டங்களால் முன்னிலை பெற்றதன் மூலம் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.
(உ)

# அதிகூடிய ஓட்ட சாதனையுடன் மகாஜனக் கல்லூரிக்கு வெற்றி

## நீல் ஜோன்சன் அபாரமாக ஆடி 101 ஓட்டங்கள் குவிப்பு

வலி வடக்கு நவ 13
நீல் ஜோன்சன் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காது பெற்ற சதத்துடன் அதிக கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணி என்ற பெருமையைப் பெற்றது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
13 வயதினருக்கான கிரிக்கெட் போட்டி வடமாகாணப் பாடசாலைகள் இடையில் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான ஆட்டம் செவ்வாய்க்கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 26.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக 17 ஓட்டங்கள் உதிரிகளாகப் பெறப்பட்டன. தனிநபர் எண்ணிக்கையில் அதிகமாக தணிகைபாலன் 12 ஓட்டங்களைப் பெற்றார். றொசாந் 4 இலக்குகளை வீழ்த்தினார்.
பதிலுக்க துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 38.3 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 213 ஓட்டங்களைப்பெற்றநிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. நீல் ஜோன்சன் 19 நான்குகள் உட்பட ஆட்டமிழக்காது 101 ஓட்டங்கள் குவித்தார். நிரோசன் 37, ரிசாந் 21, வேனுகன் 17 ஓட்டங்களை பெற்றனர். உதிரிகளாகவும் 27 ஓட்டங்கள் கிடைத்தன. தணிகைபாலன் மூன்று இலக்குகளை வீழ்த்தினார்.
இரண்டாவது இனிங்ஸை ஆடிய வவுனியா மத்திய மகா வித்தியாலயம் 38 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. நிரேசன் 25, நிருசன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாகவும் 18 ஓட்டங்கள் கிடைத்தன. ரிசாந் 4 இலக்குகளை வீழ்த்தினார். மகாஜனக் கல்லூரி ஒரு இனிங்ஸ் 93 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.
(உ-86)






# இந்திய அணியின் வீரர்களை கேலி செய்த ஸ்டுவர்ட் கிளார்க்



ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர்களிடம் இந்திய வீரர்கள் சமாதானக் கொடியைக் காட்டி விடுவார்கள் என ஸ்டுவர்ட் கிளார்க் கேலி செய்துள்ளார். ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒரு செய்தியில், இந்தியா உலகக் கிண்ணத்தையே எதிர் நோக்குகிறது. அதனால் டெஸ்ட் போட்டிகளில் அதிக நாட்டம் காட்டுவதில்லை என்று இந்திய அணியைப் பற்றி சாடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கடந்த தொடரில் பிரிஸ்பனில் டெஸ்ட் போட்டியில் இந்தியா விளையாடவில்லை. 4-0 என்ற தோல்வியையும் தவிர்க்க முடியவில்லை. மேலும் மிட்செல் ஜோன்சனின் ஆக்ரோஷ பந்து வீச்சில் இங்கிலாந்து இரத்தம் சிந்தித் தோல்வி கண்டது. அதன் பிறகு அந்தத் தொடரில் இங்கிலாந்து நசுக்கப்பட்டது. இந்த முறை இந்தியாவுக்கும் அதே கதி ஏற்படலாம் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

முதல் டெஸ்ட் நடப்பது பிரிஸ்பன் மைதானத்தில். இந்த மைதானம் உலகிலேயே அதிவேக ஆடுகளம் கொண்டது. இதில் 26 ஆண்டுகளுக்கு முன்பாக விவியன் ரிச்சர்ட்ஸ் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது. அதன் பிறகு ஆஸ்திரேலியாவை அங்கு எந்த அணியும் வென்றதில்லை என்று தெரிவித்துள்ளது.

இது பற்றி ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் கிளார்க் கருத்து தெரிவிக்கையில்:

கொஞ்சம் வேகமாக பந்துகள் வந்து ஸ்விங் ஆனால் அவ்வளவுதான் இந்திய வீரர்கள் உடனே சமாதான வெள்ளைக் கொடியை ஆட்டத் தொடங்கி விடுவார்கள். இந்திய அணி உலகக் கிண்ணத்தை மட்டுமே குறி வைத்துள்ளது. அவர்களது கிரிக்கெட் நாள்காட்டியில் அதுவே மிகப்பெரிய தொடராகும்.

இந்தியா போல் இங்கும் வந்து சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டு ஆஸ்திரேலியாவை மடக்க அவர்கள் நினைத்தால், ஆஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்கள் அவர்களை அடித்து நொருக்குவது உறுதி. அஸ்வின் வருகிறார். ஆனால் அவர் இந்திய ஆடுகளங்களில் சிறப்பாக வீசுகிறார். இங்கு கடினம்.

முதலில் பிரிஸ்பனில் விளையாடுகின்றனர். அங்கு ஷேன் வோர்ன் தவிர வெற்றியை ருசித்த ஸ்பின்னர்கள் உலகில் இல்லை.

அடிலெய்ட்டில் இந்தியாவுக்கு பரவாயில்லை. ஆனால் சிட்னி சமீப காலங்களாக வேகப்பந்துக்கு சாதக ஆட்டக்களமாகவே திகழ்கிறது என்று கூறியுள்ளார். (த)

# ஷேவாக், கௌதம் கம்பீர் எதிர்காலம் என்னாகும் ?

இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களான ஷேவாக், கம்பீரின் கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக் குறியாகி விட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணியின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் மூத்த வீரர்கள் 36 வயதான ஷேவாக், 33 வயதான கௌதம் கம்பீர், 36 வயதான சகீர்கான் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்படவில்லை. உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடர் தொடங்க இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில், அதற்கு தயாராவதற்கு இந்த ஆஸ்திரேலிய தொடர் தான் அச்சாரமாகும்.

மோசமான ஆட்டங்களால் கழற்றி விடப்பட்ட இவர்களது இடத்தை இப்போது இளம் வீரர்கள் முழுமையாக ஆக்கிரமித்து விட்டனர். ஒரு காலத்தில் ஷேவாக்- கம்பீர் உலகின் சிறந்த தொடக்க ஜோடியாக வலம் வந்தது. தற்போது தொடக்க வரிசையில் ஷிகர் தவான், ரோஹித் ஷர்மா, ரஹானே, முரளி விஜய் போன்ற வீரர்கள் மாற்றி மாற்றி பயன்படுத்தப்படுகின்றனர்.

ஷேவாக் கடைசியாக 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் டெஸ்டில் விளையாடியிருந்தார். காயத்தால் அவதிப்படும் சகீர்கானின் நிலைமையும் இதேதான் - இவ்வாறு மூத்த வீரர்கள் தொடர்ச்சியாக ஓரங்கட்டப்படுவதால் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டித்தொடரில் விளையாட வாய்ப்பில்லை என்று அடித்துச் சொல்லப்படுகிறது. உலகக்கிண்ணப் போட்டி நெருங்கிவிட்டதால் இனி அணியில் பெரிய அளவில் மாற்றம் செய்ய இந்திய அணித் தலைவர் டோனி ஒரு போதும் விரும்பமாட்டார்.

அது மட்டுமன்றி இவர்களது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையே அவ்வளவு தான். இனி அணிக்குள் வரவே முடியாது என்ற கோணத்திலும் விமர்சிக்கப்படுகிறது. (த)

# வெற்றியைக் கோட்டைவிட்ட சென்னை



புனேவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து போட்டியில் சென்னையின் எப்.சி.-புனே சிற்றி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

16 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை இலானோ கோட்டைவிட்டதால் வெற்றி வாய்ப்பை மட்டுமன்றி முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பையும் இழந்தது சென்னை அணி.

அதேநேரத்தில் புனே கோல் காப்பாளர் அரிந்தாம் சென்னையின் பல கோல் வாய்ப்புக் களை முறியடித்து தனது அணியைக் காப்பாற்றினார். விறுவிறுப்பாக சென்ற இந்த ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் புனே கோல் அடித்தது. அந்த அணியின் நடுக்கள வீரர் இஸ்ரேல் கூரங் கொடுத்த அற்புதமான பாஸை மிக எளிதாகக் கோலடித்தார் மற்றொரு நடுக்கள வீரரான கோஸ்டாஸ் கட்சூரனிஸ்.

இதன்பிறகு 16 ஆவது நிமிடத்தில் சென்னை அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதை இலானோ வெளியில் அடித்தார். 8 கோல்களுடன் அதிக கோலடித்தவர்கள் வரிசையில் முன்னிலையில் இருக்கும் ப்ரீ கிக் ஸ்பெஷலிஸ்டான இலானோ தண்டனை உதை கோலாக்குவார் என எதிர்பார்த்த ரசிகர்கள், அவர் அதை கோட்டை விட்டபோது அதிர்ச்சியடைந்தனர்.

அதேநேரத்தில் சென்னை வீரர் மென்டோஸா தொடர்ந்து கோலடிக்கக் கடுமையாகப் போராடினாலும் அவருடைய அனைத்து முயற்சிகளையும் முறியடித்தார் புனே கோல் காப்பாளர் அரிந்தாம்.

பின்னர் நடைபெற்ற 2 ஆவது பாதி ஆட்டத்தின் 58 ஆவது நிமிடத்தில் கோலடித்து புனேவுக்கு பதிலடி கொடுத்தது சென்னை. பல்வந்த் சிங்கும், மென்டோஸாவும் இணைந்து புனே பின்கள வீரர்கள் 3 பேரை வீழ்த்தி பந்தை முன்னோக்கி கொண்டு வந்தனர். கோல் கம்பத்தின் அருகே சென்றபோது பல்வந்த் சிங், மென்டோஸாவிடம் கிராஸ் செய்ய, அவர் அதை கோலாக்கினார். இதன்பிறகு கோல் எதுவும் விழாததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (த)

# அதிரடியால் கலக்கும் இன்சமாம்

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சில வீரர்கள் தனி நபராக அணியை வெற்றி




பாதைக்கு அழைத்துச் செல்வார்கள்.

அந்த வகையில் குறைந்தது 35 டெஸ்ட் போட்டிகளின் வெற்றி அடிப்படையில், பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் இன்சமாம்-உல்-ஹக்கின் துடுப்பாட்ட சராசரி 78.16 ஆக உள்ளது. இவர் தனி ஆளாக நின்று பல வெற்றிகளை தேடித் தந்துள்ளார்.

இலங்கை அணியின் சங்ககார 74.58 சராசரியுடன் 2ஆவது இடத்தில் இருக்கிறார். வியூகம் வகுத்து அணிக்கு வெற்றி தேடித் தருவதில் சிறந்தவராக இருப்பதால் இந்த ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்ட டெஸ்ட் அணியில் இவர் இடம் பிடித்துள்ளார்.

யூனிஸ்கான் (73.59), கிரேக் சப்பல் (70.49), ஸ்டீவ் வோவ் (69.46), சந்தர்போல் (68.13) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். (த)

தொடர்ச்சிகள்

## 3 கேள்விகளுக்கு

வினாக்களுக்கே ஜனாதிபதி வேட்பாளர் பதில ளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவி யலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கும்போது.

"முப்படையினரும் தமிழ் மக்களின் காணிகளை கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர். அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. தொடர்கின்றது. இதனால் தமிழ் மக்கள் இன்னமும் மீளக்கு டியமர முடியாமல் இருக்கின்றனர். எங்கள் மக்கள் தங்களது காணிகளையே விடுமாறு கேட்கின்றனர். மாறாக சிங்கள மக்களின் காணிகளையோ அல்லது அரச காணிகளை யோ தருமாறு கேட்கவில்லை.

எனவே எங்கள் மக்கள் அவர்களது சொந்தக் காணிகளுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்ல வேண்டும் என்றால் முப்படையும் அங்கிருந்து வெளியேற வேண்டும். அதனைச் செய்வதற்கு எந்த ஜனாதிபதி வேட்பாளர் தயாராக இருக்கின்றார். அவர் மக்கள் முன் அதனைப் பகிரங்கமாகச் சொல்வாரா?

போர் முடிந்து 5 வருடங்களாகி விட்டது. ஆனாலும் இன்னமும் விசாரணைகள் இன்றி தமிழ் இளைஞர் - யுவதிகள் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களது விடுலை தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைப்பாடு என்ன என்பதை மக்கள் முன் அறிவிப்பார்களா?

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட பின்னரும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை தாண்டிய அதிகாரப் பகிர்வுக்கான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. 13 ஆவது திருத்தச் சட்டம் போதாது என்பதாலேயே அது முன்வைக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர், தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் என்ன தீர்வுத் திட்டம் என்பதை பகிரங்கமாக முன்வைப்பாரா?" - என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி வேட்பாளாராக போட்டியிடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவாக இருந்தாலும் சரி, பொது எதிரணியின் வேட்பாளராக இருந்தாலும் சரி, இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்கள் யாருக்கு ஆதரவளிப்பது என்பதை தீர்மானிப்பர் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

## தேர்தல்

களத்தால், ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்துக்கும் நேற்று முன்தினம் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தாலும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வாக்களிப்பு நிலை யங்களை இனங்காணும் நடவடிக்கைகள் தற் போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலத் தேர்தல்களின் போது பயன்படுத்தப்பட்ட வாக் களிப்பு நிலையங்களில் ஏதாவது மாற்றங்கள் உள்ளனவா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்த லுக்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படும் என்றும், ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## வேகமாக

வெல சரணகீர்த்தி நாயக்க தேரர் தலை மையில், நடத்தப்பட்ட பெருமெடுப்பிலான வழிபாட்டில், இரா ணுவ, கடற்படை உயர திகாரிகள் பங்கேற் றிருந்தனர்.

அதேவேளை, கிளி நொச்சி படைகளின் தலைமையக கட்டுப் பாட்டுப் பகுதியில், 65 ஆவது டிவிசனின் கீழ் உள்ள 7 ஆவது ஆட்டி லறிப் படைப் பிரிவா லும், ஒரு பௌத்த வழி பாட்டுத் தலம் அமைக் கப்பட்டுள்ளது. இரண்டு நாள்கள் நடத்தப்பட்ட வழிபாடுகளைதொடர்ந்து திறந்து வைக்கப்பட்ட வழிபாட்டுத் தலத்தில் போதி மரக்கன்றும் நாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நிலை கொண்டுள்ள 574 ஆவது பிரிகேட் படைப் பிரிவினராலும் மற் றொரு பௌத்த வழி பாட்டுத்தலம் கடந்த 2 ஆம் திகதி திறந்து வைக் கப்பட்டுள்ளது. இங்கும், அனுராதபுர சிறீ மாபோதி மரத்தின் கிளை ஒன்று நடப்பட்டுள்ளது. (ந-5)




மணிவிழா வாழ்த்து

### இராமநாதன் செந்தில்குமரன்

ஆசிரிய சேவையில் 35 வருடங்கள் அன்பில்ட். த.வி. கொட்டகல, தருமபுரம் வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரி, கோண்டாவில் இந்து ம.வி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும், கோண்டாவில் றோ.க.வித்தியாலயத்தில் எட்டு வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றி இன்று (13.11.2014) வியாழக்கிழமை (ஓய்வுபெறும்) மணிவிழாக்காணும் நாயகனை இன்று போல் என்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
செ.ஜெயசோதிவரதன் குடும்பத்தினர் (கொட்டடி நமசிவாய வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியர்)
இ.தேவராஜா குடும்பத்தினர் (அதிபர் பொன்பரமானந்தர் ம.வி. குரும்பசிட்டி)
இரா. அருட்செல்வம் குடும்பத்தினர் (A.T.C. கல்வி நிலையம்)
ஞானதிருக் சே.நீஸ்வரன் குடும்பத்தினர் (K.T.C. கல்வி நிலையம்)
(54066)(10.6)





மரண அறிவித்தல்

### ஆறுப்பிள்ளை செல்வரத்தினம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப் பிள்ளை செல்வரத்தினம் நேற்று (12.11.2014) புதன் கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை -இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியராணி யின் ஆருயிர் கணவரும், சசிதரன்(சுவிஸ்), சசிச்செல்வி(சுவிஸ்), சசி குமார் (ஆசிரியர், யா/ஊர்கரம்பொன் சிறிய புஷ்ப மகளீர் மகாவித்தியால யம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தி(சுவிஸ்), ஜெயபவான் (சுவிஸ்), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயாக்கா வைப் பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (54060)(5.6) தகவல்: குடும்பத்தினர். 0777 242 580


## அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை

கல்வி அமைச்சினால் அண் மையில் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானிப் பத்திரி கையில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் புதிய பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட் டுள்ள தரக் கட்டமைப்புக்கு ஏற்ப 2008.07.01 ஆம் திகதிக் குப் பின்னர் பதவியுயர்வுக்கு தகைமை பெற்ற தற்போது கடமையாற்றும் தரம் பெற்ற அதிபர்கள் மற்றும் ஓய்வு பெற் றுள்ள அதிபர்களை உரிய தரத்துக்குப் பதவியுயர்த்துவ தற்கான தகைமை பரிசீலிப்ப தற்கான நேர்முகத் தேர்வுகள் நாளையும், நாளை மறுதின மும் நடைபெறவுள்ளன.

இதன்பிரகாரம்தேர்வுகள்பின்வ ரும் வலயங்களைச் சேர்ந்த அதி பர்களுக்குப் பின்வரும் இடங்க ளில் நடைபெறுமென மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறி வித்துள்ளார்.

கடமையில் உள்ள அதிபர்களுக் கான நேர்முகத் தேர்வு விவ ரங்கள் வருமாறு:

01. வடமராட்சி - வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம் - குழு 1
02. தென்மராட்சி - வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம் - குழு 2
03. மடு - வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர்கூடம் - குழு 3
04. தீவகம் - யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி அலுவலகம்.
05. வவுனியா வடக்கு - யாழ். வலயக் கல்வி அலுவலக முகா மைத்துவ மண்டபம் - குழு 1
06. வவுனியா தெற்கு - யாழ். வலயக் கல்வி அலுவலக முகா மைத்துவ மண்டபம் - குழு 2
07. கிளிநொச்சி - நல்லூர்ஸ்தான சீ.சீ.த.க.பாடசாலை - குழு 1
08. முல்லைத்தீவு - நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க.பாடசாலை - குழு 2
09. துணுக்காய் - நல்லூர்ஸ்தா ன சீ.சீ.த.க.பாடசாலை - குழு 3
10. மன்னார் - யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி அலுவலகம்.

ஆகியவற்றுக்கு காலை 9.00 மணிக்கும்

11. யாழ்ப்பாணம் - வடமா காண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம் - குழு 1
12. வலிகாமம் - வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம் - குழு 2

ஆகிய இடங்களில் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும்.

ஓய்வுபெற்று பதவியுயர்வுக் குத் தகுதி பெற்றுள்ள 12 வல யங்களைச் சேர்ந்து சகல அதிபர்களுக்குமான நேர்மு கத் தேர்வு நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் மு.ப.9 மணிதொடக்கம்இடம்பெறும்என் றும் அறிவித்துள்ளார். (ந-9)

## வெற்றியை நோக்கி பாகிஸ்தான் அணி

பாகிஸ்தான் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான்அணி தொடர்ந்தும் வலுவான ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

பாகிஸ்தான் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி தற்போது அபுதாபியில் நடைபெற்று வருகின்றது. பாகிஸ்தான்அணி முதலில் துடுப்பெடுத்தாடி 3 இலக்கு இழப்பிற்கு 566 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த நியூஸிலாந்துஅணி சகல இலக்குகளையும் இழந்து 262 ஓட்டங்களை மாத்திரமே பெற்று பொலோ ஓன் ஆனது. ஆனால் புதிய வியூகம் வகுத்த பாகிஸ்தான்அணி பொலோ ஓன் கொடுக்காமல் தொடர்ந்து தாமே துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்து 304 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை ஆரம்பித்தது.

இதன்படி பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அவ் அணிக்கு வலுவான தொடக்கத்தை அமைத்துக்கொடுக்க அவ் அணி 2 இலக்கு இழப்பிற்கு 175 ஓட்டங்களை பெற்றபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

480 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட தமது 2வது இன்னிங்சை ஆரம்பித்த நியூஸிலாந்துஅணி 8 இலக்கு இழப்பிற்கு 174 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். (த-ரி)


**காணி விற்பனைக்கு**

உடுவில் தென்கிழக்கு பகுதியில் உள்ள தோட்டக் காணி 9 ½ பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 00 339 5323 8533, 071 856 1396, 021 2240 952

**சிறுநீரகம் தேவை**

O+/B+ve வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு: 077 57 38 194 (53873)(10.6)



மரண அறிவித்தல்



### திருமதி கமலாசனி சூரசங்காரன்

அல்வாயைப் பிறப்பிடமாகவும், 'அருளகம்' 46, வைமன் வீதி, நல் லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் திவ்ய ஜீவனசங்கத் தலைவியான திருமதி கமலாசனி சூரசங்காரன் நேற்று (12.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அட்வகேற் சூரசங்காரனின் அன்பு மனை வியும், மகேசன்(சட்டத்தரணி-கனடா), பத்மநாதன் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணிதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், டாக்டர் அன்பழகன் (ஆஸ்திரேலியா), அருட்செல்வன்(கனடா), அன்புச் செல்வன் (நோர்வே), வத்ஸலா(இங்கிலாந்து), அரவிந் தன் (கனடா), ஆர்அமுதன் (இங்கிலாந்து), ஆதவன்(இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல், கோம்பயன் மணல் இந்து மயா னத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(84057)(5.6.3) தகவல்: செல்லையா பத்மநாதன் (சகோதரன்)





மரண அறிவித்தல்

### தியாகராசா வெற்றிவேலு

(இளைப்பாறிய கணித ஆசிரியர்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடி காமத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா வெற்றிவேலு நேற்றுமுன்தினம் (11.11.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-பொன் னம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம்-உருக்குமணி தம்பதியரின் மூத்த மருமகனும், தயாபதியின் அருமைக் கணவரும், லோஜனி (கனடா), சுதாகரன் (கனடா), சுலாஜனி (கனடா), எழிலினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், கருணானந்தன் (கனடா), இராஜலட்சுமி (கனடா), பாலசிங்கம் (லண்டன்), சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனும், ஜஸ்மினா, பிரவினா, நிவேதனா, திவிசா, கேசிகா, மிரேஷ், ஹரிஷ், சலினா, கபினாஸ் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, சண்முகநாதன் மற்றும் பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, செல்லமமா, சோமசுந்தரம், அரியரத்தினம் மற்றும் புனிதநாயகி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P:021 568 5496 (50421)(10.6) தகவல்: குடும்பத்தினர்.





மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா வேலுப்பிள்ளை

சுன்னாகம் பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டு வாழ் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன் னம்மா வேலுப்பிள்ளை நேற்று (12.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (சிவன் கோயில் தர்மகர்த்தா) அன்பு மனைவியும், சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர், யாழ்.), சிவலோகநாயகி, நல்லகுருநாதன் (குமார் ரவல்ஸ், நெல்லியடி), யோகமலர், புஸ்பமலர் ஆகியோரின் அன்புத் தாயும், கனகாம்பிகை, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் கவிதா, விநாயகமூர்த்தி (முரு கன் மில், வரணி), காலஞ்சென்ற தர்மராசா (டீனா கொமினிகேசன், வெள்ளவத்தை) ஆகி யோரின் பாசமிகு மாமியும், சுசந்தா (விரிவுரையாளர், கண்டி), Dr. பிரதீபன் (நாவலப் பிட்டி), பத்மலோசினி (ஆசிரியை வரணி மகா வித்தியாலயம்), ஜெசிகரன் (பிரதேச செய லகம் சாவகச்சேரி), செந்தாளன் (ஆசிரியர், கிளிநொச்சி), டயதுனா, டினாளன், கிருத்திகா, பிருந்தாளன், தனுசியா (ஆஸ்திரேலியா), றணிகன் (ஆஸ்திரேலியா), யசாந்தன் (ஆஸ்தி ரேலியா), பிரகாந்தன் (விமான பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), மனோராஜ் (கனடா), பிரேம்ராஜ் (நியூசிலாந்து), கோதிலா (ஆஸ்திரேலியா), சர்மிளா (ஆஸ்திரேலியா) ஆகி யோரின் பேர்த்தியும், ஹரிசன், தனிஷ்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வரணி இயற்றாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி இயற்றாலை ஊற்றல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இயற்றாலை, வரணி. (52003)(10.6) தகவல்: குடும்பத்தினர். 077 8998 899

# மு.காவுடன் கூட்டமைப்பு சேர்ந்தால் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்குப் பாதிப்பு

## ஜனாதிபதியின் மட்டக்களப்பு இணைப்பாளர் சொல்கிறார்

மட்டக்களப்பு, நவ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்தால் கிழக்கு மாகாணத் தமிழர்கள் இன்னும் பாதிக்கப்படுவார்கள் என ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் மேற்கொண்டுவரும் உறவு தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்தால் கிழக்கு மாகாணத் தமிழர்கள் இன்னும் பாதிக்கப்படுவார்கள். ஏனெனில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஒருபோதும் நம்பமாட்டார்கள். கிழக்கு மாகாணத் தமிழர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பகடைக்காயாக பாவித்து அரசியல் தீர்வுக்கு வரமுடியாது. 1987 ஆம் ஆண்டு தமிழ் - முஸ்லிம் உறவுகளை குலைத்து முஸ்லிம்களை தனித்துவமாகக் கொண்டுசென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு தமிழர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கப் போகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன அருகதையில் பேச்சுவார்த்தை நடத்தியும் கூட்டு ஆட்சியும் பற்றிப் பேசுகின்றார்கள். எங்களால் இதை ஒருபோதும் நம்பமுடியாது. தமிழர்களின் தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும்என்ற விடயத்தை நாங்கள் மறக்கக்கூடாது.

ஆட்சி நடக்க வேண்டுமாக இருந்தால் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்றமூன்றுசமூகமும் இணைந்து ஆட்சி புரியவேண்டுமே தவிர, முஸ்லிம்களும் தமிழர்களும் ஒருபோதும் ஒன்றிணைய முடியாது.

முஸ்லிம்களும் தமிழர்களும்ஒன்றிணைவதை கிழக்கு மாகாணத் தமிழர்களால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியிலும் அரசியல் பலத்திலும் தத்தளிக்கும் நிலையில் இருக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டுச் சேருவோம் என்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களுக்காக இது வரையில் எதனைத் தெரிவித்திருக்கின்றது. எனவே, இந்த இரு கட்சிகளின் கூட்டிணைவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ்த் தேசியம் இவ்வாறான பாதையில் செல்லுமானால்கிழக்கு மாகாணத் தமிழர்கள் தமிழ்த் தேசியத்தை தூக்கிய எறியும் நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

(ஒ-10)

---

### பெயர் மாற்றம்

நாரந்தனை வட.மேற்கு, தம்பாட்டி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த யோகம்மா ஆகிய நான் எனது பெயரை மெற்ரலீன் என மாற்றிக் கொள்கின்றேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(54039) (12.3.5) து.மெற்ரலீன்.

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



*Congratulation*

சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த செல்வி

**இராசரத்தினம் வற்சலா**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டு (10.11.2014) நடைபெற்ற 30ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விஞ்ஞானமாணிப் (B.Sc.Hons in Zoology) பட்டதாரியாகப் பட்டம் பெற்றுள்ளார். இவர் ஓய்வுபெற்ற உதவி மாவட்ட விலை மதிப்பாளரும், குருநாகல் சைவ மகா சபையின் செயலாளருமான கனகசபை இராசரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ர புத்திரியுமாவார். இவர் சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவியுமாவார். இவர் மேலும் பல்வேறு பட்டங்கள் பெற்று சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ இறையருள் வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*

அண்ணா-இராசரத்தினம் தனஞ்செயன் (பொலிஸ் உத்தியோகத்தர்)

அண்ணி-தனஞ்செயன் சுகந்தினி

தமிழ் பாடசாலையடி, கந்தரோடை, சுன்னாகம். (54046)(7.6.3)

---

### மரண அறிவித்தல்



**கந்தையா பாலச்சந்திரன்**

கொக்குவில் குளப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், முதலிகோயிலடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலச்சந்திரன் 11.11.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்திரசதாசிவம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், தர்சினி (ஜேர்மனி), தனஞ்செயன் (லண்டன்), குமுதினி (கனடா), சுபாசினி ஆகி யோரின் பாசமிகு தந்தையும் சந்திரகுமார், சந்திரசேகரம், சந்திரலீலா (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் அரியதாஸ், வசந்தகுமாரி, ரஞ்சினி, மீனா, முரளிதாஸ், ராஜசூரியர் (ஜேர்மனி), மதனராஜி (லண்டன்), ரகுதரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும் விஜயலக்சுமி, சண்முகராஜா, நாகராஜா ஆகியோரின் மைத்துனரும் குருபரன், சுபாங்கன், அக்சயன், துஷாந், கஜானன், கம்சியன், சானுஜா, யனுகியா, மதுசன், ராகவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (13.11.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**முதலிகோயிலடி, கொக்குவில் மேற்கு.** (54045)(5.6.3) தகவல்: **குடும்பத்தினர்.**

---

### மரண அறிவித்தல்

**வைத்திலிங்கம் பரமசாமி**

[கருங்காலி, காரைநகர்]



பலகாடு காரைநகரைப் பிறப்பிடமாகவும், கருங்காலியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பரமசாமி நேற்று (12.11.2014) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-தெய்வயானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவராஜா-அமிர்தவல்லி தம்பதியரின் மருமகனும் திலகவதி யின் அன்புக் கணவரும், தயாநிதி (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்), உதயகுமார் (AVM CD Center, Colombo-11), கவிதா (லண்டன்), சர்மிளா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயானந்தன் (விஜயன்) பால விநோதினி, குணசீலன் (லண்டன்), ஜெகநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மருமகனும், கவிப்பிரியா,நிருபமா, அசாணி, தரணிகா, அஸ்வினா, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் பாக்கியம், பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான தியாகராசா, நமசிவாயம் மற்றும் தர்மலிங்கம், சிவசம்பு, கந்தசாமி, தம்பிராஜா, தம்பிஐயா, பரம்சோதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.11.2014) வியாழக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் மாலை 4.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(54042) (7.5.3) தகவல்: குடும்பத்தினர். 077 775 8217

---

**The 63rd Annual Festival of Carols by the Combined Choirs of Schools and Colleges of the North**

*will be held at the*

**Angel International School Auditorium**

*on*

**Sunday 16th November 2014**

*at*

**4.00 pm**

Admission by Programme - Rs.20/=

*You and your friends are cordially invited!*

(C/17637)(10.6.3)

---

### கண்ணீர் அஞ்சலி

**முத்தையா திருநாவுக்கரசு**

(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதியும் சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

அன்னாரின் மாறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(54035) (12.3.6) நாதஸ்வர வித்துவான் **கலாபூசணம்** K.R.சுந்தரமூர்த்தி குடும்பம்.

---

### 31ஆம் நாள் நினைவலைகள்

**திருமதி தங்கரத்தினம் பாலசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



தோற்றம் 27.03.1933 மறைவு 14.10.2014

காவற் கடவுளாம்
வைரவரின் மணி ஒலிக்க
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
சூழ்ந்து இருக்க
கதைத்துக் கொண்டே
காலனவன் வசப்பட்டீர்
தாயே!
நாள்கள் முப்பது
கடந்த போதும்
மறக்க முடியவில்லையே
உங்கள் நினைவை
சப்தமியில் வசந்த நாகபூசணி
பாதம் பணிந்தே
அற்புதமாக விரைந்தீர்
சொர்க்கத்திற்கு!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

ஏழாலை தெற்கு, சுன்னாகம். (54043)(12.3.6)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சிவகுமார் இராகவன்**

தோற்றம் 25.10.1976 மறைவு 13.11.2013

பாதி வழியில் எம்மை எல்லாம் பரிதவிக்கவிட்டு விட்டு
நீர் பிரிந்து இன்றுடன் ஓராண்டு ஆகுதையா!
உம் புன்னகை முகத்தை நினைக்கும் போதெல்லாம்
எம் இதயம் வேதனையால் விம்மி அழுகுதையா!
உம்முடன் உறவாடிய காலங்கள் இனிமையானவை
எம்மிடம் மீண்டும் ஓடி வந்திணைய மாட்டீரோ!
மண்ணுலகில் வாழ்ந்தது போதுமென்று நினைத்தீரோ
விண்ணுலகம் நோக்கி இளம் வயதில் விரைந்திட்டீர்!
எம்மையெல்லாம் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
எம்பெருமான் திருவடியில் அமைதியாகி விட்டீர்!

*உமது பிரிவால் துயருற்றிருக்கும்*

சோமராஜ் (கண்ணன் அண்ணா)
ஜெயந்தா அக்கா
நிலோத்தமன் (துளசி)
தேவி மாமி

**மூளாய்.** (54044)(7.6.3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.10.2014 செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
## ஆவுடையப்பன் அசோக்குமார்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்.

41/1, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9945

குடும்பத்தினர்.

(54049)(10.6.3)

## சாவகச்சேரி நகராட்சிமன்றம் நடுக்கட்டு உத்தியோகத்தர்
# பதவிக்கான விண்ணப்பம் கோரல்

இந்நகராட்சிமன்றத்தின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்நகராட்சிமன்றத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்களிலேயே அனுப்பப்பட வேண்டும். படிவங்களை 25.11.2014 திகதி பி.ப 2.00 மணி வரை இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சேவை நிபந்தனைகள்:**

௧. இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது.
௨. இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்ட வேதனமோ அல்லது படிகளோ கிடையாது.

**தகைமைகள்:**

௧. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
௨. 26.11.2014 ஆம் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லைக்குள் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாது விடின் வயதெல்லைக்கு அப்பாற்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
௩. சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் வசிப்பவராகவும் இலங்கைப் பிரசையாகவும் இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மூலம் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
௪. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
௫. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
௬. பாதுகாப்பு வைப்பாக ரூபா.3000/- செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**வேதனம்.**

1. அறவிடப்படும் ஆதனவரி வருமான நிலுவைத் தொகையின் 20% தரகுப்பணமாக வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

1. சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினைத் தெளிவாகப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். இந்நகராட்சிமன்றத்தில் வேறு நிரந்தரப் பதவி வகிப்பவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
2. உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் "என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவு திகதி 26.11.2014 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக " செயலாளர் , நகராட்சிமன்றம், சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கா.சண்முகதாசன்
செயலாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி

(சி17595)
(12.3)

## சங்கிலிக் கொள்ளையர் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ 13

வீதியால் நடந்து சென்ற பெண்ணின் 2 பவுண் நிறையுடைய சங்கிலியைக் கொள்ளையடித்த மோட்டார் சைக்கிள் நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருநெல்வேலி அரசடி வீதியில் நேற்றுப் பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குறித்த பெண் தபால் நிலையத்துக்குச் சென்று திரும்பிய போது சம்பவம் இடம் பெற்றது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளையடுத்து யாழ். பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை



கொக்குவில் கிழக்கு, கோணாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் 11.11.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாபதி-சிவகாமி, தம்பதியரின் அன்பு மகளும், சிவபாக்கியம், தவமணி, சோதிமலர், தேவராசா(ஜெனீவா), பரமானந்தம்(ஜேர்மனி), மங்கையர்க்கரசி(ஜேர்மனி), பத்மராணி (லண்டன்), தேவநாயகி (ஜேர்மனி), மனோகரி, தயாபரன் (லண்டன்), நிசாகரன் (Brown&Company PLC) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குணரத்தினம், தணிகாசலம், காலஞ்சென்ற குமாரசாமி(J.P), சாந்தினி (ஜெனீவா), கீதாராணி (ஜேர்மனி), தபேந்திரா(ஜேர்மனி), யோகராஜா (லண்டன்), மகேஸ்வரன் (ஜேர்மனி), இரத்தினசபாபதி, சிவதர்சினி (லண்டன்), அன்பரசி (ஆசிரியை, யா/செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மருத்துவரி முகரி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே.:021 222 3629

(54048)(5.6.3)

தகவல்:
க.நிசாகரன் (மகன்)

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி இராமநாதன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இல.328, கொறவப்பொத்தானை வீதி, இறம்பைக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராமநாதன் நேற்று (12.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரேசு இராமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், கனகரத்தினம், சிவமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நிர்மலானந்தன், நிர்மலாதேவி மற்றும் இந்திராதேவி, சிவானந்தன் (கனடா), சச்சிதானந்தன் (ஜேர்மனி), கிருபானந்தன் (கொழும்பு), ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், கிருஸ்ணசாமி மற்றும் சுகிர்தமலர் (கனடா), பத்மினி (ஜேர்மனி), சிவரஞ்சினி (ஆசிரியை, கொழும்பு), ரஞ்சிதமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், நிவேதிகா, கஸ்தூரி, சஞ்ஞயன், சுபாசினி, சியாமினி, கார்த்திகா, பிருந்தன், தர்மிகா, கபிலன், அஞ்சனா, சேயோன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், கரிகரன், மாதுரி, அபிராமி, கரோலின், டிவின்சன், யோர்ஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

328, ஹொறவப்பொத்தான வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.

(52194)(10.6)

தகவல்: குடும்பத்தினர்.
024 222 7600

P.P.T. EXPRESS பயணிகள் போக்குவரத்து சேவை வழங்கும்
அதிரடி விலைக்கழிவு

உடனடித் தொடர்புகளுக்கு:

Colombo -13
No.16,Sangamitha MW,
Colombo-13.
Tel: 011 4375790,
Mob : 077 575 5175

Jaffna
No.183,K.K.S.Road,Jaffna.
Tel: 021 4923240
Mob :077 573 1318

அதி.சொகுசு (Super Luxury) குளிரூட்டப்பட்டது - 1300/=
சொகுசு (Luxury) குளிரூட்டப்பட்டது - 1000/=

பருத்தித்துறை → யாழ் → கொழும்பு
கொழும்பு → யாழ் → பருத்தித்துறை



(C/17594) (5.6.3)

## தொடர்ச்சிகள்

### போர்க்குற்ற

ஆனால், தற்போது உலகின் ஏனைய நாடுகளைப்போல இல்லாமல் இலங்கை அரசை குற்றச்சாட்டுகளிலிருந்து காப்பாற்றுவதற்காக ஐக்கியநாடுகள் சபை, ஆதாரங்களை புள்ளி விபரத்தை மறைத்துள்ளதுபோலத் தோன்றுகின்றது.

ஐ.நாவின் இந்த நடவடிக்கைகள் தொடர்பாக இன்னொரு விசாரணை இடம்பெற வேண்டும் என மத்தியூ லீ தெரிவித்துள்ளார்.

### 14 உறுப்பினர்கள்

ம.தியாகராசா, இ.இந்திரராசா, வீ.கனகசுந்தரசுவாமி, கேசவன் சயந்தன், பசுபதிப்பிள்ளை, எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் ஆகியோர் தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

இதேவேளை, ஆளுங்கட்சியின் யாழ்.மாவட்ட உறுப்பினர்களான, அமைச்சர் பொ.ஐங்கரநேசன், திருமதி அனந்தி சசிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இ.ஆர்னல்ட், எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், ச.சுகிர்தன், க.சர்வேஸ்வரன், வே.சிவயோகன், எதிர்க்கட்சி உறுப்பினர்களான சி.தவராசா, இ.அங்கஜன், ஆளுங்கட்சி உறுப்பினர்களான அமைச்சர் பா.டெனீஸ்வரன், அன்ரனி பிறிமுஸ் சிராய்வா, ஞா.குணசீலன், அயூப் அஸ்மின் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் அப்துல் ரிப்கான், முல்லைத்தீவு மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்களான பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், சி.சிவமோகன், திருமதி மேரிகமலா குணசீலன் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜவாஹிர்,

வவுனியா மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்களான அமைச்சர் ப.சத்தியலிங்கம், ரி.லிங்கநாதன் எதிர்க்கட்சி உறுப்பினர்களான தர்மபால செனவிரத்தன, ஜெயதிலக ஆகியோர் இதுவரை 10 ஆயிரம் ரூபாவைக் கையளிக்கவில்லை என்று கூறப்பட்டது. (த-5)

### சுன்னாகத்தில்

உத்தரவிடும்படி கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி வி. மணிவண்ணனின் அனுசரணையுடன் சட்டத்தரணிகளான ஜெ.ஜெயரூபன், பா.பார்த்தீபன், கு.குருபரன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகிச் சமர்ப்பணங்களை முன்வைத்தனர். யாழ். குடாநாடும், வடக்கும் நன்னீருக்காக மழையிலும், நிலத்தடி நீரிலுமே முழுமையாகத் தங்கியுள்ளன. இந்தநிலையில், நில அடி நீரில் கழிவு எண்ணெய் கலப்பதானது யாழ்.குடாநாடு உட்பட வடக்கில் உயிரினங்களும், தாவரங்களும், பறவைகளும் வாழமுடியாத பெரும் ஆபத்தையே உருவாக்கியுள்ளது என்று சட்டத்தரணிகள் கூறினர்.

இதனைப் பரிசீலித்த நீதிவான் எஸ்.சதீஸ்தரன் அது தொடர்பான கட்டளையை எதிர்வரும் திங்கள்கிழமை பிறப்பிக்கவுள்ளார். (த-4)

### தாலியை

முன்னர் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. தாலியைத் திருடியவர் என்று கூறப்படும் பக்கத்து வீட்டுக்காரர் சில நாள்களுக்கு முன்னர் வவுனியாவுக்குக் கொண்டு சென்று விற்க முயன்றபோது அது திருடப்பட்ட நகை என்று அவரது நடத்தையில் சந்தேகம் கொண்டு விசாரித்தபோது தெரியவந்தது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் தற்போது விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4)

### வலி.வடக்குப்

மக்களுக்குப் பங்கிட்டு வழங்கும் பொருட்டு அவற்றை அடையாளப்படுத்தும் வேலைகளை இராணுவத்தினர் நேற்று முன்னெடுத்துள்ளனர்.

வலி.வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களில் 9 ஆயிரம் குடும்பங்கள் வரையில், உறவினர்கள் - நண்பர்கள் வீடுகள், வாடகை வீடுகள், நலன்புரி நிலையங்களில் இன்னமும் வசித்து வருகின்றன. இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக அந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு இன்னமும் திரும்ப முடியாமல் இருக்கின்றனர்.

இந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை, அக்கரைப் பிரதேசத்தில் மாதிரிக் கிராமம் அமைத்து குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்கு மக்கள் சம்மதம் தெரிவித்திருக்கவில்லை. இந்த நிலையிலேயே, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அவர்கள் தங்கியுள்ள இடங்களிலேயே குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், கண்ணகி நலன்புரி நிலையம் என்பவற்றிலுள்ள 150 குடும்பங்கள் வரையில், இந்தத் திட்டத்துக்குத் தமது சம்மதத்தை தெரிவித்துள்ளன. இந்த நடவடிக்கைகள் உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலனால் முன்னின்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நலன்புரி நிலையம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர், நலன்புரி நிலையத்தின் முழுப் பிரதேசத்தையும் சுற்றி எல்லைகளை நட்டுள்ளனர். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உடுவில் பிரதேச செயலாளரைத் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டபோது, அவர் அழைப்பைத் துண்டித்தார்.

இதேவேளை, வலி.வடக்கு மக்களைத் தொடர்ந்தும் அகதிகள் என்ற நாமத்துடன் வைத்திருக்கவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார். அந்த மக்களின் வாழ்வாதாரம் கடல்தொழில். ஆனால் தற்போது இருக்கின்ற இடத்தில் எல்லாவற்றையும் இழந்து இருக்கின்றனர்.

அவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு விடுவிப்பதன் ஊடாகவே அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதனை விடுத்து தற்போது தங்கியுள்ள இடங்களில் குடியமர்த்தி மீளவும் அவர்களுக்க அகதிகள் என்ற நாமத்தை வழங்கவும், தமது குடியேற்றப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவுமே அரச அதிகாரிகள் இதனை மேற்கொள்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த-5)

### இலங்கை அகதிகள்

இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படவேண்டும்' என்று சந்திரஹாசன் 'த ஹிந்து' ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். கடந்த 10 ஆம் திகதி சென்னையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழர்களை மேலும் சிறுபான்மையினராக்கும், இலங்கை அரசின் முயற்சியை முறியடிப்பதற்கு, தமிழ் நாட்டில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள ஒரு இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளை, பொருத்தமான புனர்வாழ்வு நடவடிக்கைகளுடன் திருப்பி அனுப்புவதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அகதிகள் மறுவாழ்வு அமைப்பின் நிறுவுநர் சந்திரஹாசனிடம், 'தஹிந்து' ஊடகம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதற்கு விரும்புகின்றனர். ஆனால் இந்தியா, தமிழக அரசு, இலங்கை ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்கள் தங்கள் மண்ணைக் காக்க விரும்புகின்றனர். அகதிகள் என்பதிலிருந்து விடுபட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

மேலும், இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்புவது தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் நான் கலந்தாலோசித்துள்ளேன்.

'தெரியாத இடத்தில் வாழ முடிந்தவர்களுக்குத் தங்களின் சொந்த மண்ணில் புதிய வாழ்வைத் தொடங்குவது பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. ஆனால் இந்திய, இலங்கை அரசுகளின் ஆதரவு தேவை-என்றார். (த-5)

### அமெரிக்க

படுத்தித் தற்பொழுது 62 பாடசாலைகள் அவற்றைப் பயன்படுத்துகின்றன. அமெரிக்க நாட்டில் மட்டுமல்லாது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடைபெறும் பாடசாலைகளும் இவற்றில் அடங்கும்.

இதுவரை 8 நிலைகள் உருவாக்கப்பட்டு 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ் பயில்கின்றனர். அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் கல்வி மேலாண்மைக்கான பொதுவான மென்பொருள்களை அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம் நிறுவி உதவி புரிகின்றது. அத்துடன் மின்கற்றலுக்கான பாடங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் வகுப்பறைப் பயிலுதலைக் கடந்து மேல்நிலை மாணவர்கள் பழகுந் தமிழுக்கான இலக்கணமும், அறிமுக நிலை மாணவர்கள் ஊடாட்டு மென்பொருள் வழியே அடிப்படை தமிழ் எழுத்துக்களையும், சொற்களையும் பயில முடியும்.

தம் பிள்ளைகள் அமெரிக்க மண்ணில் வாழ்ந்தாலும், அவர்கள் தமிழ் படிக்க வேண்டுமென விரும்பும் பெற்றோர்கள் செலுத்தும் கட்டணங்களை மட்டுமே முதலாகக் கொண்டு நடைபெறும் பள்ளிகள் தான் இவை அனைத்தும்.

தமிழ்ப் பாடசாலைகளுக்கான அங்கீகாரம் என்பது அமெரிக்க மண்ணில் நடக்கும் பாடசாலைகளுக்கு இணையான தரத்துடன் நடைபெறும் கல்வி நிறுவனம் என்பதற்கான சான்று. இதனைப் பெறுவது எளிதல்ல. அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம் பள்ளி நிர்வாகம், மின்கற்றல் போன்ற கட்டுமானப் பணிகளை அனைத்துப் பள்ளிகளும் பயன்பெறும் வண்ணம் செயல்படுத்துகின்றது.

அமெரிக்கத் தமிழ் பள்ளிகளின் அமைப்பு முறை தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் 12 ஆண்டுகள் தமிழ் கற்கும் முறையைக் காட்டிலும் இது முற்றிலும் வேறுபட்டது. அமெரிக்காவில் இரண்டாவது மொழியாகவே தமிழ் மொழியைக் கற்கிறார்கள். அமெரிக்க நாட்டுக் கல்வி முறைப்படி குறைந்த பட்சம் மேல் நிலைப் பள்ளியில் (9 முதல் 12 வரை) நான்கு ஆண்டுகள் ஆங்கிலமன்றி வேறொரு மொழியை மாணவர்கள் கட்டாயமாகப் பயில வேண்டும். இதற்காக 4 மொழி மதிப்பீட்டுப் புள்ளிகளை மாணவர்கள் பெற முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

### மங்களவால்

இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

ஆனால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மங்களவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவாகக் கூடாது எனவும், பொது வேட்பாளரே நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியிருந்தார்.

இதனால் ஐ.தே.க., மங்கள உறவில் ஒரு விரிசல் ஏற்பட்டது.

அதனைச் சாதகமாகப் பயன்படுத்திய அரச தரப்பினர் அவரைத் தம்பக்கம் இழுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அரச தரப்பின் முக்கிய தலைவர்கள் நேரடியாக மங்கள சமரவீரவுடன் பேரம் பேசலை மேற்கொண்டனர்.

சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பியவுடன் மங்கள சமரவீர, அரச தரப்புடன் இணைந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாடு திரும்பிய மங்கள சமரவீர பொது எதிரணியின் மேடையில் நேற்றுத் தோன்றினார். இதன் மூலம் கட்சித் தாவல் வதந்திக்கும் அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். (ற-5)

### கத்தியால்

இருக்கும்போது குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

குறித்த நபர் தொடர்பான வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் வழக்கு விசாரணக்கு வந்தது. தன் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.மணி வண்ணன் மூலமாக, குறித்த இளைஞன் குற்றத்தை மேல் நீதிமன்றில் ஒப்புக் கொண்டான். அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று அவனுக்கு நேற்று முன்தினம் குறித்த தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தது. (ற-4)

### சுன்னாக

நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் சிறிது காலத்தில் படிப்படியாக சுன்னாகம் பிரதேசத்தின் அயற்பகுதிகள் முழுவதிலும் குடிதண்ணீருடன் ஒயில் கலக்கத் தொடங்கியது.

சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையத்திலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்திலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளது. அதனால் இதுவரையில் 568 கிணறுகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கழிவு ஒயில் குடிதண்ணீருடன் கலந்துள்ள பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண முடியாது என்று தெரிவிக்கும் துறைசார் அதிகாரிகள், இன்னமும் 12 வருடங்களுக்கு இந்தப் பிரச்சினை தொடரும் என்று கூறுகின்றனர். எனவே அவ்வளவு காலப் பகுதிக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ற-5)

### 25 ஆண்டுகளின்

பில் பணியாற்றிக்கொண்டிருந்த சமயத்தில் தனது 28ஆவது வயதில் அவர் காணாமற்போனார்.

காணாமற்போகும்போது 1991 ஆம் ஆண்டு கொழும்பு ஆமர் வீதியில் உள்ள கடையொன்றில் அவர் பணியாற்றி வந்தார். கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து அவர் காணாமல் போயிருந்தார் ஏன்று கூறப்படுகின்றது. ஆனால், அது தொடர்பிலான தெளிவான தகவல்கள் எதுவும் இல்லை.

அந்தக் காலப் பகுதியில் கொழும்பிற்கும் குடாநாட்டிற்கும் இடையிலான போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாக உறவினர்களால் அவரை உடனடியாகத் தேட முடியவில்லை. இங்கிருந்தபடியே அவரைத் தேட பெற்றோர்கள் எல்லா முயற்சிகளையும் செய்தபோதும் அவை பயனளிக்கவில்லை. அவர் காணாமற்போன ஏக்கத்திலேயே அவரது பெற்றோர் உயிரிழந்து விட்டார்கள்.

அவரது சகோதரர்கள் மட்டுமே இப்போது யாழ். மாவட்டத்தில் உள்ளனர். 25 வருடங்களாகிவிட்ட நிலையில் அவர்களும் வைரவநாதனை மெல்ல மெல்ல மறந்துவிட்டனர்.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை திடீரென ஒரு கடிதம் வைரவநாதனின் பெற்றோருக்கு முகவரியிடப்பட்டு வந்துள்ளது. எங்கு தேடியும் முகவரிக்குரியவர்களைக் கண்டறிய முடியாத நிலையில் பிரதேச கிராம அலுவலரின் உதவி நாடப்பட்டுள்ளது. அவரது முயற்சியின் பேரில் வைரவநாதனின் உறவினர்கள் கண்டறியப்பட்டு கடிதம் அவர்களிடம் சேர்ப்பிக் கப்பட்டது.

அந்தக் கடிதம் அம்பாந்தோட்டை நீதிமன்றில் இருந்து வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. அது தனிச் சிங்களத்தில் எழுதப்பட்டிருப்பதால் உறவினர்களால் அதனை வாசித்தறிய முடியவில்லை. சிங்களம் வாசிக்கக் கூடியவர்களின் உதவியுடன் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வைரவநாதனைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக் கூறப்படுகின்றது.

இந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவையா? வைரவநாதன் இன்னமும் உயிருடன் தான் இருக்கிறாரா? போன்ற விடயங்கள் தெளிவாக இல்லாபோதும் உண்மையை அறிவதற்கும், கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் அவர் அம்பாந்தோட்டையில் இருந்தால் அவரை மீட்டு அழைத்து வருவதற்கும் உறவினர்கள் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் உதயன் அறிந்தது. இதற்கான செலவுகளுக்காக சில சமூக ஆர்வலர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் உண்மையாக இருந்து வைரவநாதன் மீட்கப்பட்டால், காணாமற்போன மற்றும் பலரும் இப்படி எங்காவது உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்கள் இருக்கக்கூடும் என்று காணாமற்போனோர் விவகாரத்தில் அக்கறையுள்ளவர்கள் கூறுகின்றனர். எனவே வைரவநாதன் தொடர்பிலான உண்மையைக் கண்டறிவது மிக முக்கியமானது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

வடக்கில் இறுதிப் போரின் போதும் அதற்கு முன்னரும் பல நூற்றுக்கணக்கானோர் காணாமற்போயிருக்கின்றனர். (உ-86)

### முன்னாள்

வாழ்வு வழங்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் அறியமுடிகின்றது.

நகுலேஸ்வரனின் மனைவி ஆசிரியையாவார். இரு பிள்ளைகளும் உள்ளனர். தமக்குக் கிடைத்த இந்திய வீட்டுத் திட்ட வீட்டுக்காகக் கல் அரிந்து கொண்டிருந்த சமயமே இந்தச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிலங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-4)

# சாட்சியமளிப்போரை அரசு ஏன் கைது செய்கிறது?

## நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார் பொன். செல்வராசா எம்.பி.

கொழும்பு, நவ. 13

இறுதிக்கட்டப் போரின் போது அரசும் இராணுவமும் நேர்மையாக நடந்திருந்தால் இப்போது ஐக்கிய நாடுகளின் சர்வதேச விசாரணைக்கு தடை விதிப்பது ஏன்? சாட்சியமளிப்போரைக் கைது செய்வது ஏன்? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது இடம்பெற்ற 2015 ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலைவிவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைகள் பேரவையால் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்டுவரும் சர்வதேச விசாரணை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு இடையூறாக இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை சாட்சியமளிக்க ஆர்வமுள்ளோருக்கு தடை விதித்தல் மற்றும் சாட்சியாளர்கள் கைது செய்யப்படுதல் தொடர்பில் பேரவையின் உயர்ஸ்தானிகர் விமர்சனமும் விசனமும் வெளியிட்டுள்ளார். இலங்கை மீதான சர்வதேச விசாரணை விடயங்களில் இலங்கை அரசு - இவ்வாறு செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இறுதி உள்நாட்டுப் போரில் இலங்கை அரசும் இராணுவமும் நேர்மையாக நடந்திருந்தால் சாட்சியாளர்களை ஏன் கைது செய்ய வேண்டும்? சாட்சியங்கள் வழங்குவதற்கு ஏன் தடை விதிக்க வேண்டும்? விசாரணைகளுக்கு ஏன் இடையூறு விளைவிக்க வேண்டும்-

இலங்கை மீது சர்வதேசம் விமர்சனங்களை முன் வைத்து வருகின்றது. இவ்வாறு உலகின் பல நாடுகளும் விமர்சனங்களைமுன்வைத்து வரும்போது அதன் மூலம் இலங்கைக்கு அவப் பெயரே ஏற்படுகின்றது.

எனவே இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைகள் பேரவையினது சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கின்றேன்"- என்றார். (வ-10)

# மலையகப் பாடசாலைகள் இரண்டில் நாவலர் திருவுருவச் சிலைகள் திறப்பு

நாவலப்பிட்டி, நவ.13

நாவலர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மலையகத்தில் மேலும் இரண்டு முன்னணிப் பாடசாலைகளில் நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரீல்ஸ்ரீ ஆறுமுக நாவலரின் திருவுருவச் சிலைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

நாவலப்பிட்டி கதிரேசன் இந்துக் கல்லூரியில் நாளை காலை 8 மணிக்கும், கொட்டகலை மகா வித்தியாலயத்தில் நண்பகல் 12 மணிக்கு சிலை திறப்பு விழா நிகழ்வுகள் இடம் பெறும். இந்த நிகழ்வுகளில் நாவலர் நற்பணி மன்றத்தின் நிறுவுநர் தலைவர் கருணை ஆனந்தன், அந்த அமைப்பின் உப தலைவர் எஸ்.புண்ணியசீலன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். மூன்று வாரங்களுக்கு முன்னர் மாத்தளையிலுள்ள மூன்று முன்னணித் தமிழ்ப் பாட சாலைகளில் நாவலர் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் நடவடிக்கைகளை நாவலர் நற்பணி மன்றம் முன்னெடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் இன்னும் சில முன்னணிப் பாடசாலைகளில் நாவலர் திருவுருவச் சிலையை தாபிக்கும் ஏற்பாடுகளை மன்றம் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ)








யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தால் தருவிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கைச் சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுத் திருநெல்வேலியில் உள்ள சமாச அலுவலகத்தில் தலைவர் இ.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.
யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் விவசாயி ஒருவருக்கு விதை உருளைக் கிழங்கை வழங்கி இதனை ஆரம்பித்து வைத்தார். யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், பிரதி விவசாயப் பணிப்பாளர் கே.ஸ்ரீபாலசுந்தரம், விவசாய திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் ஆர். சௌந்தரராஜன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-17)

# ஆசிரியர் சேவைத் தரம் 3 இற்குள் உள்வாங்கி சம்பளம் வழங்குங்கள்

## ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13
15 வருடங்களுக்கு மேலாக வன்னியில் கற்றலில் ஈடுபட்டு ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள தமது அவல நிலை தொடர்பில் ஆராய்ந்து சம்பளத்தை அதிகரித்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3 -11 இற்குள் உள்ளீர்க்க இன்று நடைபெறும் வடமாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறு கோரப்பட்டுள்ளது. வன்னி ஆசிரிய உதவியாளர்கள் ஒன்றியம் இவ்வாறு கோரியுள்ளது.
இது தொடர்பில் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வன்னிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போர்க் காலங்கள் உட்பட கடந்த 15 வருடங்களுக்கு மேலாகத் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வந்தோம். வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டபோதும் நாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டோம்.
2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனத்தின் போதுகூட வன்னியைச் சேர்ந்தவர்களுக்கு நியமனம் வழங்காது புறக்கணிக்கப்பட்டிருந்தோம். அதன் பின்னர் ஆசிரியர் நியமனத்தை வழங்குமாறு கோரி வந்த நிலையில் கடந்த ஜூலை முதலாம் திகதி ஆசிரிய உதவியாளர் நியமனம் கிடைத்தது. மாதச் சம்பளமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. அது போதாமையால் பாதிக்கப்பட்டு வருகின்றோம்.
வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் அரச ஊழியர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளமாக 15 ஆயிரம் ரூபாவும் உதவுதொகையும் சேர்த்து மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் பெறும் நிலையில் எமக்கு வழங்கப்படும் சம்பளம் போதாமலுள்ளது.
எமக்கு வாழ்க்கைப் படியும் இல்லை. ஆனால் கிராமங்களில் வழங்கப்படும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் போன்ற நலத்திட்டங்கள் வழங்கப்படும் போதுகூட நாம் அரச ஊழியர்கள் என்றுகூறி எமக்கு அவை வழங்கப்படுவதில்லை. சுமார் 600 பேர் கொண்ட எமக்குத் தீர்வுதான் என்ன?
அரச நிறுவனங்களில் தற்காலிக ஊழியர்களாக 6 மாதங்கள் பணிபுரிந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ள நிலையில், எமக்கு ஏன் நியமனம் வழங்கத் தாமதம்?
இன்று நடைபெறும் கூட்டத்தில் இது தொடர்பாகக் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுத் தருமாறு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் அதிகாரிகளைச் சங்கம் கோருகிறது-என்றுள்ளது. (த-4)

# இடமாற்றங்களைத் தடுக்காதீர்

## ஆளுநர், பிரதம செயலாளர் ஆகியோரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13
2005 ஆம் ஆண்டு வெளிமாவட்டங்களில் நியமனம் பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படாததோடு, அதற்குக் கடந்த ஏப்ரலிலிருந்து தடை விதித்து வரும் வடக்கு மாகாண ஆளுநரும், வடமாகாணப் பிரதம செயலாளரும் இனிமேலாவது இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று உத்தியோகத்தர்கள் கோரியுள்ளனர்.
இது தொடர்பில் வெளிமாவட்டங்களில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வெளிமாவட்டங்களில் நியமனம் பெற்று எதிர்வரும் ஜனவரியுடன் 10 வருடங்களாகின்றன. பொதுவாக நாம் 5 வருடங்கள் ஒரே அலுவலகத்தில் பணிபுரிந்தால் இடமாற்றம் பெறுவதற்கான தகுதியைப் பெறுகின்றோம். அதற்கான காலப்பகுதியை நாம் நிறைவு செய்துள்ளோம். இதனையடுத்து இரண்டு தடவைகள் இடமாற்றத்துக்கு நாம் விண்ணப்பித்தோம். ஆனால் அவர்கள் அதனை வழங்கவில்லை. கடந்த ஏப்ரலில் எமக்கு வழங்கப்படவிருந்த இடமாற்றம் சில காரணங்களைக் கூறி வடமாகாண ஆளுநரால் இடைநிறுத்தப்பட்டது. இடமாற்றத்தைப் பதில் ஒழுங்குகள் இன்றிச் செய்ய முடியாது. 2015 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் இடமாற்றம் செய்வதாக அவர் கூறியிருந்தார். ஆனால் உரிய அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இன்றுவரை இடமாற்றத்துக்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று தெரியவந்துள்ளது.
போர்க் காலத்தில் அதற்கு முன், பின்னான காலத்தில் கடினமான போக்குவரத்துக்கு மத்தியில் வெளிமாவட்டங்களுக்குச் சென்று பணியாற்றி வந்தோம். அதேநேரம் எம்முடன் சம காலத்தில் யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற அதிகாரிகள் இன்றுவரை யாழ்ப்பாணத்திலேயே கடமையாற்றுகின்றனர். எமக்குப் பதிலாக அவர்களை இடமாற்றம் செய்வதில் வடமாகாணப் பொது நிர்வாக செயலக அதிகாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். எனவே உரிய அதிகாரிகள் எதிர்வரும் ஜனவரிக்குள் எம்மை இடமாற்றம் செய்யவேண்டும்-என்றுள்ளது. (த-4)

# சீன நீதிபதிகள் குழு ஹக்கீமுடன் சந்திப்பு



நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீமுக்கும் சீன உயர்நீதிமன்றத்தின் நிறைவேற்று உதவித் தலைவர் நீதியரசர் ஷென் டியோங் தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய உயர் தூதுக் குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது.
நீதியமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது நாட்டில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளோடு இணைந்ததாக நீதித்துறையும் முன்னேற்றம் கண்டு வருவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.த-10)


## சவூதி ராஜ்யத்தில் உடனடி வேலை வாய்ப்பு

சவூதி ராஜ்யத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| Category | Salary |
|---|---|
| Baladiya Driver | 1000+200+OT (First time driver) |
| Cleaner | 800+OT |
| Electrician | 1600+OT |
| Meason | 1500+OT |
| Painter | 1500+OT |

| Category | Salary |
|---|---|
| Cook | 1485+Food+OT |
| Tailor | 1300+200+OT |

அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம். கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்.
(வங்கிக் கடன் செய்து கொடுக்கப்படும்)
**Arabian Gulf Enterprises**
No: 72/26, Srisangaraja Mawatha, Colombo-10.
Licence No: SLBFE. Reg. 969
உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் ஒரு மணிவரை இல.26/2, ஸ்ரேசன் வீதி, வவுனியா. லங்கா வொய்சில் ஏற்றுக்கொள்ளப்படும்.
(C/17638)(10.6.3)
வவுனியாவில் தொடர்புகொள்ள:
LANKA VOICE - 0777 929 475


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 10 . 1976
மறைவு 13 . 10 . 2013

### அமரர் சிவகுமார் ராகவன்

புன்னகை பூத்த முகமும் குடும்பத்தை நேசிக்கும் குணமும்
நட்புப் பாராட்டும் தன்மையும் கொண்ட தங்கள் முகம்
பார்க்காது உள்ளம் வாடுகிறதே!
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர்
ஓராண்டு சென்றாலும் ஈரவிழி காயவில்லை ஏனோ
இறைவன் இடை நடுவில் பறித்து விட்டான் அதனால்
ஏங்குகின்றோம் தினமும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
சி.தினேஸ் (சகோதரன்)
T.P.No: 077 6033 491
'துவாரகா', மூளாய், சுழிபுரம்.
(54052)(10.6)

## மரண அறிவித்தல்



### வைரமுத்து கணபதிப்பிள்ளை

(உரிமையாளர் - கங்கேஸ்வரன் ஸ்ரோஸ், கச்சேரி முன்பாக A9சாலை, கிளிநொச்சி)

அத்துளு அம்மன் கோயிலடி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், 1028, திருநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கணபதிப்பிள்ளை 10.11.2014 கொழும்பில் காலமானார்.
அன்னாரின் **இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

1028, திருநகர்,
கிளிநொச்சி.
(சி.17639)
(45.6.3)
தகவல்:
குடும்பத்தினர்.


## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மா[illegible] வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 15.11.2014 சனி
பிரிவு 1. காலை 10.00-12.00 பிரிவு 2. மாலை 3.00-05.00
செவ்வாய், வியாழன் பிரிவுகள் ஆரம்பம் - 18.11.2014
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00
முன்பதிவு செய்தல் அவசியமானதாகும்! ஒவ்வொரு பிரிவிலும் 22 மாணவர்கள் மட்டும்
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்
077 621 4567
021 320 3313


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கமலாசனி சூரசங்காரன்

(தலைவி-திவ்ய ஜீவன சங்கம்-யாழ்ப்பாணம்)



எம்மையெல்லாம்
ஆன்மீக வழியில்
வழி நடத்தி குருதேவர்
சிவானந்தரின்
பாதங்களில் சரணடைந்த
அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

திவ்ய ஜீவன சங்கத்தினர்
சட்டநாதர் கோயிலடி, நல்லூர்
(54065)
(10.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.